# வரலாற்று வஞ்சி

முனைவர் **க.த.திருநாவுக்கரசு**
M.A., (Tamil), M.A., (History), M.Litt., Dip.Ing., Phd.,

வெளியீடு

**மணியகம்**
3/30, இரண்டாவது பிரதான சாலை,
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்,
சென்னை - 600 085.
செல் : 9444453737

# வரலாற்று வஞ்சி

முனைவர்
**க.த.திருநாவுக்கரசு**

வெளியீடு :
மணியகம்
3\30, இரண்டாவது பிரதான சாலை
கோட்டூர்த் தோட்டம், கோட்டூர்புரம்
சென்னை - 600 085
9444453737

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வரலாற்று வஞ்சி |
| பொருள் | : | வரலாற்றுக் கட்டுரைகள் |
| ஆசிரியர் | : | முனைவர். க.த. திருநாவுக்கரசு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு - அக்டோபர் 2024<br>முதற்பதிப்பு - பிப்ரவரி 1977 தமிழ்<br>எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் ஓ47. சென்னை - 5 |
| நூலின் அளவு | : | 1/8 டெமி |
| பக்கங்கள் | : | 160 |
| தாள் | : | 80 GSM Maplitho |
| எழுத்துரு | : | ATM111 pt 12 |
| வெளியீடு | : | மணியகம் பதிப்பகம்,<br>3/30, இரண்டாவது பிரதான சாலை,<br>கோட்டூர் தோட்டம், கோட்டூர்புரம், சென்னை – 6000085<br>9444453737, tambalavanan@gmail.com |
| உரிமை | : | பதிப்பகத்திற்கே |
| விலை | : | இலவச வெளியீடு |
| எண்ணிக்கை | : | 25 புத்தகங்கள் |
| அச்சகம் | : | அரசு ஆர்ட்ஸ்<br>78, சீனிவாசபெருமாள் சன்னதி முதல் தெரு,<br>இராயப்பேட்டை, சென்னை – 600 014<br>004-28351101, 28588056 E-Mail:arasuarts@gmail.com<br>www.arasuarts.com |
| ISBN | : | 978-93-48345-63-9 |

# முதற் பதிப்பு முன்னுரை

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வெளியீடான தமிழுறவு வரிசையில் வரலாற்று வஞ்சி என்ற இந்தக் கட்டுரைத் தொகுப்பு நூல் எண்பத்தெட்டாவது நூலாக வெளிவருகிறது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இணைப் பேராசிரியராய்த் தொண்டு செய்யும் திரு.க.த.திருநாவுக்கரசு அவர்கள் இந்நூலாசிரியர். அவரைத் தமிழறிஞர் நன்கு அறிவர்.

'இந்தியருக்கு வராற்றுணர்வு இருந்ததில்லை' என்பது பொதுவான ஒரு குற்றச்சாட்டு. இக் கூற்றிலே பேரளவிற்கு உண்மை உண்டு. கால வரன்முறைப்படி முறையாக வரலாற்று நூலை எழுதும் பழக்கத்தை நம் முன்னோர்கள் மேற்கொள்ளவில்லை. எனவே, மேற்கண்ட கூற்றினை மறுக்கமுயல்வதால் யாதொரு பயனும் விளையாது.

'வரலாற்றை, ஏன் ஒரு தனிக் கலையாக நம் முன்னோர்கள் போற்றி வளர்க்கவில்லை?' எனும் ஐயம் எல்லாத் தமிழருக்கும் உண்டு. பாட்டியல் நூல்களில் வரலாற்று வஞ்சி என்னும் சிற்றிலக்கியம் பற்றிய செய்திகள் உள்ளன. அவற்றைத் தொகை வகைப்படுத்தி இந்நூலாசிரியர் வரலாற்று வஞ்சி என்னும் முதல் கட்டுரையின் மூலம் தெளிவுறுத்தியுள்ளார். பண்பாட்டின் சிறப்பியல்புகள் வரலாற்றுக் குறிப்போடு இழையொடுகின்றன.

தமிழக வரலாற்றின் சிக்கல்கள் சிலவற்றிற்கு இந்நூல் புத்தொளி வழங்கக் கூடும். மற்றும், நம் நாட்டு வரலாற்றின் போக்கைப் புரிந்துகொள்ள இந்நூல் ஓரளவிற்கு உதவுமெனவும் கருதுகின்றோம்.

தமிழகம் இந்நூலை ஆதரிக்குமென்று நம்புகிறோம்.

20-2-77

தமிழுறவாளர்

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| *1.* | *வரலாற்று வஞ்சி* | *5* |
| *2.* | *தமிழக வரலாற்றின் படிப்பினைகள்* | *9* |
| *3.* | *இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாடு* | *16* |
| *4.* | *சோழர் காலத்திய சமுதாய அமைப்பு* | *51* |
| *5.* | *தமிழகத்தின் இசைக்கருவிகள்* | *61* |
| *6.* | *தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பல்லவர் காலத் தமிழர் நாகரிகம்* | *89* |
| *7.* | *வரலாறு புகட்டும் பாடம்* | *96* |
| *8.* | *தமிழகத்தின் ஆண்டுக் கணக்கு முறை* | *109* |
| *9.* | *புதுக்கோட்டைத் தொண்டைமான்கள்* | *120* |
| *10.* | *நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு* | *136* |
| *11.* | *ஆசிரியரின் பணி* | *137* |
| *12.* | *ஆசிரியரின் நூல்கள்* | *138* |
| *13.* | *ஆசிரியரின் தமிழ்க் கட்டுரைகள்* | *142* |

# 1
# வரலாற்று வஞ்சி

வரலாறு, கடந்த காலத்தின் கன்னி; நிகழ்காலத்தின் மனைவி; வருங்காலத்தின் தாய். அவளுடைய கன்னிப்பருவத்தின் இன்பக் கனவுகளையும் எழில்மிகு கற்பனைகளையும் எடுத்தியம்புவதே இலக்கியம்.

## வரலாறு-அன்றும் இன்றும்

போர்வெறி கொண்ட சிலர், வீரத்தின் பெயரால் போர்க்களத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலியிட்ட துன்பக் கதையினைக் கூறுவதுதான் வரலாறு என்று கருதிய காலம் மாறிவிட்டது. உலகின் பல பகுதிகளில் வாழ்ந்த பெருந்திரளான மக்கள், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குச் சென்று குடியேறிய கதையும் செந்நீரை வேர்வையாக்கி, அல்லும் பகலும் அரும்பாடுபட்டு, மக்கள் உழைத்துப் பெற்ற செல்வத்தைக் குறுநில மன்னவர்கள் கொள்ளையிட்டதுதான் வரலாறு என்று நம்பி வந்த காலம் மறைந்துவிட்டது. அரசர்களின் அந்தப்புரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான ஆரணங்குகள், கற்பழிக்கப்பட்ட தொடர் கதையே 'வரலாறு' என்று போற்றிய காலம் போய்விட்டது.

'கடந்த காலமெனும் எல்லையில்லாப் பெருவெளியில் காலத்தச்சன் கட்டியுள்ள அனுபவமெனும் மாபெரும் கோபுரமே வரலாறு. 'இப்பழம் பெரும் கோபுரத்தின் கொடுமுடியில் ஏறி, அங்கிருந்து அப்பெருவெளியின் முழுத் தோற்றத்தைக் காண முயல்வது எளிய செயலன்று என்பது இன்றைய அறிஞர்கள் வரலாற்றைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தாகும்.

எனவே நாம், மக்களினம் நினைவுக்கு எட்டாத தொல் பழங்காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்றுவரை அடைந்துள்ள வெற்றி, தோல்விகளையும், பெருமை, சிறுமைகளையும், வாழ்வு, தாழ்வுகளையும், இன்ப துன்பங்களையும், எழுச்சிகளையும், ஏமாற்றங்களையும் சுவையொடு முறையாகக் கூறும் மக்களினத்தின் கதையே 'வரலாறு' எனலாம்.

## இந்தியரும் வரலாற்றுணர்வும்

உலகிலுள்ள பல நாடுகளுக்கும், பல்வேறு மொழி பேசும் மக்களுக்கும் தனித்தனியான வரலாறுகள் இருக்கின்றன. ஆனால், நம் நாட்டில் வரலாற்றைப் போற்றிக் குறித்து வைக்கும் வழக்கம் இசுலாமியர் வருகைக்கு முன்பு இருந்ததில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுவர்.

இந்திய நாடு பல்வேறு கலைகளைப் பன்னெடுங்காலமாகப் போற்றி வளர்த்து வருகிறது. ஆனால், அது வரலாற்றுக் கலையினைப் போற்றி வளர்க்கத் தவறிவிட்டது. கிரேக்க நாட்டின் மாண்புமிக்க ஹெரடோடசையும் தூசிடைடசையும் போன்றோ, ரோமாபுரியின் லிவியையும், டாசிடசையும் போன்றோ, சீனாவின் சூ-மா-சின்னைப்போன்றே நம் நாட்டில் வரலாற்றாசிரியர்கள் ஒருவரும் பண்டைக் காலத்தில் தோன்றவில்லை என்பதை நாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

'வரலாறு' என்பது தற்காலப் பொருள் நலம் உடையதாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் வளர்ச்சியுற்றது என்பது உண்மை. எனினும், பண்டை உலகின் பல்வேறு பகுதிகளைச் சார்ந்த நாடுகள், வரலாற்றுக் குறிப்பேடுகளையும், காலவழிச்செய்திக் கோவைகளையும், ஓரளவிற்கு வரலாற்றுச் சார்புடைய இலக்கியங்களையும் படைத்து மகிழ்ந்தபொழுது, நமது நாடு வெளிப்படையாகவே வரலாற்றுக் கலையைப் புறக்கணித்து வந்திருப்பதை நாம் காணுகின்றோம். 'தனித்தனி மாந்தரின் பிறப்பு, நாள், நாழிகை முதலியவற்றைக் குறித்து வைக்கும் பழக்கம் உள்ள நாட்டில், நாட்டின் பொதுவான வரலாற்றைக் குறிக்கும் பழக்கம் இல்லாதிருந்தது வருந்தத்தக்கது' என்று டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் மொழிந்துள்ளமை இங்கு கருதத் தக்கதாகும்.

இந்தியருக்கு வரலாற்று உணர்ச்சி இல்லாமல் போனமைக்குப் பல காரணங்கள் காட்டப்பட்டுள்ளன. எனினும், அவை முற்றிலும் பொருத்தமானவையாகத் தோன்றவில்லை.

## வரலாற்று வஞ்சி

பண்டைத் தமிழ் மக்கள் இடைக்காலத்தில் போற்றி வளர்த்த இலக்கிய மரபுகள் பல. அவற்றைப் பொதுவாக நாம் சிற்றிலக்கியங்கள் அல்லது பிரபந்தங்கள் எனக் குறிப்பிடுகிறோம். அவை 96 வகைப்படும் என்பர். அவற்றுள்ள வரலாற்று வஞ்சி என்று ஒரு சிற்றிலக்கிய வகை பேசப்படுகிறது. அதனுடைய பெயரே, அவ்விலக்கியம் வரலாற்றுத் தொடர்பானது என்பதையும், வஞ்சிப்பாவினால் இயற்றப்படுவது என்பதையும் தெரிவிக்கிறது.

**குலமுறை கீர்த்தி பிறப்போடும் வஞ்சிச்**
**சொலல் வரலாற்று வஞ்சி**

என்பதனால் அரசருடைய மரபின் தோற்றமும் பெருமையும் அம்மரபில் தோன்றிய மன்னர்களின் மிக்க புகழையும் அவர்கள் பிறந்த ஆண்டு, அரசு கட்டிலேறி ஆட்சிபுரிந்த இன்னபிற செய்திகளையுமெல்லாம் வஞ்சிப்பாவினால் எடுத்தியம்புவது 'வரலாற்று வஞ்சி' என்பது பெறப்படுகிறது.

*சிதம்பரப் பாட்டியல்*
*வரலாற்று வஞ்சிபல வரலா றேதல்* (நூ.13)

என்று கூறுகிறது. அரசருடைய குடிச்சிறப்பு, கல்வி, வீரம், கொடை, கலைத்திறன், வெற்றிச்சிறப்பு முதலிய பல வரலாறுகளை எடுத்துச் சொல்லுவது வரலாற்று வஞ்சி என்பது இதன் பொருளாகும்.

தமிழில் முதன்முதல் இயற்றப்பட்ட அகராதியான சதுரகராதியில், 'குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையும் கீர்த்தியையும் வஞ்சிப்பாவால் கூறுவது வரலாற்று வஞ்சி' என்று விளக்கம் தரப்பட்டுள்ளமையும் இங்கே கருதத்தக்கது.

இதனை மிகத் தெளிவாகச் சென்ற நூற்றாண்டில் தோன்றிய முத்துவீரியம் எனும் இலக்கண நூல்,

**விழுமிய குலமுறை பிறப்புமேம் பாட்டின்**
**பலசிறப் பிசையையும் வஞ்சிப் பாவால்**
**வழுத்தல் வரலாற்று வஞ்சியா மென்பர் –** (யாப்பு.111)

என்று அறிவிக்கிறது.

இத்தகைய இயல்புகள் வாய்ந்த இலக்கியம் இன்றைக்கு நமக்குக் கிடைக்கவில்லை. எனினும், இந்நூற்பாக்களால், அவ்விலக்கண நூற்கள் இயற்றப்பட்ட காலத்தில் 'வரலாற்றினை' வஞ்சிப்பாவினால் பாடும் வழக்கம் இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகிறது. தமிழன் பொருள்களைப் போற்றி வாழாமையால் இழந்துவிட்ட பெருமைகள் பல. அவற்றுள்ள 'வரலாற்று வஞ்சி'யும் ஒன்று என்று வருத்தத்தோடு குறிப்பிட வேண்டியிருக்கிறது.

'வரலாற்று வஞ்சி' என்ற இலக்கியம்பற்றி நமக்குக் கிடைத்துள்ள குறிப்புகளினால், இடைக்காலத் தமிழறிஞர், அரசமரபுகளின் வாழ்வையும் வரலாற்றையும் போற்றி நூலாக எழுதிப் பேணிக்காக்க முயன்றிருக்கிறார்கள் என்பது தெரியவருகிறது. எனவே, தமிழனும், அவனால் இயன்ற அளவிற்கு வரலாற்று உணர்ச்சி உடையவனாக வாழ முயன்றிருக்கிறான் என நாம் கூறலாம்.

# 2

# தமிழக வரலாற்றின் படிப்பினைகள்

கடந்த காலம் நிகழ்காலத்தின் அடிப்படை: நம்மை எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் நல்லதொரு வழிகாட்டி, கடந்த காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் காலக் கண்ணாடி வரலாறு. பன்னெடுங்காலமாகச் சேகரிக்கப்பெற்ற 'அறிவுச் சுடர்கள்' வரலாற்றேடுகளில் செறிந்து காணப்படுகின்றன. அவற்றால், நாம் பெரும் நன்மை அடையலாம். நிகழ்காலத்தினை நன்கு அறிந்து பொற்றுவதற்குக் கடந்த காலத்தைப் பற்றிய தெளிவான அறிவு இன்றியமையாததாகும். நிகழ்காலம் பலவகையில் இறந்த காலத்தின் தொடர்ச்சியாகவே தோன்றுகிறது. இதனால், வரலாறு நிகழ்காலத்தின் நம்பிக்கைக்குரிய வழிகாட்டியாக விளங்குகிறது.

## வரலாற்றின் இயல்பு

வரலாறு, மக்களுடைய வாழ்க்கை கடந்த காலத்தில் எப்படி இருந்தது என்பதை விளக்குமே ஒழிய, இப்பொழுது எவ்வாறு இருக்கிறது? அல்லது கடந்த காலத்தில் அது எவ்வாறு இருந்திருக்க வேண்டும்? என்பதை எடுத்துரைக்காது. ஆயினும், வரலாறு கற்பிக்கும் படிப்பினையும், உணர்த்தும் அறநெறியும், புகட்டும் அறிவுரையும் இன்றைய சமுதாய வாழ்வில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுகின்றன.

வரலாறு என்பது ஒரு பெருங்கடல். அக்கடலில் தோன்றி மறையும் 'நாகரிகம்' என்னும் அலைகள் எண்ணிறந்தன. அந் நாகரிக அலைகள் காலமெனும் கரையோரத்தில் கொண்டுவந்து ஒதுக்கியுள்ள படிப்பினைகள் எனும் மணிகள் பல. அவை உலகம் உள்ளளவும் மங்காமல் ஒளி வீசி, மன்பதையை மாண்புறச் செய்யும் ஆற்றல் உடையன.

தமிழக வரலாறு உணர்த்தும் படிப்பினைகள் பல. அவற்றுள் முதன்மையானவற்றை – இன்றைய தமிழருடைய வாழ்க்கையின்

நலிவுகளையும். கேடுகளையும் போக்குவதற்கும் நீக்குவதற்கும் அருமருந்தாகப் பயன்படத்தக்கவற்றை இங்குக் காணலாம்.

**வரலாற்றின் படிப்பினைகள்**

தமிழரிடத்தில் தொன்றுதொட்டு ஒற்றுமையின்மையும் போலித் தன்மானமும் அளவுக்குமீறி இருந்து வருகின்றன. அது நாட்டினுடைய – தமிழினத்தினுடைய நல்வாழ்வைக் கெடுத்துவிட்டதைச் சரித்திரம் பேசுகிறது. நாட்டிலே பல்குழுவும், பாழ் செய்யும் உட்பகையும் தோன்றி நாட்டைச் சீர்குலையச் செய்தன. இன்றைய தமிழகமும் இதற்கு விதிவிலக்கன்று. இயல்பாகத் தமிழரிடையே ஒற்றுமைப் பண்பு வளராததற்குக் காரணம் நாட்டின் நலன் கருதாத – பெரும்பான்மை மக்களுடைய பொதுநலத்தைக் கருதாத – போலித் தன்மானமேயாகும். அப்போலித் தன்மானந்தான் தொண்டர்களாக இருந்து அமைதியாக அன்புப்பணி செய்வதில், அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்துமாறு தூண்டாமல், தலைவர்களாக வீறுகொண்டு விளங்க வேண்டும் என்னும் பதவி வேட்கையைப் போற்றி வளர்த்து வருகிறது. இவ்வுண்மையைச் சங்க காலத்திய அரசியல் வரலாறு மட்டும் அல்லாமல், இவ்விருபதாம் நூற்றாண்டின் தமிழக அரசியல் வரலாறும் எடுத்தியம்புகின்றன.

அன்றைய தமிழகத்தில் முடியுடை மூவேந்தர்களுக்கும், குறுநில மன்னர்களுக்கும் இடையே ஓயாது நடந்த போர்களுக்குத் தமிழருடைய உள்ளார்ந்த உணர்வாக இருந்துவரும் ஒற்றுமையின்மையும், போலித் தன்மானமும்தான் காரணமாக அமைந்தன. தமிழருடைய நல்வாழ்விலும் முன்னேற்றத்திலும் கருத்துடையனவாகக் கூறப்படும் அரசியல் கட்சிகள் மிகப் பலவாகத் தோன்றுவதற்கும் இவையே காரணமாகும்.

எனினும், அத்தி பூத்ததைப் போன்று தமிழகத்தின் தலைவர்கள் சிற்சில சமயங்களிலே தங்களுக்கு இடையேயுள்ள பகைமையையும், காழ்ப்பையும் மறந்து நாட்டின் பொதுநலத்தில் நாட்டம் உடையவர்களாக ஒன்றுபட்டு, ஒரு கூட்டணி அமைத்துப் பகைவர்களை எதிர்த்துப் போராடியும் உள்ளனர் என்பதை வரலாறு நமக்கு எடுத்துரைக்கிறது.

கி.மு.இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழக வேந்தர்கள் ஒரு கூட்டணி அமைத்து, வேங்கடத்திற்கு வடக்கே ஒரு மாபெரும் படையை நிறுவி அயலார் படையெடுப்பிலிருந்து தமிழகத்தைக் காத்து வந்தனர் என்றும், அப்படையினை எதிர்த்துப் போரிட்டு வெற்றி பெறத் தம்மால் இயலாமற் போயிற்று என்றும் கலிங்க நாட்டை ஆட்சி புரிந்த காரவேலன் (கி.மு.156-172) எனும் அரசன் தன்னுடைய 'அதிகும்பா' கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளான். அக் கல்வெட்டில் தமிழக வேந்தர்கள் அமைத்திருந்த கூட்டணியை 'திரமிள தேச சங்காதம்' எனும் தொடரினால் அவ்வரசன் குறிப்பிட்டிருப்பது சிறப்புடையதாகும். இத்தொடருக்குத் 'தமிழக வேந்தரின் கூட்டணி' எனப் பொருள் கூறுவர்.

அதனால், தமிழர்கள் ஒற்றுமையுடன் ஒரு கூட்டணி அமைத்துப் பகைவர்களிடமிருந்து தமிழகத்தைக் காத்தனர் என்பது தெரியவருகிறது. இதற்குப் பிறகு வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டணி, அண்மைக் காலம் வரை அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமிழர்கள் ஒற்றுமையோடு செயலாற்றத் தொடங்குகிற பொழுது மாபெரும் வெற்றி பெறுகின்றனர் என்பதனை வரலாறு அறிவுறுத்துகிறது. எனவே,

**வெள்ளம்போல் தமிழர் கூட்டம்**
**வீரங்கொள் கூட்டம், அன்னார்**
**உள்ளத்தால் ஒருவரே, மற்று**
**உடலினால் பலராய்க் காண்பார்**
**கள்ளத்தால் நெருங்கொணாதே,**
**எனவையம் கலங்கக் கண்டு**
**துள்ளும் நாள்.................**

தமிழகத்தின் பொன்னாள் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தமிழ்ப் பண்பாடு இன்று நின்று நிலவி வரும் உலகப் பண்பாடுகளில் – நாகரிகங்களில் பழைமையானது மட்டுமன்று; இன்று வரை மனித இனம் உருவாக்கியுள்ள போற்றி வளர்த்துள்ள – நாகரிகங்களிலும், பண்பாடுகளிலும் சிக்கலானதும், பலவற்றை உள்ளடக்கியதுமாகும்.

உலகில் இதுவரை இருபத்து மூன்று நாகரிகங்கள் அரும்பியுள்ளன. அவற்றுள் சில மலர்ந்து உலகின் பல்வேறு பகுதிகளில் மணம் பரப்பின. ஆனால் அவை யாவும் இன்று நிலைத்து நிற்கவில்லை. அவற்றுள்ள 21 நாகரிகங்கள் வாடி, வதங்கி, உலர்ந்து உதிர்ந்து விட்டன. இன்றைக்குத் தொன்மைச் சிறப்பும், பொன்றாப் புகழும் உடையனவாய் நின்று நிலவி வருவன இரண்டு. ஒன்று இந்திய நாகரிகம், மற்றொன்று சீன நாகரிகம். இந்திய நாகரிகத்தினை உருவாக்கிய பண்பாடுகள் (cultures) பல! அவற்றுள்ள தமிழ்ப்பண்பாடு பழைமையானதும் முதன்மையானதுமாகும். இன்றைய இந்திய நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாட்டின் கூறுகள் மிகப் பலவாக உள்ளன. இதையே 'இன்றைய இந்திய நாகரிகத்தில், ஒரு ரூபாயில் பன்னிரண்டனாவிற்கு மேற்பட்ட அளவினதாகத் திராவிடப் பண்பாட்டின் கூறுகள் காணப்படுகின்றன' என்று மத்திய அரசு நிறுவிய சமஸ்கிருத மொழிக்குழுவின் தலைவரான டாக்டர் சுநித் குமார் சாட்டர்ஜி அவர்கள் தெரிவித்துள்ளார்.

இவ்விந்தியப் பண்பாட்டில் பல்வேறு வகைப்பட்ட நாகரிகங்களின் கலப்புகளும், இணைப்புகளும், பிணைப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன. அவற்றுள் முதன்மையானது தமிழ்ப்பண்பாடு என்பது தமிழக வரலாறு உணர்த்தும் உண்மையாகும்.

தீமையை எதிர்க்காமல், பிறர் இழைக்கும் தீமையைப் பொறுத்துக்கொள்ளும் போக்கு பன்னெடுங்காலமாகத் தமிழர் வாழ்வில் நிலவி வரும் ஒரு பண்பாகும். இன்றைக்கும் அதை நாம் தமிழருடைய பொதுவாழ்விலும் காணலாம். நாட்டிலே ஒரு நேர்மையற்ற செயல் (அநீதி) நடைபெற்றால், அதைக்கண்டு ஆந்திரர்கள் எதிர்ப்பு ஆரவாரம் செய்கின்றனர். மராட்டியர்கள் திட்டமிட்டு வீரவுணர்ச்சியோடு எதிர்த்துப் போராடுகின்றனர்; மற்ற மாநிலத்தவர்களும் தங்களுடைய எதிர்ப்பையும் உள்ளக் கொதிப்பையும் பல்வேறு செயல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். ஆனால், தமிழர்கள் மட்டும் 'நடப்பது நடக்கட்டும்' என்று பொறுமையுடன் துன்பத்தைப் பங்கிட்டுக் கொள்ளுகின்றனர். இதற்குக் காரணம் 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்ற கோட்பாடு தமிழருடைய இரத்தத்தில் நன்கு ஊறிப்போய்விட்டமையாகலாம்.

ஆனால், இன்றைய ஜனநாயக ஆட்சிக்காலத்தில், இத்தகைய மனப்போக்கு தேவையற்றது. தனிவாழ்வைக் காட்டிலும், பொதுவாழ்வில் பல துன்பங்களுக்கு இம்மனப் போக்குக் காரணமாக அமைகிறது எனலாம். இம்மனப் போக்கினால், தமிழருடைய வாழ்வில் கடந்த காலத்தில் உண்டான துன்பங்களையும், துயரங்களையும் நாம் அவ்வளவு எளிதில் புறக்கணித்து விடுவதற்கில்லை. இனியாகிலும் தீமையை எதிர்க்காமல், அதைப் பொறுத்துக்கொள்ளும் மனப்போக்கினை மாற்றிக்கொள்ளத் தமிழர்கள் முயலவேண்டும் என்பது தமிழக வரலாறு நமக்குக் கற்பிக்கும் பாடமாகும்.

பன்னெடுங்காலமாகத் தமிழ்ச் சமுதாயம் 'வேற்றுமைகளுக்கு இடையே ஒற்றுமை காண' முயன்று வருகிறது. பல்வேறு இனத்தைச் சேர்ந்த மக்கள் கடல் வழியாகவும், நில வழியாகவும் இந்நாட்டிற்குள், வரலாற்றின் தொடக்கக் காலத்திற்கு முன்பிருந்தே நுழைந்து வந்துள்ளனர். வந்தவர்களை வரவேற்று வாழ்வளித்தது தமிழகம். புதிதாக வந்தவர்களுக்கும் தங்களுக்கும் இடையே புறத்தே காணப்பட்ட வேற்றுமைகளை புறக்கணித்து, அகத்தே ஒளிவிட்டுவிளங்கும் 'ஆன்மநேய ஒருமைப்பாட்டை'ப் போற்றி வளர்த்தனர் தமிழர். இதனால்தான் தங்களுக்குள் எப்பொழுதும் ஒற்றுமையின்றிப் போரிட்டுக் கொண்டிருந்தபோதிலும், அயலாரை வரவேற்று வாழ்வளிப்பதில் அவர்கள் அளவு கடந்த ஆர்வம் காட்டினர். புறச் சமயத்தவர்களும் புதிய நாகரித்தினரும் தமிழகத்தில் செல்வாக்குடன் சீரும் சிறப்பும் பெற்றதற்குக் காரணம் தமிழரின் வேற்றுமைக்கு இடையே ஒற்றுமை காணும் விழுமிய நோக்கமும் தாம் வாழ்வதோடு பிறரையும் வாழவிட வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுமேயாகும். இதனால்தான் தமிழ்ப்பண்பாடு மாண்டு மறைந்து, 'பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போகாமல்' வாழும் பண்பாடாக உயிராற்றலுடன் விளங்க முடிகிறது.

தமிழருடைய நாகரிகம் நின்று நிலவி வருவதற்குரிய மற்றொரு சிறப்புமிக்க காரணம் வாழ்வின் எத்துறையிலும் நடுவழியைக் கடைப்பிடித்து வருவதாகும். பன்னெடுங்காலமாகத் தமிழ்ச் சமுதாயம் எத்துறையிலும் 'இரண்டு எல்லைகளுக்குப் (Extremes) போகாமல்' பெரும்பயன் விளையக் கூடிய

'நடுவழியை'க் கடைப்பிடித்து வருகிறது. எதிலும் அளவாக – மிதமாக- இருப்பது நல்வாழ்விற்குரிய நன்னெறியாகும். இன்ப துன்பங்கள், நன்மை தீமைகள், இல்லறம் துறவறம், ஆக்கம் அழிவு முதலிய பல்வேறு பகுதிகளிலும் நிலையான பயனையும், புகழையும் தரக்கூடிய செயல்களைச் செய்வதிலேயே தமிழ் மக்கள் கருத்தைச் செலுத்தி வந்துள்ளனர் என்பதை வரலாறு எடுத்தியம்புகிறது.

**நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்**

(புறம்-195)

என்பது பண்டைத்தமிழர் போற்றிய அறமாகும். பிறருக்கு நன்மை செய்ய இயலாவிட்டாலும் தீமை செய்யாமல் வாளா இருப்பது மாண்புமிக்க அறமாக அவர்கள் கருதினர். மனிதன் மனிதனாக வாழ்வதற்குரிய நல்லறமாகிய இதனை நடுவழி என்று சொன்னால் மிகையாகாது. இத்தகைய நடுவழியை வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் நம்முடைய முன்னோர் பின்பற்றினர்.

தமிழர்கள் உலகிற்கு அளித்த 'பக்தி நெறி' இந்நடுவழியைக் கடைப்பிடிப்பதாகும். இறைவனை அடையக் காட்டிற்குச் சென்று கடுந்தவம் புரிந்து, உடலை வருத்தித் துன்புற வேண்டியதில்லை. அரிய பல நூற்களைக் கற்று நாள்தோறும் அவற்றை ஓதி அல்லற்படத் தேவையில்லை. இறைவனை உள்ளத்தால் நினைந்து மனத்தினால் சிந்தித்து, வாயினால் வாழ்த்த வல்லார்க்கு வீடுபேறு எளிதில் கிடைக்கும் என்பதனை,

**ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு**
**உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து**
**தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டாம்.**

(திருமங்கையாழ்வார்)

என்று உலகிற்கு உணர்த்திய பெருமை தமிழரையே சாரும். அன்பினால் ஆண்டவனைப் போற்றி வழிபடும் பக்திநெறி கல்லார்க்கும் கற்றார்க்கும் கடைத்தேறுவதற்குரிய எளிய வழியாகவும் சிறந்த வழியாகவும் உள்ளதை மெய்யறிவாளர்கள் நன்குணர்ந்து போற்றுகின்றனர்.

இதைப்போன்று உலக வாழ்வின் பல்வேறு துறைகளிலும் நடுவழியைப் பின்பற்றி வாழுகின்ற மக்கள் சமுதாயமாகத் தமிழினம் இன்றும் இருந்து வருவதைக் காணலாம்.

இவை தமிழக வரலாறு புகட்டும் படிப்பினைகளுள் சில .இவற்றை நாம் புரிந்துகொண்டு வருங்காலத்தில் திட்டமிட்டுச் செயலாற்றுவோமானால், நம்மடைய நாகரிகமும் பண்பாடும் போன்றாப் புகழுடன் சிறப்புற்று விளங்க உதவியவர்களாவோம். இல்லையென்றால், 'மக்களினம் வரலாற்றிலிருந்து யாதொரு படிப்பினையையும் பெற்றுத் திருந்தியதாகத் தோன்றவில்லை'[1] என்ற ஹெகலின் கருத்தினை நாம் மெய்ப்பிப்பவர்களாவோம்.

1. 'We learn from history that mankind learnt nothing from history' – Hegel.

## 3

# இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாடு

இந்தியநாடு பழம்பெரும் நாடு. உலகம் வியந்து போற்றும் அருங்கலைகள் பலவற்றின் தாயகமாகவும், மெய்ப்பொருளை ஆராய்ந்தறிய முயலும் சமய நெறிகள் பலவற்றின் பிறப்பிடமாகவும் சிறப்புற்று விளங்குகிறது நம் இந்தியா. வரலாற்றுக் கதிர்கள் சென்று ஒளி வீச முடியாத தொல்பழங்காலம் முதல் இந்திய நாகரிகம் வற்றாத பேரூற்றாய், உலகிற்கு நாகரிக ஒளியினைத் தந்து, பிறர் அழிக்க முயன்றாலும் அழியாது. இன்னும் இளமைப் பொலிவுடன் இலங்குகிறது.

இந்திய நாகரிகம் இன்று நிலைத்திருக்கும் உலக நாகரிகங்களுள் பழைமையானது மட்டுமன்று; இதுவரை மனித இனம் உருவாக்கியுள்ள நாகரிகங்களில் எல்லாம் சிக்கலான கூறுகள் பலவற்றைத் தன்னுள்ளே அடக்கியுள்ளதுமாகும். பல்வேறு இனத்தவர்களும், வெவ்வேறு வரலாறு, பண்பாட்டுப் பின்னணியைக் கொண்ட மக்களும் இந்திய மண்ணில் சந்தித்திருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தனிப் பண்புகளை இந்தியப் பண்பாட்டுக் கொப்பரையில் போட்டு உருகச் செய்துள்ளனர். பின்னர், அவர்கள் புதியதொரு 'கலவை நாகரிகத்தை' உருவாக்கியுளனர். உலக நாகரிகங்கள் அனைத்தும் பல்வேறு பண்பாடுகளின் கலப்பு, இணைப்பு, பிணைப்பு ஆகியவற்றின் விளைவாகத் தோன்றியுள்ளன. உலகிலேயே வளமானதும் பழைமையானதுமான இந்திய நாகரிகம் பரவலான இத்தகைய கலப்பையும், இணைப்பையும் பிணைப்பையும் புலப்படுத்தும் ஒப்பற்ற நாகரிகமாக விளங்குகிறது.

இந்திய நாகரிகம் ஆரிய-திராவிட சமூக, சமய, பண்பாட்டு இணைப்பின் பயனாகத் தோன்றியது. இரு சாராரின் மொழிகளும், பழக்க வழக்கங்களும் முறைகளும் நற்பண்புகளும் மற்றும் திராவிடர்க்கு முந்திய ஆரியக் கலப்பற்ற பழங்குடி மக்களின் பண்பாடும் கலந்ததன் விளைவாகத் தோன்றியதே இந்திய நாகரிகமாகும்.

இரு பண்பாடுகளின் இணைப்பு வட இந்தியாவில்தான் நிகழ்ந்தது. வேதகாலத்திலும் அதற்குப் பின்னரும் இரு இனத்தாரும் தொடர்புகொண்டனர். வேதகாலத்து சமஸ்கிருதத்திலும்கூட திராவிட மொழியின் சாயல் நன்கு படிந்திருக்கிறது. ஆரியமொழியின் வழக்கத்திலும், திராவிடமொழியின் இயல்புகள் கலந்துள்ளதை இன்றும் நாம் காணலாம். ஆரியரது சமயம், வழிபாட்டு முறைகள், சிந்தனை, புராணக்கதைகள், வரலாற்று நிகழ்ச்சிகள் முதலிய அனைத்திலுமே திராவிடக் கலப்பு காணப்படுகிறது.[1]

ஒருரூபாய் நாணயத்தில், பன்னிரண்டணாவிற்குமேல் ஆரியரல்லாதாரின் (திராவிடர், ஆஸ்திரியப் பழங்குடி மக்களின்) பண்பாட்டுக் கூறுகள் இந்திய நாகரிகத்தில் கலந்துள்ளன என்று, அவை கலந்துள்ள முறையினை அறிஞர்கள் அறிவித்துள்ளனர்.[2]

இந்திய நாகரிகத்தில் காணப்படும் திராவிடப் பண்பாட்டின் கலப்பினை மதிப்பிடுகின்ற அறிஞர்கள், 'இந்திய நாகரிகத்தில் காணப்படும் ஆரியர் அல்லாதாரின் பண்பாட்டுக் கூறுகளில் திராவிடப் பண்பாட்டின் கூறுகளே முதன்மையானவையும், முக்கியமானவையுமாகும். இந்தியப் பண்பாட்டின் அடிப்படை, ஐம்பது விழுக்காட்டிற்கு (50%) மேல் திராவிடப் பண்பாட்டின் கூறுகளைக் கொண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை'[3] என்று மொழிந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

இந்தியாவின் வடபகுதி வரலாற்றுக்காலம் நெடுகப் பலமுறை அயலாரின் படையெடுப்புக்களால் அல்லலுற்றது. அத்தகைய இன்னல் நிறைந்த காலங்களில், இந்திய நாகரிகத்தைப் போற்றிக் காத்த பெருமை தமிழ்நாட்டிற்குரியதாகும். அதனால் இந்திய நாகரிகத்தில் தமிழகப் பண்பாட்டின் கூறுகள் பேரளவில் இடம்பெற்றன.

**<u>தமிழ் மொழி</u>**

1.Dr.K.M.Munshi: Foundations of Indian Culture, P.39-40.
2. Dr.S.K.Chatterji: The History and Culture of the Indian People, Vol. I. The Vedic Age, P.164.
3. Dr.S.K.Chatterji: Racial and Cultural Intermixture in Indian culture, Tamil Culture, Vol.VIII, p.275.

தென்னிந்தியாவில் தொன்மைச் சிறப்புடன் விளங்கி வருவது தமிழ்ப் பண்பாடு. இப்பண்பாடு தொன்றுதொட்டு இன்றுவரை உயிர்த்துடிப்போடு நின்று நிலவி வருகிறது. உலகம் அறிந்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும். சிந்தித்தவற்றுள்ளே சிறந்தவற்றாலும் தமிழ்ப் பண்பாடு தன்னிகரற்று விளங்குகிறது.

இன்று ஆயிரத்தைந்நூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் இந்திய மக்களால் பேசப்படுகின்றன. அவற்றுள் பதினைந்து மொழிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் சிறந்தவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் பன்னெடுங்காலமாகப் பேசப்பட்டு வரும் மொழி, இலக்கிய வளமிக்க மொழி, சிறந்த பண்பாட்டின் ஊற்றாய் விளங்கும் மொழி உலகப் பழம்பெரும் நாகரிகங்களோடு தொடர்புடையதாகத் திகழும் மொழி தமிழ் மொழியேயாகும். வடமொழி நீங்கலாக உள்ள பிற இந்திய மொழிகளின் தோற்றம், வளர்ச்சி எல்லாம் கடந்த ஈராயிரம் ஆண்டுகளுக்குள் அடங்கிவிடுகின்றன. இந்தியத் தொன்மொழியாக விளங்கும் தமிழ்மொழி, உலகில் உயர்தனிச் செம்மொழிகளுள் (Classical Language) ஒன்றாக விளங்குவதும் இங்குக் கருதத்தக்கதாகும்.

இந்திய நாகரிகம் நெடுங்காலத்திற்கு முன்பே, கடல் கடந்த அயல்நாடுகளுக்குச் சென்று பரவியுள்ளது. மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரிகக் காலம் முதல் இன்றுவரை இந்தியாவிற்கு வெளியே கடல் கடந்த நாடுகளிலெல்லாம் இந்திய நாகரிகத்தோடு சென்று பரவியுள்ள இந்திய மொழி, தமிழ் மொழியே என்பது உலகறிந்த உண்மை.

### பழந்தமிழ் இலக்கியம்

இந்திய இலக்கியச் செல்வத்தை வளர்க்கும் நற்பணியில் தமிழகம் ஈடுபட்டு, ஆற்றியுள்ள தொண்டினை உலகப் பேரறிஞர்கள் பலர் பாராட்டியுள்ளனர். எத்தனையோ உள்நாட்டுக் குழப்பங்களும் வெளிநாட்டுப் படையெடுப்புகளும் நடந்தும் தண்டமிழ் மொழியானது தொடர்ந்து தன் இலக்கியங்களைப் படைத்து இடையீடின்றி வளர்த்து வந்துள்ளதைப் போன்று, உலகில் வேறெந்த மொழியும் இம்முறையில் இலக்கியங்களைப் போற்றிப் படைக்கவில்லை.

இலக்கிய வளமிக்க இந்திய மொழிகள் பலவற்றுள்ளும் சமயச்சார்பற்ற – புராணச் சார்பற்ற இலக்கியங்களை (Secular Literature) உடைய மொழியாக ஒப்பற்று விளங்குவது தமிழ் மொழியெனில், அது மிகையாகாது. மனித இனத்தின் அடிப்படை உணர்ச்சிகளாகிய காதலைப் போற்றிப்பாடும் 'அகப்பொருள்' பாடல்களையும், போரையும் வீரவுணர்ச்சியையும் போற்றிப் பாடும் புறப்பொருள் பாடல்களையும் பாடியவர் பண்டைத் தமிழ்ப் புலவர்கள். அவர்கள் குறிப்பிட்ட எச்சமயத்திற்கும் முக்கியத்துவம் தராமல், அன்றைய தமிழ் மக்களின் வாழ்க்கையையும், நாட்டுப்புறக் காட்சிகளையும், நகரவாழ்வின் வளத்தினையும், இயற்கை எழிலையும் ஏற்றிப்போற்றியுள்ளமை இந்திய இலக்கியத்தில் மட்டுமல்லாமல், உலக இலக்கியத்திலும் சிறப்பிடம் பெறத் தக்க வீறுடையதாகும்.

'சொற்சுருக்கமும், தெளிவும், இனிமையும் இன்ப எக்களிப்பும், மனித இனத்தின் உணர்ச்சித் துடிப்பும் நிறைந்த உயிரோவியங்களாக விளங்கும் இச்சங்கப் பாடல்கள், 'செம்மொழி இலக்கியங்களாகப்' போற்றப்படத்தக்கன. இவற்றோடு பிண்டாரின் (Pindar) படைப்புகளே ஒப்பிடத்தக்கன. பிண்டாரின் படைப்புகளைக் காட்டிலும் அமைதியழகும், சொல்நயமும் வாய்ந்தனவாக இவை உள்ளன. இந்திய நாட்டு இலக்கியங்களுள் நன்று முதிர்ச்சியடைந்ததும், மக்களுடைய உள்ளத்தில் நுட்பமான உணர்ச்சிகளைச் சித்தரிப்பதும் சங்க இலக்கியம் என்றால் அது மிகையாகாது. அது மாண்புமிக்க கிரேக்கக் கலையின் வனப்பையும் சமநிலைப் பண்பையும் அமைதிப் பொலிவையும் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.'[4]

உலகிலுள்ள மக்களுள் ஐந்தில் ஒரு பகுதியினரால் புத்த சமயம் பின்பற்றப்படுகிறது. புத்த சமயத்தின் புனிதமொழி வேதமொழி பாலி. பாலி மொழியில் புத்தசமய நூல்கள் எண்ணற்றவை எழுதப்பட்டுள்ளன. இத்தகைய சிறப்பு வாய்ந்த பாலி மொழிக்கு, முதன்முதலில் இலக்கணத்தை வகுத்துக்கொடுத்த பெருமை தமிழகத்திற்கேயுரியதாகும். கச்சாயனர் ('கச்சி' என்ற காஞ்சியைச் சேர்ந்தவர்) முதன்முதல், பாலி மொழிக்கு இலக்கணம் எழுதியுதவியதாக ஆராய்ச்சியாளர் அறிக்கின்றனர்.[5]

4. D.Meile L: Inde Classique, Ed. By L. Renou, Part II, P.302.
5. Vide 'South India As a Centre of Pali Buddhism, Dr.S.K.Aiyangar's Commn. Vol.P.245.

புத்த சமயத்தோடு தொடர்பு கொண்ட உலக மொழிகள் நூற்றைம்பதிற்கு மேம்பட்டன. ஆயினும், புத்த சமயத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் விளக்கும் 'காப்பியம்' அம்மொழிகளில் இன்று இல்லை. தமிழிலுள்ள புத்தசமய காப்பியமாகிய மணிமேகலை ஒன்றுதான் புத்த சமயத்தின் தனிப்பெரும் காப்பியமாக விளங்குகிறது.

பழந்தமிழ் இலக்கியங்களிலேயே மிகவும் சிறப்புடையதாகப் போற்றப்படுவது திருக்குறள். 'மக்களினத்தின் வேதமாக விளங்கும் திருக்குறளில் மில்டனின் கவிநலனும் தாந்தேயின் காப்பிய அழகும், செகப்பிரியரின் உலகப் பொதுமையும் பிளேட்டோவின் இலட்சியநோக்கும், மார்க்கசு அரேலியசின் அறவேட்கையும் ஏற்ற அளவில் இணைந்தும், இழைந்தும் கலந்தும் காணப்படுகின்றன. இத்தகைய அரும்பெரும் நூலினை உலகிற்குத் தந்து வான்புகழ் கொண்டது தமிழ்நாடு.

சமயாசாரியர்களான சங்கரர், இராமானுசர், இராமானந்தர் ஆகியவர் கருத்துக்களுக்கும், அருளாளர்களான இராமகிருஷ்ணர், விவேகானந்த அடிகள், காந்தியடிகள் ஆகியோர் பண்புகளுக்கும் மூல முதலை சமஸ்கிருதத்திலோ, வேறெந்த மொழியிலுமுள்ள நூல்களிலோ காணமுடியாது. அவை திருவள்ளுவருடைய திருக்குறளின் மரபில் வந்தவை.[6] என்பது டாக்டர் சுவைட்சரின் முடிவாகும்.

கற்பார் உள்ளத்தை உருக்கும் உயர்ந்த கவிதை நயத்தோடு, மனித இனத்தின் அன்பினை வெளிப்படுத்துவது சிலப்பதிகாரம், காப்பியப் பண்புகள் முழு நிறைவு பெற்றதாய், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் முறையாகக் குழைத்துத் தருவதாய் அமைந்துள்ளது இம்முத்தமிழ்க் காப்பியம். புகழ்மிக்க உலகப் பெருங்காப்பியங்களொடு ஒன்றாக வைத்துப் போற்றத் தக்க சிறப்புடையது சிலப்பதிகாரம் என்பர் டாக்டர் கமில்வெலெபில்,[7]

---

6. Dr. Albert Schweitzer : Indian Thought and Its Development: P.201.
7. Dr. Kamil Zvelebil: A Short Note on ‘The Tamil Contribution To World’s Civilization' in Tamil Culture, Vol. V.P.296.

**பக்தி இலக்கியம்**

இந்தியப் பண்பாட்டின் சிகரமாக விளங்குவது பக்திநெறி. அன்பே வடிவாக இறைவன் விளங்குகிறான். அவனை அடைவதற்குக் கானகம் சென்று, காய்கனி தின்று கடுந்தவம் செய்து அல்லற்பட வேண்டாம்.

ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா

(நா.திவ்.பிர.1158)

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர் வேண்டா –
விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்த்தூயக்
கைதொழுதால்
அஃகாவெ தீவினைகள் ஆய்ந்து

(நா.திவ்.பிர.2357)

என்று தமிழகத்தில் தோன்றிய அருளாளர்கள் மக்களுக்கு அறிவித்தனர். உள்ளத்தே உறையும் இறைவனை, வழிபடுவதற்குரிய பக்தி நெறியை அருள்நெறிச் சான்றோர்கள் இரண்டாக வகுத்தனர். ஒன்று திருக்கோயில் வழிபாடு. மற்றொன்று ஆன்ம வழிபாடு 'நடமாடும் கோயில்களாக உள்ள மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசுவரனுக்கு உகந்த தொண்டு' என்பது அன்பு நெறியின் கோட்பாடு. இவ்வன்பு நெறியின் வாசகங்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமும் தமிழிலே உள்ளமை உலகறிந்த உண்மை. பக்திநெறியின் பழங்காலச் சுவடுகளைத் தமிழல்லாத பிற இந்திய மொழிகளில் காண்பது அரிது.

'தமிழ் மக்கள் தங்களுடைய ஆழ்ந்த இறை அன்பினை – பக்திப் பெருக்கைத் தேவாரம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் நூல்களிலுள்ள பாசுரங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். இதைப்போன்ற பக்திச்சுவை நலம்

கனிந்த பாசுரங்களை வேறு எம்மொழியிலும் காண இயலாது. செமிடிக் (எபிரேய) மொழியில் 'ஒன்றே கடவுள்' எனும் வழிபாடு அறிவியல் மாண்புடன் அறிவொளி வீசுகிறது. பேரரசுக் கொள்கையினை உலகிற்கு அளித்த இலத்தின் மொழியின் உயிர்ப்பாக விளங்குவது சட்டமாகும். கலையின் கவின்மிகு வடிவமாக இலங்குவது கிரேக்க மொழி. பிரெஞ்சு, ஜெர்மன், ஆங்கிலம் ஆகிய புத்துலக மொழிகள் அறிவியல் முன்னேற்றப் பாதையில் ஏறுநடை போட்டுச் செல்லுகின்றன. தத்துவத்தின் திருக்கோயிலாக சமஸ்கிருத மொழி திகழ்கிறது. மனித வாழ்க்கையின் உயர்ந்த பண்புகளை அறியவேண்டுமானால், நாம் இம்மொழிகளை அணுக வேண்டியவர்களாக இருக்கிறோம். அதைப்போன்றே கடவுள் பக்தியினை அறிவினால் அறியவும், உள்ளத்து உணர்வினால் உணரவும் உலகம் தமிழ்மொழியிடத்து வந்தாக வேண்டும். கடவுள் பற்றினையூட்டி, எலும்பையும் உருக்கிவிடக்கூடிய ஆற்றல்மிக்க அன்புப் பெருக்காக விளங்கும் பக்திப் பாடல்களை உள்ளொளி பெருக்க, உலப்பிலா ஆனந்தத்தை அளிக்கும் அமுதமயமான இன்பப் பாசுரங்களைத் தன்னகத்தே கொண்டு இருப்பது தமிழ் மொழி. இப்பக்திப் பாசுரங்களை நாம் ஊன் கலந்து உயிர் கலந்து ஓதினால் தமிழ் மொழியின் நயத்தையும் நுட்பத்தையும் உணரலாம்.[8]

இந்தியாவிலுள்ள சமயங்கள் ஒவ்வொன்றின் சார்பாக இயற்றப்பட்ட இலக்கியங்களை உடைய மொழியும் தமிழேயாகும். தமிழ் மொழி ஒன்றில்தான் கிறித்துவ, இசுலாமிய இலக்கியங்களும் வழிபாட்டுப் பாடல்களும் காணப்படுகின்றன. வேறெந்த இந்திய மொழியிலும் எல்லாச் சமய நூல்களும் இவ்வாறு முதல்நூற்களாக அமைந்திருக்கவில்லை.

### ஊராட்சி முறை

அயலாருடைய ஆதிக்கமும் அச்சுறுத்தலும் இன்றித் தமிழகம் பன்னெடுங்காலமாகத் தனியுரிமையோடு வாழ்ந்து வந்தமையால், தமிழ்ச் சமுதாயம் பேரளவிற்கு ஒருமைப்பாடுடையதாக அமைய முடிந்தது. அதனால், நிலையான பழக்க வழக்கங்களைக் கொண்ட சமூக வாழ்வு மலர்ச்சியுற முடிந்தது. அதன்

8. Dr.T.P.Meenakshi Sundaranar : Some Key words in Tamil, of Religion and Philosophy of Tevaram, Vol, I.P.I.

விளைவாகக் குறிப்பிட்ட ஓரிடத்தில் - ஒரு வட்டாரத்தில் வாழுகின்ற மக்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களே அரும்பாடுபட்டு நிறைவு செய்துகொள்ளுவதற்குரிய மனவெழுச்சியைப் பெற்றனர். அம்மனவெழுச்சி, வட்டார இயல்புடைய நிலையங்கள் பலவற்றை அமைத்து, அவற்றைத் திறமையோடு செயல்படுமாறு செய்தது. இவ்வாறு பண்டைத் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே ஆளக் கற்றனர்.

சிற்றூர், பேரூர், மாநிலம் ஆகியவற்றில் சிறந்த தன்னாட்சி முறை, சங்ககாலம் முதற்கொண்டே தமிழகத்தில் சிறப்புற்று விளங்கியதைச் சரித்திரம் பேசுகிறது. சோழர் ஆட்சி முறையில் சிறப்பியல்பாக விளங்குவது ஊராட்சி முறையேயாகும். ஊர்கள்தோறும் மக்களாட்சிப் பண்பின் அடிப்படையில் 'ஊராட்சி மன்றங்களும்', பெரிய நகரங்களில் அவற்றின் பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்பட்ட 'நகரம்' எனப்பட்ட நகராட்சி மன்றமும் நாட்டாட்சியை நன்முறையில் நடத்தின.

ஊராட்சி மன்றங்கள் மக்களிடையே குழு மனப்பான்மையை வளர்த்து, கூட்டு முயற்சியில் மக்களை ஈடுபடுத்திய முறை நம்முடைய கருத்தைக் கவருவதாகும்.

ஊராட்சி மன்றங்களுக்கு உரிமைகள் பலவற்றை மத்திய அரசு அளித்திருந்தது. அவ்வரசு எல்லா உரிமைகளையும் தனக்கேயுரியதாக - அதிகாரங்கள் அனைத்தையும் தன்னிடத்துக்குவித்துக்கொண்ட குவிமுக அரசாக (Burean Cratic) இல்லாமல், பெரும்பாலான உரிமைகளை ஊராட்சி மன்றங்களுக்கு அளித்திருந்தமை வியக்கத்தக்க செய்தியாகும். மத்திய அரசு உள்ளூர்ச் சமுதாய அமைப்பினை அடக்கியொடுக்கியாளாமல் உரிமைகள் பல வழங்கி வந்தமையால், ஊராட்சி மன்றங்கள் தன்னாட்சியுரிமை பெற்ற உள்ளூர்ச் சமுதாய அரசுகளாக விளங்கின. நாட்டாட்சியின் அடிப்படையாக அமைந்த இச்சிறு 'குடியரசுகள்' மக்களிடையே கூடிவாழும் மனப்பான்மையை வளர்த்தன. நாட்டாட்சியில் குடிமக்களுக்குரிய பொறுப்புணர்ச்சியையும் கடமையுணர்ச்சியையும் அவை வளர்த்தன. உரிமை வாழ்வில் மக்களுக்கு ஆர்வத்தை ஊட்டின. திறமையும் தூய்மையும் பொருந்திய சிறந்த ஆட்சி முறை நாட்டிலே வேரூன்றி விளங்குமாறு செய்தன.

ஊர் மக்கள் பங்குகொண்டிருந்த ஊராட்சி முறை, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தென்னாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் அமைந்திருந்ததைப்போல், இந்தியாவில் மற்றெந்தப் பகுதியிலும் அக்காலத்தில் அமைந்திருக்கவில்லை. இன்றைய இந்திய ஆட்சிமுறையில் அடித்தளமாகக் கருதப்படும் 'பஞ்சாயத்து இராச்சிய'த்தின் தாயாக விளங்குவது பண்டைத் தமிழரின் 'ஊராட்சி முறையாகும்'. இக்கால ஆட்சிமுறையினைச் செம்மையாக அமைத்துக்கொள்ள அம்மக்களாட்சிமுறை வழிகாட்டியாக இருந்து வருகிறது.

### திருக்கோயில்கள்

தமிழகத்தின் திருக்கோயில்கள், தமிழ்ச் சமுதாயத்தின் நல்வாழ்வில் நாட்டம் கொண்ட சிறப்புமிக்க நிலையங்களாக விளங்கின. ஊர்கள் ஒவ்வொன்றும் கோயிலை மையமாகக்கொண்டே வளர்ச்சியுற்றன. அதைச் சார்ந்தே அவ்வூரின் சமுதாய வாழ்க்கை இயங்கி வந்தது.

இடைக்காலத் தமிழகத்தின் கோயில்கள், 'அவ்வுலகை'ப் பற்றி அறிவிப்பனவாக இருந்தன. எனினும் அவை இவ்வுலகைப் புறக்கணித்துவிடவில்லை. மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குப் பல வழிவகைகளை அவை அமைத்துத் தந்தன. மக்களுக்கு உதவிபுரியும் அறநிலையங்களாகவும், அறிவை வளர்க்கும் கல்வி நிலையங்களாகவும், மனவமைதியை அளிக்கும் ஆன்மிக உணர்வின் வளர்ப்புப் பண்ணைகளாகவும், மக்கள் உள்ளத்திற்கு மகிழ்ச்சியூட்டும் அழகுமிகு கலைக்கூடங்களாகவும், அரிய நூற்களைத் தன்னகத்தே கொண்ட நூல் நிலையங்களாகவும், பிறவிப் பெருங்கடலை நீந்துவோருக்கு வழிகாட்டும் வான்பொருளாகவும், மண்ணக வாழ்விலே விண்ணக வாழ்க்கையின் பேறுகளைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் கலைக்கோயில்களாகவும் திருக்கோயில்கள் திகழ்ந்தன.

நிலக்கிழார், வேலையாட்களை நியமித்து வேலை தருவோர், சமுதாய நலத்துக்குப் பாடுபடும் ஒப்புரவாளர் ஆகியோருடைய செயல்களையும் கடன் கொடுத்து உதவும் நிதி நிலையம், கல்வி நிலையம், பொருட்காட்சிசாலை, மருத்துவமனை ஆகியவற்றின் பணிகளையும் தன்னைச் சுற்றி வாழும் மக்கள் சமுதாயத்திற்குக்

கோயில்கள் செய்துவந்தன. மக்கள் அற உணர்வோடு நல்வாழ்வு வாழ்வதற்குரிய உதவிகள் பலவற்றையும் அருளுணர்வோடு புரிந்து வந்த தமிழகத்தின் திருக்கோயில்கள் இந்திய நாகரிகத்தின் வரலாற்றில் ஒப்புயர்வற்ற சமுதாய நிலையங்களாக விளங்குகின்றன.

**இசைக்கலை**

உலகம் கண்டு வியப்படையுமாறு அழகுக்கலைகள் பலவற்றை இந்தியா உலகிற்கு அளித்திருக்கிறது. அவற்றுள் இசைக்கலை, நாட்டியக்கலை, சிற்பக்கலை, படிமக்கலை முதன்மையானவை. இவற்றை உருவாக்குவதற்குத் தமிழகம் பேரளவிற்குக் காரணமாக இருந்து வருவதைக் கலையியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.[9]

இசைத்துறையில் கருநாடக இசை, இந்துஸ்தானி இசை என்ற இரண்டே இன்றைய இந்தியாவில் சிறப்புற்று விளங்குகின்றன. சங்க காலத்திற்கு முன்பிருந்தே இசைத்தமிழ் நன்கு வளர்சி அடைந்துள்ளதைப் பழந்தமிழ் நூற்கள் நன்கு தெரிவிக்கின்றன. தேவார காலத்தில் பக்திவெள்ளம் கரைபுரண்டோடியபொழுது, மக்கள் உள்ளத்தை உருக்கும் கருவியாக 'இசை' பயன்படுத்தப்பட்டது. பண், திறம் எனும் இருவகைப் பிரிவுகளையுடையது பண்டைத் தமிழிசை, மாத்திரைகள் எனப்படும் 22 வகை சுருதிகளும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் எழுவகை சுரங்களும் தொன்றுதொட்டு இசைத்தமிழில் அறிவியல் முறைப்படி பாகுபடுத்தப்பட்ட இசைக்கூறுகளாக இருந்து வருகின்றன. சிலப்பதிகாரத்தினால் பண்களின் பெயர்களை அறிகிறோம். தேவார காலத்தில் உருப்படிகளாகப் பெற்றுப் போற்றி வருகிறோம். இவ்வாறு பழைய உருப்படிகளாகப் பெற்றுப் போற்றி வருபவை சென்ற நூற்றாண்டில் அல்லது அதற்கு முந்திய நூற்றாண்டில் தோன்றியவை அல்ல. அவை, ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை. 'மனிதனுடைய

9. Indian art and culture was a joint creation of the Dravidan and Aryan genius, a welding together of Symbolic and representative, abstract and explicit language and thought – Dr.Ananda K.Coomara swamy, History of Indian and Indonesian Art, P.3.

சரித்திரத்தில் 1200 வருடங்களுக்குமுன் எந்தவிதமான சாஸ்திரிய சங்கீதமும் (Classical Music) இதர தேசங்களில் இருந்தது என்று கூறுவதற்குப் போதுமான சான்றுகள் இல்லை' என்று இசைக்கலைப் பேராசிரியர் திரு. சாம்பமூர்த்தி கூறுகிறார். இதனால் பழந்தமிழ் இசையின் தொன்மையும் சிறப்பும் புலனாகின்றது.

காலப்போக்கில் பழந்தமிழிசையில் திரிபுகளும் மாற்றங்களும் உண்டாயின. 'கருநாடக இசை' எனும் புதிய பெயரால் அது அழைக்கப்பட்டது. 'கருநாடக சங்கீதம் என்று வழங்கும் தென்னாட்டு இசைக்கலை தமிழ் மக்களின் பரம்பரைச் சொத்து, சிலப்பதிகாரக் காலத்துக்கு முன்னாலிருந்து தமிழ்நாட்டில் இந்த இசைக்கலை உருவம் பெற்று வளர்ந்து வந்தது'[10] என்று அறிஞர் ரா.கிருஷ்ணமூர்த்தி (கல்கி) தெளிவுறுத்தியுள்ளார். எனவே, கருநாடக சங்கீதம் என்பது தமிழிசைக்குப் பிறமொழியாளர் வைத்த பெயர் என்பது தெரியவருகிறது.

## நாட்டியக்கலை

பாரத நாட்டின் மற்றொரு சிறப்புமிக்க கலை பரத நாட்டியம். கலைகள் பலவற்றிற்கு அடிப்படையாகவும் தொன்மையானதாகவும் உள்ளது நாட்டியக்கலை. உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும் கருத்துகளையம் உடல்கூறுகள் வாயிலாகப் புறத்தார்க்குப் புலப்படுத்துவதே இக்கலையின் நோக்கம். முகக்குறிப்பு, கண்குறிப்பு, கைக்குறிப்பு என்னும் பகுதிகளைக் கொண்ட நாட்டியக்கலையோடு இசையைக் கலந்து பேரின்பத்தை அளிக்கிறது பரதநாட்டியம், எண்வகை மெய்ப்பாடுகளே இக்கலையின் உயிர்நாடி. இக்கலை கோயில்களில் நடத்துவதற்காகவே தோற்றுவிக்கப்பட்டது. கோயிலில் பயன்படுத்தப்படும் சிற்பக்கலை, படிமக்கலை, இசைக்கலை ஆகியவற்றோடு நெருங்கிய தொடர்பும் இயைபும் கொண்டது நாட்டியக்கலை, நாட்டியக்கலையைப் போற்றி வளர்த்தது மட்டும் அல்லாமல், இன்றைக்கு அக்கலைக்கு ஒரு புதுவாழ்வினை அளித்து உலகப் பெருங்கலையாக அதனை மாற்றி வருகின்றவர்களும் தமிழர்களேயாவர்.

---

10. தமிழிசை மாநாட்டு ஐந்தாவது மலர், 1947, பக்.4

இவ்வழகுக்கலை தோன்றி வளர்ந்தது தமிழ்நாட்டில். ஆனால், இக்கலையின் நுட்பத்தை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து, 'நாட்டிய சாத்திரத்தை, பரதர் என்ற பெரியார் வடமொழியில் எழுதியுள்ளார். 'நாட்டியம்' எனும் சொல் 'நிருத்' எனும் பிராகிருதமொழியின் வேர்ச்சொல்லிலிருந்து நிருத்த, நிருத்திய, நாட்டிய என்று திரிந்திருப்பதாக மொழியியல் அறிஞர்கள் [11]கூறுகின்றனர். மேலும் பரத முனிவர் தென்னாட்டைச் சேர்ந்தவர் என்றும், அவர் ஆரியரல்லாத இந்தியப் பழங்குடி மக்கள் இனத்தைச் சேரந்தவர் என்றும், தம் காலத்திய நிலைமைக்கேற்ப வடமொழியில் நாட்டிய சாத்திரத்தை அவர் இயற்றியருளினார் என்றும் வடமொழி நாடக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

தென்னாட்டில் நாட்டியக்கலை தெய்வீகக் கலையாகப் போற்றி வளர்க்கப்பட்டு வருவதைக் கல்வெட்டுக்களும், இலக்கியங்களும் எடுத்தியம்புகின்றன.

'இந்தியாவில் வளர்க்கப்பட்டுள்ள நாட்டியக் கலைகள் அனைத்திலும், பரதநாட்டியக்கலை தலைசிறந்ததாகும். இதனுடைய தொன்மைச் சிறப்பும் ஏற்றமும் எழிலும் பிற நாட்டியக் கலைகளில் காணப்படவில்லை. பரதநாட்டியத்தின் மேன்மையையும் சிறப்பையும் அதனுடைய பெண்களாகக் கருதத்தக்க இந்தியாவின் பிற நாட்டியக்கலைகளில் காண்பது அரிது' என்று பரதநாட்டியக் கலையின் தன்னிகரற்ற தலைவியாக விளங்கும் திருமதி ருக்குமினி தேவி அவர்கள் மொழிந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

**சிற்பக்கலை**

இந்தியக் கலையின் முழுமையான வளர்ச்சியில், திராவிட மக்களின் கலைப்படைப்புகள் ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. எளிதில் வேறுபாட்டைக் கண்டறியக்கூடிய வகையில் திராவிடக் கலைப்பாணி, தற்சார்புடைய தனியியல்புகளையும் சுவையுணர்வுகளையும் உடையதாய் இருந்து வருகிறது. இவ்வேற்றுமைப் பண்புகளைச் சிறப்பாக நாம் கட்டடக்கலையிலும் தெய்வத் திருவுருவங்களை அமைக்கும் படிமக்கலையிலும் மிகப் பேரளவில் காணலாம். இவை

11. F.B. Kuiper, Indian Linguistics, VoII6, (1955) P.104.

இந்தியா முழுமைக்கும் பொதுவான சமயத்துறைப் பயன் மதிப்புகளையும், உருவச்சிலை வடிவக் கூறுகளையும் முற்றிலும் புறக்கணித்து விடவில்லை என்பது உண்மை. ஆயினும், தனிச்சிறப்புமிக்க கலைப்பாணிகளும், உருவச்சிலைகளின் அமைப்பில் இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும் காணமுடியாத இயக்கமும் நெகிழ்வும் கொண்ட சிறப்பியல்புகளும் திராவிடக்கலை முறையில் இடம்பெற்றுள்ளதை நாம் மறுக்க முடியாது.

பாரதக் கலையின் பல்வேறு பகுதிகளோடு திராவிடக் கலையின் வளர்ச்சியைத் தொடர்புபடுத்தாமல், அதைத் தனியாகத் தென்னாட்டு வரலாற்றின் அடிப்படையில் ஆராய்கிற பொழுது திராவிடக்கலை இயல்புகள் மிகப்பேரளவில் தெளிவும் பொலிவும் பெற்றுத் தனிச்சிறப்புடன் விளங்குகின்றன.[12]

தென்னாட்டுக் கோயிற் சிற்பங்கள், உலகத்தையே இன்று வியப்படையச் செய்கின்றன. கால இடையீடு இல்லாமல் சிற்பக்கலை தென்னாட்டில் தொடர்ந்து வளர்ச்சியுற்றிருப்பதைக் காணலாம். பன்னெடுங்காலமாகத் தொடர்ந்து சிற்பக்கலை போற்றி வளர்க்கப்பட்டதன் விளைவாக, யாதொரு கட்டுப்பாடுமின்றி இயங்கும் வடிவங்களைப் படிப்படியாக அமைக்க, தமிழகச் சிற்பிகள் கற்றனர். துணிவுமிக்க ஆக்க வேலையும் சரியான அளவுப் பொருத்தமும் கண்டாரை வியப்படையச் செய்யும் வகையில் திராவிடச் சிற்பங்களில் இடம்பெற்றுள்ளன. சிற்பங்களை வடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள் யாதாக இருந்தாலும், அதில் ஒரு குழைவுத் தன்மையையும் நெளிவு சுளிவுகளையும் நாம் காண்கிறோம். நெகிழ்ச்சியும், இழைவும், குழைவும், அழுத்தமின்றிப் பரவலாகக் கலைநுட்பத்தைப் பயன்படுத்துதலும், 'இயற்கையே கடவுள்' என்ற கொள்கையும் திராவிடச் சிற்பக்கலையின் முதன்மையான இயல்புகளாகும். மண்ணக வாழ்வை அடிப்படையாகக்கொண்டு, விண்ணகத்தை நோக்கிச் செல்லும் நிலையில் தமிழருடைய சிற்பக்கலை விளங்குகிறது. திராவிடர் கலையில் கலையுணர்வினும் சமயவுணர்வு சிறப்பிடம் பெற்றுள்ளதை யாரும் மறுக்க இயலாது. அழகினைத்

12. Dr.V.I.Shekhar: Samskrit Drama. PP.25-32.

தூய்மையின் மூலம்தான் பெற முடியும் என்ற நம்பிக்கை தமிழகத்துச் சிற்பிகளிடத்து நெடுங்காலமாக இருந்து வருவதை அவை அறிவிக்கின்றன.

மாமல்லபுரத்துச் சிற்பங்கள் கல்லிலே இழைக்கப்பெற்ற காப்பியங்களாகும். பல்லவர் சிற்பக்கலையில் அடைந்த மாபெரும் வெற்றிக்கு – சாதனைக்கு இவை அழியாத பெருஞ்சான்றுகளாகும். பாறைகளில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் தென்னிந்திய சிற்ப வடிவங்களின் களஞ்சியமாகக் காட்சி தருகின்றன. அவை கட்டுப்பாட்டு உணர்ச்சிக்குக் கட்டுப்பட்ட நேர்மையான கலைப்பாணியையுடையன. பெரிதும் பயன்படுத்தப்படாத இயற்கையியம் (Naturalism) அதில் இடம் பெற்றிருக்கிறது. ஆனால், அது தென்னிந்தியச் சிற்பக்கலையின் தனிச்சிறப்புமிக்க பண்பாக விளங்குகிறது.[13]

'கங்கையின் தோற்றம்' எனும் பாறைச் சிற்பங்கள் பல்லவர்களுடைய கலைச் சிறப்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பல்லவர் கலைப்பாணியில் அமைந்த சிற்பங்களுள் இவை முதன்மையானவை. மான், குரங்கு, யானை, எருது போன்ற விலங்குகள் திறமைவாய்ந்த சிற்பிகளின் கைவண்ணத்தால் பொன்றாப் பெருவாழ்வைப் பெற்றுள்ளன. விலங்குகளின் உடற்கூற்று அமைப்பழகில் இத்தகைய உயிர்க்கலையையும், தன்மை நவிற்சி மிக்க அழகையும். அருளுணர்வோடு அமைந்த கலைப்பாணியையும் நாம் இந்தியாவின் வேறெந்தப் பகுதியிலும் காண்பதரிது. புதுமையும் அழகும் பொருந்திய கலையியல் கொதுகை கைவரப்பெற்று இந்தியக்கலை, இங்குத்தான் முழு வளர்ச்சியடைந்துள்ளதைக் காணுகின்றோம். மனித வடிவின் இலட்சியத்தோற்றங்கள் பல்லவர்களுடைய கலைப்படைப்புகளிலே தலைசிறந்து விளங்குவதோடு, இந்திய சிற்பங்களிலேயே ஒப்புயர்வற்றனவாகவும் உள்ளத்தை நெகிழ்விப்பனவாகவும் உள்ளன.[14]

13. Rukmini Devi: Bharata Natyam, the South Indian Classical Dance, Tamil Culture, Vol.II P.138.
14. Mario Bussagli: ‘Dravidian Art’ in Encyclopaedia of world Art. Vol. IV.P.443.

நிலைபேறற்ற உலகியல் வாழ்வில். நிலையான மதிப்பினைச் சோழர் காலத்திய சிற்பங்கள் பெற்றுள்ளன. ஆடையணிகள் உடலோடு பொருந்தியுள்ள காட்சி உடலுக்கு இயல்பான பொலிவை அளிப்பதோடு, நுட்பமான கலைநயம் பொருந்தியனவாகத் தோன்றுகின்றன. வடிவங்களின் அமைப்பு முறையில் கலையுணர்வு நாட்டமும், உடலுறுப்புகளின் நெளிவுசுளிவுகளில் உள்ள நேர்த்தியும் நெகிழ்ச்சியும் சிறப்புமிக்கன. இவற்றோடு ஒருவகைப் புதுமைப் பொலிவும் சேர்ந்து சோழர்காலச் சிற்பக்கலைக்குப் பொன்றாப் புகழைத் தேடித் தந்துள்ளன.

திருக்கோயில்களின் கருவறையைச் சுற்றிலும் சுவர்களிலுள்ள மாடங்களில் பல தெய்வத் திருமேனிகள் சோழர் காலத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் தெற்குச் சுற்றாலையில் கலைமகளின் கவின்மிகு சிற்பம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. நல்ல பெருமிதமான தோற்றம், அமைதி நிலவும் சாந்த வடிவம். நீண்டுயர்ந்த மணிமகுடம் தலையை அழகுபடுத்துகிறது. வெள்ளைத்தாமரையில் அவள் வீற்றிருக்கும் திருக்கோலம் அன்பர் கண்ணுக்கும் கருத்துக்கும் பெருவிருந்தளிக்கிறது. இது புடைப்புச் சிற்ப முறையில் அமைந்திருப்பதால் பேரழகுடன் பொலிவுறுகிறது.

திருவரங்கத்தில் வேணுகோபாலன் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் உள்ள ஒரு மாடக்குழியிலே, கல்லில் கனவுலகக் காரிகை ஒருத்தி நிற்கின்ற நிலையில் செதுக்கப்பட்டுள்ளாள். அவள் நிற்கின்ற நேர்த்தி, கையில் கண்ணாடி ஏந்தியிருக்கின்ற எழில், அணிந்திருக்கும் அணிகளின் அழகு, இதழ்களிலே தவழும் புன்னகை முதலியன காண்பவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுவதாகும். இதைப்போன்ற எண்ணற்ற சிற்பங்கள் இக்காலத்திய கலைப்பாணியை உலகிற்கு எடுத்துரைக்கின்றன.

**கட்டடக்கலை**

இந்தியக் கட்டடக்கலை முறையில், தென்னாட்டுக் கட்டடக்கலை தனிச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. தென்னிந்தியக் கட்டடக்கலை முறையைத் 'திராவிடக் கட்டடக்

கலைமுறை' என்பர் பூவேதூப்ராய். தமிழகம் திருக்கோயில்கள் நிறைந்த திருநாடு என்று அறிஞர்களால் போற்றப்படுகிறது. அத்திருக்கோயில்களினுடைய விமானங்களின் அமைப்பும். அழகும் தமிழகத்திற்கேயுரிய புதிய கலைப்பாணியை அடிப்படையாகக் கொண்டுள்ளன. 'பிரமிட்' போன்ற தோற்றத்தோடு வானுற உயர்ந்து விளங்கும் இக்கோபுரங்களைத் 'திராவிட கலைப்பாணி கோபுரங்கள்' என்று பழைய சிற்ப, நூற்களே கூறுகின்றன. கோயில் கட்டக்கலை பல்லவர் காலத்தில் குகைக் கோயில்களாக அரும்பி, சோழர் காலத்தில் விண்ணைத் தீண்டித் தழுவும் மாபெரும் கோயில்களாக மலர்ச்சியுற்றது. பல்லவர் காலத்திய கோயில்கள் எளிமையின் எழிலும், அடக்கமான அமைப்பு முறையின் அழகும் உடையன. மண்டகப்பட்டு திருச்சிராப்பள்ளி, மாமல்லபுரம் முதலிய இடங்களிலுள்ள குகைக் கோயில்களும் மாமல்லபுரத்தில் ஒற்றைக் கல்லினால்அமைக்கப்பட்டுள்ள பஞ்சபாண்டவர் தேர்களும் இத்தகையனவாகும். பல்லவர் காலத்திய கட்டுமானக் கோயில்களுள் மாமல்லபுரத்துக் கடற்கரைக் கோயிலும் காஞ்சியிலுள்ள கைலாசநாதர் கோயிலும், வைகுந்தப்பெருமாள் கோயிலும் கோயில் கட்டடக்கலையின் வளர்ச்சிக்குரிய சான்றுகளாகும். கட்டடக்கலைப் பாணியில். எளிமையும் அதே சமயத்தில் நேர்த்தியும் வாய்ந்தனவாக தமிழகத்துக் கட்டடக்கலை முன்னேற்றம் அடைந்ததை இக்கோயில்கள் அறிவிக்கின்றன.

சோழர் காலத்திய கோயில்களின் அமைப்பு முறையில் வீறும் ஊற்றமும், அணியழகின் கலைநயமும், தொழில்நுட்பச் சிறப்பும் மேம்பட்டு விளங்குகின்றன. மாபெரும் விமானங்கள் எளிமையின் எழிலைச் சிறிதளவும் இழக்காது. பெருமிதத் தோற்றத்தோடு பேரழகுப் பிழம்பாகப் பொலிகின்றன.

இப்புதிய கலைப்பாணியின் மாண்புமிக்கவடிவமாக விளங்குவது 'தஞ்சைப் பெருவுடையார் கோயில்'. இக்கோயிலின் விமானம் எகிப்திய பிரமிடுக்களைப் போன்று மாபெரும் வடிவமாகப் பெருமிதத் தோற்றத்தோடு காணப்படுகிறது. அவ்விமானம் திண்மையும் உறுதியும் உடையதாய், என்றும் நிலைபெற்று விளங்கும் என்ற நம்பிக்கையூட்டும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இதுவரை

வகுத்தமைக்கப்பட்டுள்ள கோயில் விமானங்களில் நிலையான கட்டுக்கோப்புடையதாகக் காணப்படுவது தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானமேயாகும். 'திராவிடக் கட்டடக் கலைஞரின் நேர்த்திமிக்க படைப்புகளுள் சிறிதளவும் ஐயத்திற்கு இடமின்றித் தலைசிறந்து விளங்குவது இக்கோயிலாகும். தஞ்சைக் கோயிலின் விமானம், இந்தியக் கட்டடக் கலையின் மாட்சியினை அறிய ஓர் உரைகல்லாகவும் விளங்குகிறது.[15]

தஞ்சைப் பெருவுடையார் கோயிலைப்போன்ற, ஆனால் சிறிது அடக்கமான அளவில் இராசேந்திரசோழனால், கங்கை கொண்ட சோழபுரத்தில் கட்டப்பட்டுள்ள 'கங்கைகொண்ட சோழீச்சுரம் தஞ்சைக் கோயிலின் கலைப்பாணியைப் பெரிதும் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். ஓரளவிற்கு அதன் அமைப்பு முறைகளிலும், கட்டடக்கலை நயத்திலும் நுட்பமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஆண்மையின் வீறு விளங்குகிறதென்றால், கங்கைகொண்ட சோழீச்சுரத்தில் பெண்மையின் பேரெழில் பொங்கி வழிகிறது எனக் கூறலாம். கவர்ச்சிமிக்க பல்வகை அழகிய வேலைப்பாடுகளையுடையதாக இக்கோயில் விளங்குகிறது.

தாராசுரத்திலுள்ள 'ஐராவதேசுரர் 'கோயிலும், திருபுவனத்திலுள்ள 'கம்பேசுவரர் கோயிலும்' சோழர் கலைப்பாணியின் பிற்கால இயல்புகளை நன்கு புலப்படுத்துகின்றன. இவற்றில் நுணுக்கமான வேலைப்பாடுகள் மிகுதியாக வளர்ந்துள்ளன. கோயில்களின் தலைவாயிலில் விண்ணைமுட்டும் கோபுரங்கள் சிற்பக்கலைக் களஞ்சியமாக விளங்குமாறு கட்டப்பட்டுள்ளன. இத்தகைய கோபுரங்களை சிதம்பரம், மதுரை, திருவண்ணாமலை முதலிய ஊர்களிலுள்ள கோயில்களில் காணலாம். இவற்றுக்கு ஈடாகக் கலைநயம் வாய்ந்த கோபுரங்கள் இந்தியாவிலேயே இல்லை என்பது கலைஞரின் கருத்தாகும்.

**படிமக்கலை**

தமிழகத்தின் கலைப்பொருள்களில் 'வெண்கலச் சிலைகள்' தலைசிறந்தவை என்றும், தன்னிகரற்றவை என்றும் உலகப்

---

15. Dr. Stella Kramrisch; The Art of India, P.38

பேரறிஞர்கள் எல்லாரும் ஒருமுகமாகக் கூறிவருகின்றனர். இந்தியாவிலேயே தமிழகத்துச் சிற்பிகள் இத்துறையில் ஈடும் இணையுமற்ற மாபெரும் சாதனைகளாகப் பல அரிய தெய்வத்திருமேனிகளைப் படைத்துள்ளனர். கற்சிற்பங்களைப் போலவே, இவையும் மிகத் தொன்மையான கலைமரபினைப் பின்பற்றி அமைக்கப்பட்டுள்ளன. இவ்வெண்கலச் சிலைகள் சோழர் காலத்திலேயே மிகப் பேரளவில் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் அழுத்தம். பெருமிதம், அடக்கமான நுண்ணியமிக்க வேலைப்பாடு, உயிர்த்துடிப்பு முதலிய பண்புகள் பொருந்தியுள்ளன. அவற்றின் நிலையிலும் இயற்கை எழில் முழுமைத் தன்மையுடையதாய் பொலிவுறுகிறது. அணிகள் அழகாகவும் அளவாகவும் செதுக்கப்பட்டுள்ளன.

பக்திநெறியையும் அதனாலேற்படுவனவாகிய மனவுணர்ச்சிகளையும் இத்திருவுருவங்கள் மிக நயம்பட விளக்குகின்றன. உண்மையான பக்தியில் ஈடுபட்டுள்ள ஓர் அடியாரது உள்ளமும், உடலும் எந்நிலையில் இருக்குமென்பதைத் தமிழகத்து அருளாளர்களான ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் முதலியோருடைய உருவச்சிலைகள் தெளிவாக உணர்த்துகின்றன.

இத்தகைய வெண்கலச் சிலைகளிலே ஒப்புயர்வற்றது நடராசப் பெருமானின் திருவுருவம். கலையழகிலும் மெய்ப்பொருள் கருத்திலும் சிறப்புற்று விளங்குவது இத்திருவுருவம், தெய்வீக உண்மையையும், அழகையும், இன்பத்தையும் வடிவெடுத்த தமிழகக் கலைஞர்கள். நடராச வடிவத்தை ஒரு கலைப்பிழம்பாக உலகிற்கு அளித்துள்ளனர்.

அம்பலவாணரின் அருள்வடிவம், பேரின்பமாகிய சிவபோகத்தைக் குறிக்கிறது. மேலும் சிவபெருமானே படைத்தல், காத்தல், அருளல், மறைத்தல். அழித்தல் எனும் ஐந்து தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் ஐவகை மூர்த்திகளின் வழியாகச் செய்துவருகின்றார் என்பதையும் இத்திருவுருவம் உணர்த்துகிறது. உடுக்கை ஏந்திய கை உலகப் படைப்பையும் அருள்புரியும் கை காத்தலையும், தீயேந்திய கை மும்மலத்தை அழிப்பதையும், ஊன்றிய திருவடி ஆன்மாக்களை மறைத்தலையும், தூக்கிய திருவடி ஆன்மாக்களின் புகலிடம்

(வீடு பேற்றுக்குரிய இடம்) இதுவெனக் காட்டுதலையும் குறிப்பதாக இவற்றிற்கு மெய்ப்பொருள் விளக்கம் தரப்படும். இதனை,

**'தோற்றந் துடியதனிற் தோயும் திதியமைப்பிற்**
**சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா**
**ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்; முத்தி**
**நான்ற மலர்ப்பதத்தே நாடு.'**

என்று 'உண்மை விளக்கம்' கூறுதல் காண்க.

இறைவன் உயிர்த்துடிப்பாகவும், ஒழுங்கான இயக்கமாகவும், அழியாத இளமையெழிலாகவும் கட்புலனாகப் பேரொளியாகவும் விளங்குகின்றான் என்பதையே இந்நடராசத் திருவுருவம் உணர்த்துகிறது. ஐரோப்பியர்கள் கண்ட மிக உயர்ந்த கடவுள் நிலைக்கொள்கையினை விளக்கும் வடிவம் அன்று இது. ஆனால், சமயச் சூழ்நிலையில் இவ்வடிவத்தின் உட்பொருளை ஒருமுறை புரிந்துகொண்டால், நடராசப்பெருமானின் அழகிய திருவுருவத்தில் ஐரோப்பியர்கள்கூட உண்மையான சமய உணர்வினைப் பெற முடியும். தெய்வீக உண்மையையும் தெய்வீக அழகையும் தெய்வீக இன்பத்தையும் உணர்த்தும் கலைப்பிழம்பே மாண்புமிக்க நடராசர் திருமேனி'[16] என்பது இங்கு நினைவுகூர்தற்குரியதாகும்.

இந்திய நாகரிகம் என்றவுடன் உலகிலுள்ள அறிஞர்கள் பலருடைய உள்ளத்தில், தமிழ்க் கலைஞர்கள் இப்படியன், இந்நிறத்தான், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்றெழுதிக் காட்ட, இயலாத இறைவனுக்குக் கற்பித்த கலை வடிவே – நடராசப் பெருமானின் திருக்கோலமே – தோன்றுவதாகக் கூறுகின்றனர். எனவே, ஒரு கூட்டத்தார்க்காவது ஒரு நூற்றாண்டைச் சார்ந்த சிந்தனையாளர்க்காவது ஏற்புடையத்தாகலின்றி, எல்லா நாடுகளிலும். எல்லாக் காலங்களிலும் வாழக்கூடிய மெய்யறிவாளர்களாலும், இறையன்பர்களாலும், கலைஞர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படும் வண்ணம் மெய்ப்பொருட் குறிப்பும் சமயவுணர்வும். கலையழகும் அறிவியல் கொள்கையும் இணைந்தும் இழைந்தும் விளங்கும்

16. Dr. Zimmer: The Art of Indian Asia. P.87.

பேரெழில் மிக்க கலைப்பிழம்பாகிய இவ்வடிவத்தை முதலில் தமது உள்ளக்கிழியிலே வரைந்த மெய்யுணர்வு பெற்ற கலைஞர்களின் ஆழ்ந்த சிந்தனா சக்தியும் அருளுணர்வும் நமக்கு வியப்பையும் விம்மிதத்தையும் அளிக்கின்றன.[17]

**வானநூற் கலை**

தமிழ் ஆண்டுத் தொகுப்பு முறை, வானநூல் ஆராய்ச்சிக்கு நல்ல தூண்டுதல் தரத்தக்கதாயுள்ளது. இன்று இத்துறையில் இரண்டு முறைகள் வழங்குகின்றன. ஒன்று சமயத்தைச் சார்ந்தது. மற்றொன்று வாழ்க்கைத் துறையைச் சார்ந்தது. சமயத்துறை சார்ந்த ஆண்டுத் தொகுப்பு முறை, தெலுங்குப் பஞ்சாங்கம் உட்பட எல்லா ஆசியப் பஞ்சாங்கங்களையும் போலவே மதிமுறை சார்ந்தது. இதுபற்றித் தனிப்படக் குறிப்பிட எதுவுமில்லை. ஆனால், சமயஞ்சாராத ஆண்டுத் தொகுப்பு ஞாயிற்றுச் சார்பானது மட்டுமன்று; முழுநிறை முறையிலேயே ஞாயிற்று வழியாய் அமைவது, அது மேனாட்டு முறைபோல, மதிய முறைப்படி முதலில் கணிக்கப்பட்ட மாதத்தை ஞாயிற்று முறைப்படி கணித்த ஆண்டுடன் பிற்காலத்தில் கொண்டு ஒட்டவைத்த முறையல்ல. சற்றும் மட்டுமழுப்பலில்லாமல் அது வியக்கத்தக்க வகையில் முளைத்த ஞாயிற்று முறையாயுள்ளது. ஏனெனில் அது ஒரு மாதத்தை இத்தனை முழுநாட்கள் என்றுகூட வகுத்தமைப்பதில்லை.

வான் மண்டலம், பன்னிரண்டு மனையகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஞாயிறு ஒரு புது மனையகத்தில் புகும் நேரம் காலையிலும் சரி, நண்பகலாயினும் சரி, இரவாயினும் சரி, அந்தக் கணத்திலேயே மாதம் பிறக்கிறது. நாட்களும் ஞாயிற்றெழுச்சியுடன் தொடங்குகிறது. ஆனால் ஞாயிற்றெழுச்சி என்பதும் இந்தியாவில் ஏதேனும் ஒரு பகுதியில் ஞாயிறு தோன்றும் வேளையன்று. உலக நடு நேர் காட்டில் *(Erator)*, நடுநிரைக்கோடு *(Meridian)* அக்கோட்டுடன் சந்திக்கும் ஒரு குறிப்பிட்ட இலக்கில் ஞாயிறெழும் வேளையாகவே அது அமைந்துள்ளது. தமிழர் தமக்கென்று வகுத்த இந்த நடுநிரைக்கோடு. தமிழர் பண்டை வானாராய்ச்சி நிலையம் அமைந்திருந்த இடத்துக்கு நேராயிருந்ததாக அறிகிறோம்.

17. Percy Brown; Indian Architecture, Vol.I, P.147.

உலகின் இத்தனியுயர் சிறப்புக்குரிய ஆண்டுக் கணிப்பு முறை திராவிடர்க்கு எப்போது ஏற்பட்டது என்று எவரேனும் காலவரையறை கண்டுணர்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அது தனியுயர் சிறப்புடையதென்பதும் மற்றெல்லா ஆண்டுத் தொகுப்பு முறைகளையும்விட அது துல்லியமான வானிலைக் கணிப்பைக் குறியாகக் கொண்டுள்ளது என்பதும் தனிப்படக் குறிப்பிடத்தக்கன. 'இந்தியாவிலேயே, திராவிடமல்லாப் பண்புகளின் தலையீடில்லாத பகுதியிலேயே – அதாவது தமிழகத்திலேயே – திராவிட அறிவு நூல்கள் முழுத் தற்சார்புடன் தொடர்ச்சியான வளர்ச்சி பெற்றிருந்தன என்பதை இது காட்டுகிறது' என்பர் கில்பர்ட் ஸ்லேட்டர்.

**மருத்துவக்கலை**

மருத்துவக்கலையிலும் இந்தியா, தொன்றுதொட்டே சிறப்புற்று விளங்கி வருகிறது. ஆயுர்வேதம், சித்த மருத்துவம் எனும் இருவகை மரபுகளையுடையது இந்திய மருத்துவம். இவற்றில் சித்த மருத்துவம் தனிப்பெரும் செல்வமாகும். சித்தத்தைச் சிவன்பால் வைத்த சித்தர்கள் பலர் வாழையடி வாழையாகத் தமிழகத்தில் தோன்றியுள்ளனர். அவர்கள் பின்னாள் பல்பிணியுடைய மக்கள் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்குரிய வழிவகுத்துக் கொடுத்துள்ளனர். இறையின்பத்தில் திளைப்பதற்கு மனித உடல் நோயற்றதாகஇருக்க வேண்டும் என்பதை அவர்கள் நன்குணர்ந்திருந்தனர் என்பதனை,

**'உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண்டான் என்று**
**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே'**

என்னும் திருமந்திரத்தால் (725) அறிகிறோம்.

எனவே, 'உள்ளம் பெருங்கோயில், ஊனுடம்பு ஆலயம்' என்று அவர்கள் கருதிய காரணத்தினால் அவ்வுடம்பு வளமாகவும் நலமாகவும், நெடுங்காலம் அழியாமல் இருப்பதற்கு அச்சான்றோர்கள் ஒரு மருத்துவ நெறியினை உலகிற்கு

அளித்தனர். பச்சிலைகளையும், வேர்களையும் மருந்துகளாகப் பயன்படுத்தித் தீராத வினைகள் எல்லாவற்றையும் தீர்ப்பதிலே அவர்கள் வெற்றி கண்டுள்ளனர். நாடி பிடித்துப் பார்ப்பதன் மூலம் நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணத்தை ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து உடலுக்குப் பொருந்தும்படியாக அவர்கள் மருந்துகளைக் கொடுத்து வந்தனர். அறுவை மருத்துவம் செய்யாமலேயே மருந்துகளின் மூலம் பலவகை நோய்களைக் குணப்படுத்தும் கலையில் சித்தர்கள் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். அச்சித்தர்கள் சிறப்புமிக்க மருத்துவ நூற்கள் பலவற்றை எழுதியுள்ளனர். அவர்களுள் போகரும், புலிப்பாணி முதலியோரும் சிறப்புடையவர்களாகக் கருதப்படுகின்றனர். அவர்கள் பெயரால், பல மருத்துவ நூற்கள் இன்றும் வழக்கிலிருந்து வருகின்றன. இம் மருத்துவக்கலை இன்றும் தமிழகத்தில் தழைத்து விளங்குகிறது. சித்தர்கள் கண்ட மருத்துவக்கலை 'சித்தமருத்துவம்' எனப்படும் அக்கலை தமிழர்கள் உலகிற்கு அளித்த ஒப்பற்ற மருத்துவக்கலை என்பதனைத் 'தமிழ் மார்க்கம்' (நெறி) என்னும் தொடரால் சான்றோர்கள் போற்றியுள்ளனர்.

> **'மூப்புற் றுச்செவி...........**
> **வாய்ப்புற் றத்தமிழ் மார்க்கத் தின்பொருள்**
> **பவாய்க்கும் சித்த முருகோனே'**

என்று அருணகிரிநாதரால் பாராட்டப்பட்டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

### தெய்வங்கள்

ஒவ்வொரு தேசிய இனத்தின் வாழ்விலும், வரலாற்றிலும் சமயம் முக்கியமான ஓர் இடத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். இந்திய நாகரிகத்தின் உயிர்நாடியாக இருப்பது அதனுடைய சமயமாகும். தொல்பழங்காலம் முதற்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்துவரும் பல்வேறினத்தைச் சேர்ந்த இந்திய மக்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் ஒன்றாக இணைந்ததன் விளைவாகத் தோன்றியதே இன்றைய இந்தியச் சமயமென்றால் அது மிகையாகாது. 'இந்திய சமயத்தை, நாம் திராவிடச் சமயம் எனறு சொல்லுவதே மிகவும் பொருத்தமாகும். ஆரியப் படையெடுப்பாளர்களின் கருத்துக்களினால், அச்சமயம்

ஓரளவிற்கு மாற்றமும் திருத்தமும் பெற்றிருக்கலாம். இந்து சமயத்தின் மாண்புமிக்க தெய்வங்களான முருகன், சிவன், கண்ணன், கொற்றவை திராவிட மக்களின் தெய்வங்கள் என்பதில் கருத்து வேற்றுமைக்கே இடமில்லை. மேலும் இந்துச் சமயத்தின் சிறப்புமிக்க கோட்பாடுகள் சிலவும், ஊழைப் பற்றிய கருத்துக்களும், பக்திநெறியும் வேதங்களில்; இடம்பெறவில்லை. எனவே, நன்கு முதிர்ச்சியடைந்துள்ள இந்திய சமயத்தின் முதன்மையான பண்புகள் அனைத்தும் தனிப்பட்ட ஓரிடத்திற்கு – நாட்டிற்குரியதே ஒழிய, தனிப்பட்ட ஓரினத்திற்கு உரியதல்ல என்பது தெளிவாகிறது. அவை பாரசீக நாட்டின் சமயத்திலோ, கிரேக்க நாட்டுச் சமயத்திலோ, பிற ஆரிய மக்கள் வாழும் நாடுகளிலுள்ள சமயங்களிலோ காணப்படவில்லை'[18]

இந்திய நாகரிகம் அரும்பத் தொடங்கிய காலத்திலேயே திராவிட மக்களின் சமய நம்பிக்கைகளும், வழிபாட்டு நெறிகளும், பழக்கவழக்கங்களும் ஆரியருடைய சமய வாழ்க்கையில் கலந்துவிட்ட காரணத்தால் அவற்றை எளிதில் இனம் கண்டறிய இயலவில்லை. ஆனால், ஐரோப்பிய – ஆரியர், இந்து ஆரியர்களின் சமயங்கள் ஒரே வகையானவையாக இருக்கவில்லை. இன்றைய அல்லது வேதகால ஆரிய சமயத்திலிருந்து இந்திய ஐரோப்பியருக்கும் இந்திய ஆரியர்களுக்கும் பொதுவான சமயக் கொள்கைகளைக் கொண்டு ஆராய்ந்து பார்த்த அறிஞர்கள், வேதகாலத்திலேயே திராவிடர்களுடைய சமயக் கொள்கைகள் ஆரியமதத்தைத் தன் வண்ணமாகத் திரிக்கத் தலைப்பட்டுவிட்டன என்று மொழிகின்றனர்.

தமிழகம் இந்து சமயத்திற்கு வழங்கியுள்ள மாண்புமிக்க பரிசு, முழுமுதற் பொருளாகிய சிவபெருமானைப் பற்றிய கருத்துகளாகும். இருக்கு வேதத்தில் அழித்தற் கடவுளாக விளக்கும் உருத்திரன் வேறு அன்பின் ஊற்றாய், அழகின் உறைவிடமாய், அறிவுக் களஞ்சியமாய், அருளே வடிவாய் விளங்கும் சைவசமயத்தின் சிவன் வேறு. ஆரியரும் திராவிடர்களும் காலப்போக்கில் கொண்ட நெருங்கிய தொடர்பின் விளைவாகவும். நாகரிகப் பண்பாட்டில் உண்டான

18. Dr. A.L.Basham: The Wonder that was India, P.375-76.

கலப்பின் காரணமாகவும் தோன்றியதே 'பரமசிவம்' எனும் பெருந்தெய்வமாகும். ஆரிய-திராவிடப் பண்பாட்டின் கூறுகள் பல துறைகளில் கலந்து, ஒரு புதிய கலவை நாகரிகத்தை உருவாக்கியதைப் போன்றே, சமயத்துறையிலும் புதியதொரு கலவைச் சமயம் உருவாக்கப்பட்டது. அச்சமயத்தை இன்று 'இந்துசமயம்' என்ற பெயரால் உலகம் போற்றுகிறது. இத்தகைய நாகரிகக் கலப்பு உண்டான காலத்தில் ஆரியருடைய 'உருத்திரனின்' பண்புகளையும், தமிழருடைய சிவபெருமானின் பண்புகளையும் ஒன்றாகச் சேர்ந்து புதிய வடிவில் தலைசிறந்த பண்புகளைக் கொண்ட ஓர் ஒப்பற்ற 'பரம்பொருளை'ப் பண்டை இந்தியாவின் சான்றோர்கள் படைத்தளித்தனர்.[19]

இவ்வாறே, தமிழர்களின் அழகுக் கடவுளாகிய முருகனுடைய பண்புகளோடு ஆரியர்களுடைய போர்க்கடவுளாகிய காத்திகேயனின் பண்புகளை இணைத்து, சுப்பிரமணியம் எனும் இந்து சமயத் தெய்வத்தை மூதறிஞர்கள் படைத்துள்ளனர். முருகனின் மனைவியாகிய வள்ளியும், கார்த்திகேயனின் துணைவியாகிய தெய்வயானையும், சுப்பிரமணியக் கடவுளின் காதற்கிழத்தியும் பட்டத்தரசிய்யுமாகக் கொள்ளப்பட்டனர்.[20]

'திருமால்' கரியநிறமுடையவராகவே போற்றப்படுகிறார். கிருஷ்ணன் எனும் சொல்லிற்குப் பொருள் கருமை என்பதாகும். இருக்கு வேதத்தில் 'கிருஷ்ணன்' எற சொல் கருமை, மேகம் எனும்பொருள்களிலேயே வழங்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் கருநிறமுடைய கடவுளைக் குறிப்பிடுவதற்கு அச்சொல் பயன்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். வேதங்களில் முழுமுதற் பொருளாகப் போற்றப்பட்ட நாராயணனும், பண்டைத்தமிழ் மக்களால் 'மாயோன்' என்று போற்றி வழிபடப்பட கண்ணனும் ஒரே தெய்வமாக கருதப்பட்ட காலத்தில் தோன்றியதே 'திருமால்' எனப்படும் காத்தல் கடவுளாகும்.[21]

---

19. Dr.Ananda K.Coomaraswamy: The Dance of Siv P.65.

20. கில்பர்ட் ஸ்லேட்டர்: இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, ப. 63-64. தமிழாக்கம்: கா.அப்பாதுரை.

21. Sir Charles Elliot: Hinduism and Buddhism, P.XV.

கண்ணனின் காதலியாக நப்பின்னை எனும் நங்கை. பழந்தமிழ் இலக்கியங்களில் சிறப்பாகப் பேசப்படுகிறாள். கண்ணனும் நப்பின்னையும் இணைபிரியாத இலட்சியக் காதலர்களாகத் தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளனர். பிற்காலத்தில் ஆழ்வாளர்கள் நப்பின்னையைத் திருமாலின் சக்தியாகவே கொண்டு தொழுது போற்றியுள்ளனர். கண்ணன் நப்பின்னையோடுகூடி ஆடிப்பாட மகிழ்ந்த இன்பக்களியாட்டங்களைக் 'குரவைக் கூத்து' என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது.

**மாயவன்றன் முன்னினொடும் வரிவளைக்கைப்**
**பின்னையொடும்**
**கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை**
**புறஞ்சோரா'.**[22]

தமிழன் கண்ட இலட்சியக் காதலர்களாகிய கண்ணன் – நப்பின்னை காதல் விளையாட்டுக்கள், கி.பி.பத்தாம் நூற்றாண்டிற்குப் பிறகு வட இந்தியாவில் இயற்றப்பட்ட பாகவத புராணமும், அரிவம்சமும் கண்ணன் – இராதைக் காதல் களியாட்டமாகத் திரித்துக் கூறுகின்றன. ஆயர்பாடியின் எருமன்றத்தில், மாயவன் நப்பின்னையோடு ஆடிப்பாடி மகிழ்ந்த இன்ப விளையாட்டை, வடநாட்டுச் சூழலுக்கேற்ப பிருந்தாவனத்தில் 'கண்ணனும் – இராதையும்' கோபியரோடு சேர்ந்து விளையாடிய 'இராசக்கிரீடையாக' அவரக்ள் சித்தரித்துள்ளனர். இதனால், தமிழகத்திலிருந்து வடக்கு நோக்கி வீசிய 'பக்திநெறி' எனும் தென்றல், பண்டைத் தமிழருடைய காதற்கடவுள் பற்றிய பழங்கதையாகிய நறுமணத்தை வட நாட்டிற்குக் கொண்டு சென்று பரப்பியமை புலனாகிறது.[23]

இவ்விருபெரும் கடவுளர்களும் ஒரே முழுமுதற் பொருளின் இருவேறு வடிவங்கள் என்பது தொன்றுதொட்டு தமிழரிடையே நிலவிவரும் நம்பிக்கையாகும். 'திருமாலும் சிவனும் ஒரே தெய்வத்தின் இருவேறு இடவேறுபாடுகளாகும். திருமால் வடபுலத்துக்கும் முல்லை நிலத்திற்கும், சிவன் தென்புலத்துக்கும்

22. Dr.S.K.Chatterji, Bulletin of the School of Oriental Studies, Vol.III (1935-1937), P.122.
23. A.P.Karmarkar: The Religins, of India, Voll. P.53.

மருத நிலத்திற்கும் உரியவராகக்கூடும். ஆனால் மேற்குறிப்பிட்டபடி இரண்டும் வேதத் தெய்வமல்ல.'[24]

பௌத்த சமயத்தில் 'தாரை' எனும் பெண் தெய்வ வழிபாடு தோன்றிய பிறகு, அதற்கு எதிராகப் பெண் தெய்வ வழிபாடு இந்து சமயத்தில் செல்வாக்குப் பெற்றது என்பர். இருக்கு வேதத்தில் அன்னை வழிபாட்டைப் பற்றிய குறிப்புகள் ஒன்றும் கிடையாது. உருத்திரனைப் பற்றி குறிப்பிடுகிறபொழுது 'அம்பகம்' எனும் சொல்லை இருக்குவேதம் பயன்படுத்துகிறது. ஆனால் பிற்காலத்திய அன்னை வழிபாட்டோடு அது எத்தகைய தொடர்பும் கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. யஜுர் வேதத்தில்தான் 'அம்பிகை' பற்றிய குறிப்பு காணப்படுகிறது. தைத்திரீய ஆரணியத்தில் முதன்முதலாக உருத்திரன் உமை எனப்படும் 'அம்பிகையின்' கணவராகக் குறிப்பிடப்படுகிறார்.

ஆனால், அன்னை வழிபாடு இந்தியாவில் சிந்துவெளி நாகரிக காலத்திலேயே சிறப்புற்று விளங்கியதை மொகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள முத்திரைகள் தெரிவிக்கின்றன. 'உமா' எனும் பெயரைப் பற்றி ஆராய்ந்த வடமொழி அறிஞர்கள் 'வித்தியா' என்னும் பொருளிலேயே அச்சொல் யஜுர் வேதத்திலும், உபநிடதங்களிலும் கையாளப்பட்டதாகக் கூறுகின்றனர். எனவே, அம்மா எனும் திராவிட மொழிச் சொல்லின் சமஸ்கிருத ஆக்கமாகவே உமா எனும் வடமொழிப் பெயர்அமைந்திருக்கக்கூடும்[25] என்பர்.

திராவிட மக்களிடத்தில் முதலில் தோன்றியது அன்னை வழிபாடு, வீரத்திற்கும் வெற்றிக்கும், இனவிருத்திக்கும் செழிப்பிற்கும் காரணம் சக்தியே என்ற நம்பிக்கை பண்டைத் தமிழ் மக்களிடத்து இருந்து வந்ததைப் பழந்தமிழ் இலக்கியங்களால் அறிகிறோம். தமிழ் மக்கள் அன்னையினைக் காடுகிழாள். காடுகெழு செல்வி, கொற்றவை, காளி முதலிய பல பெயர்களால் குறிப்பிடுவர். சங்க காலத்தில் தாய்க் கடவுள் வெற்றிக்குரிய வீர தெய்வமாகவே கருதப்பட்டாள். எனவே, 'கொற்றவை' எனும் பெயரால் அவளைக் குறிப்பிட்டனர். போருக்குச் செல்லும்போது படைவீரர் வெற்றித் திருவாகிய அன்னையை வழிபட்டுச் செல்லுவர்.

---

24. P.T.Srinivasa Iyengar: Pre-Aryan Tamil culture, P.21-23.
25. P.T.Srinivasa Iyengar: Life in the Age of the Mantras, P.41 and History of the Tamils, P.612.

காடுகிழாள் வழிபாடு, மக்கள் நாகரிகமுறாத நிலையில் வேடர்களாக அலைந்து கொண்டிருந்த காலத்தில் உண்டாயிற்று. காடுகிழாள் பாலைத் தெய்வம், இவ்வழிபாடு உயிர்ப் பலி (விலங்கு, மனிதர்)யோடு நடைபெற்றது. ஆனால், சிலப்பதிகார காலத்தில் இவ்வழிபாடு கொடுமை நிறைந்ததாகத் தோன்றவில்லை. தமிழ் மக்களின் அறிவு பண்பட்ட காலத்தில், அன்னைத் தெய்வம் அன்புமயமான தெய்வமாகவும். அருள் வடிவமான தெய்வமாகவும் கருதப்பட்டாள். காடுகிழாள், 'உமை' என்னும் அருட்சக்தியாகக் கொள்ளப்பட்டாள். முருகக் கடவுளைக் 'கொற்றவை சிறுவன்' என்று திருமுருகாற்றுப்படை குறிப்பிடுகிறது.

சக்தி வழிபாட்டு நெறி (சாக்த சமயம்) மேம்பாடுற்ற காலத்தில், 'அன்னையே முழுமுதற்பொருள்' என்ற செல்வாக்கு பெற்றது. நாடெங்கும் சக்திவழிபாடு பெருவழக்காசிய காலத்து, சக்திவழிபாடுகளைக் கூறும் சாக்த ஆகமங்கள் தோன்றின. சாக்த ஆகமங்கள் 77 என்பர். சிந்துவெளியில் அரும்பிய சக்தி வழிபாடு. தமிழ்நாட்டில் 'சிவமின்றேல் சக்தியில்லை' 'சக்தியின்றேல் சிவமில்லை' என்னும் உயர்ந்த சிவசக்தி வழிபாடாக மலரந்தது. பின்னர், வடநாட்டில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று பரவிய சக்திவழிபாடு, தாந்திரீக சமயத்தோடு பின்னிப்பிணைந்து, பலதிறப்பட்ட சக்தி வழிபாடுகளாகச் சிதைந்து போயிற்று. ஆயினும் இந்து சமயத்தில் பெருஞ்சிறப்புடையதாக விளங்கும் சக்திவழிபாட்டு நெறி, திராவிட மக்களுடைய அன்னை வழிபாட்டு நெறியின் திருந்திய வடிவமே என்பதை மறுக்கவோ, மறக்கவோ மறைக்கவோ முடியாது.

### பக்தி நெறி

இந்து சமய வழிபாட்டு நெறியில் இருவகை முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. தீயினை வளர்த்து அதன் மூலம் தெய்வ வழிபாட்டை நடத்தும் வேள்வி நெறி, வேதகாலம் முதல் சிறப்புமிக்க ஒன்றாகப் போற்றப்பட்டு வருகிறது. இதனை நாம் வேள்வி நெறி எனலாம். மற்றொன்று பூவினைக்கொண்டு இறைவனுடைய பொன்னடிகளைப் போற்றி வழிபடுவதாகும். இதனைப் 'பூசெய் நெறி' என்பர். பூவினைக் கொண்டு

இறைவழிபாடு செய்யும் புனிதநெறி வேதகால சமயத்தில் இடம்பெறவில்லை. வேள்வி நெறியை 'நிகமம்' (Nigama) என்னும் வடமொழிப் பெயராலும் பூசெய் நெறியை 'ஆகமம்' (Agama) என்னும் வடமொழிப் பெயராலும் சான்றோர்கள் குறிப்பிடுகின்றனர்.[26] ஆரியரும் ஆரியரல்லாதாரும் ஒன்றுபட்ட காலத்தில், அவர்களுடைய வழிபாட்டு நெறிகளும் கலப்புற்றன. ஆகமநெறியிலும் வேள்வி இடம் பெறலாயிற்று. ஆயினும், தென்னாட்டுக் கோயில்களில் பேரளவிற்கு இன்னும் 'பூசெய்' நெறியாகிய ஆகம வழிபாட்டு முறையே பின்பற்றப்பட்டு வருகிறது.

தமிழில் இறைவழிபாட்டைக் குறிக்கும் 'பூசை' என்னும் சொல், வடமொழியில் கடன்வாங்கப்பட்டபொழுது 'பூஜா' எனத்திரிந்தது. பூசை எனும் சொல். பூ செய் எனும் இரண்டு சொற்களின் சேர்க்கையாகும். பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாடு (புஷ்பகருமம்) என்பது இச்சொல்லிற்குப் பொருள் என்று மொழியியலறிஞர்கள் கூறுவர்.[27]

வேதகாலத்தில் ஆரியர் முக்தி வளர்க்கும் தீ வழிபாட்டையே செய்து வந்தனர். முக்தி வழிபாட்டில் தாங்கள் வழிபட்ட இயற்கைச் சக்திகளாக தீ, காற்று, ஞாயிறு, அருணன், இடி, மழை, நிலம் நீர் முதலியவற்றிற்குச் சினம் உண்டாகாமல் தடுப்பதற்காக்கத் தங்களிடம் இருந்த ஆடு, மாடு, பார்லி, பால், வெண்ணெய், கோதுமை, சோமபானம் போன்ற பொருள்களை வேள்வித்தீயில் இட்டு இவ்வியற்கைச் சக்திகளின் அருளை வேண்டி வணங்கினர். இத்தகைய வழிபாடு மிக எளிமையானது; நாகரிகத்தின் தொடக்க காலத்தில் மக்கள் மேற்கொண்டு ஒழுகியதுமாகும்.

பூவினைக் கொண்டு செய்யப்படும் வழிபாடு வேறுவகையானது. அது சிறந்ததோர் அடிப்படையில் எழுந்த வழிபாட்டு முறையாகும். இப்பேரண்டம் முழுவதும் ஒரு தெய்வீக ஆற்றல் நிறைந்திருப்பதை, உணர்ந்து அம்மாபெரும் தெய்வீக ஆற்றலோடு மனிதன் தான் ஒன்றுபடவும் கலந்து இன்புறவும் விரும்பும்

---

26. சிலப்பதிகாரம், ஆய்ச்சியர் குரவை, ஆடுநர்ப்புகழ்தல்.

27. V.R.R. Dikshitar: The Furana Index Vol.II, P.72.

நோக்கத்தோடு செய்யப்படும் வழிபாடே 'பூசை'யாகும். இறைவன் இருப்பில் சிறிதும் ஐயுறாத மக்கள், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளைத் தத்தம் வழிபடு தெய்வ உருவங்களாக அமைத்து. அவற்றைத் 'தொழுது மலர் தூவி துதித்து' வழிபடுகின்றனர்.

**'பூப்பலி செய்மின் (சிலப்பதிகாரம் – குன்றக்குரவை)**
**பூமாலை புனைந்து ஏத்தி (திருநா. தேவா.245-2)**
**தொழுது மலர்தூவித் துதித்து (திருநா.தே.135-8)**
**'புண்ணியம் செய்து நல்ல புனலொடு மலர்கள் தூவி**
**எண்ணுமின் எந்தை நாமம்' (திருவாய்மொழி 4,6)**
**தொழுது மலர்கொண்டு தூபம் கையேந்தி'** (திவ்வி.பிர.2139.)

எனவே, பூஜை என்ற வடசொல் 'பூசெய்' எனும் தமிழ்ச் சொல்லின் திரிபாக வடமொழியில் இடம்பெற்றது என்பர்.[28]

பூசெய் வழிபாடு ஆகமநெறியில் முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது. இந்நெறியில் தியானமும் உருவ வழிபாடும் சிறப்பிடம் பெற்றுள்ளன. உருவ வழிபாடு என்பது வேதகால சமயத்தில் இடம் பெறவில்லை. பிற்காலத்தில் ஆரியரல்லாத மக்களுடைய செல்வாக்கின் காரணமாகவே அது பிராமண சமயத்தில் இடம் பெற்றதாகத் தெரிகிறது.[29]

ஆகமங்களில் சொல்லப்படும் பாடவல்லார் நெறி (சரியை), ஆடவல்லார் நெறி (கிரியை), நாடவல்லார் நெறி (யோகம்), தேடவல்லார் நெறி (ஞானம்) என்ற நான்கு நெறிகளுள் முதலிரண்டும் 'தொண்டு நெறி (கரும மார்க்கம்)' நிறைந்தும், மற்றிரண்டும் 'அறிவுநெறி (ஞானமாக்கம்)' நிறைந்தும் உள்ளனவாகும். இறைவனை அகத்தே நாடுதலும், தேடுதலுமாகிய அறிவு நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவது மக்கள் பலருக்கும் அரிய செயலாகும். பாடலம் ஆடலுமாகிய ஒழுக்கமும் நோன்புமாகிய தொண்டுநெறி யாவரும் எளிதில் கடைப்பிடித்து ஒழுகுதற்குரிய பக்தி நெறியாகும்.[30]

---

*28. கில்பர்ட் சிலேட்டர்: இந்திய நாகரிகத்தில் திராவிடப் பண்பு, பக்.98*

29. A.P.Karmarar: The Religions of India. P.96.
30.. Ibid, P.101.

தமிழகத்தில் தோன்றிய ஆழ்வார்களும், நாயன்மார்களும் பக்தி நெறியைப் போற்றி வளர்த்த சான்றோர்களாவர். 'வேதம் ஓதுவதனால் பயனிலை; சாத்திரங்களின் உட்பொருளைப் பிறரிடம் கேட்டறிவதனால் உண்டாகும் பயன் ஒன்றும் இல்லை. பல அரிய அறநூல்களை நாளும் ஓயாது பயில்வதனாலும் பயன் விளையாது. வேதத்தின் ஆறு அங்கங்களைக் கற்று அதன் பொருளினை உணர்வதனால் அடையக் கூடியது ஒன்றுமில்லை. ஈசனை உள்ளத்தால் நினைந்து, மனத்தினால் சிந்தித்து, வாயினால் வாழ்த்த வல்லார்க்கே வீடுபேறு கிடைக்கும் என்று திருநாவுக்கரசர் பக்திநெறியின் அடிப்படைப் பண்பினை எடுத்தியம்பியுள்ளார். இவ்வழிபாட்டு நெறி, தமிழர்கள் உலகிற்கு அளித்த சிறந்ததொரு கடவுள் நெறியாகும். 'அன்புள் உருகி அழுது அரற்றி, என்பும் உருக இராப்பகல் இறைவனைச் சலம்பூலொடு போற்றி, வழிபடுமாறு சொல்லுவதே பக்திநெறி. தமிழகத்தில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றணாடு வரை பக்திவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அக்காலத்தில் தோன்றிய அருளாளர்கள் காதலாகிக் கசிந்துருகி கண்ணீர் மல்கி, இறைவனைப் போற்றிப் பாடினர். மனமாகிய கல்லைப் பிசைந்து கனியாக்கும் அவர்களுடைய அருட்பாடல்களே தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் எனப்படும் பக்தி இலக்கியங்களாக ஒப்புயவர்வற்று விளங்குகின்றன.

தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கம், வடவேங்கடத்தினைக் கடந்து, வட இந்தியாவின், பல்வேறு பகுதிகளில் சென்று பரவியது. இதனை,

> **'பக்திநெறி தமிழகத்தில் தோன்றியது;**
> **மராட்டியத்தில் வளர்ந்தது;**
> **குஜராத்தில் மலர்ந்தது;**
> **இராசபதனத்தில் இருளகற்றியது,**
> **வங்காளத்தில் வான்புகழ் பெற்றது.'**

என்று வடமொழியிலுள்ள பௌஷியபுராணம் போற்றியுள்ளதை இங்குக் கருதத்தக்கதாகும்.

எனவே, '**பிராமண சமயத்தை இந்து சமயமாக மாற்றிய பக்தி நெறி, இந்திய நாகரிகத்தின் மலர்ச்சிக்குத் தென்னிந்தியா அளித்த முதன்மையான பரிசு**' எனலாம்.

**மெய்யறிவு**

இந்திய தத்துவ ஞானத்தை வளர்த்து, வளம்பெறச் செய்த பெரியர்களுள் தென்னாட்டிலே தோன்றியவர்கள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளனர். அவர்களுடைய தொண்டு மிகப் பரந்துபட்டதாகவும், அதே சமயத்தில் மிக ஆழமாக வேரூன்றியதாகவும் உள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது. பிரமசூத்திரத்திற்கு மாபெரும் உரைவிளக்கம் எழுதி, 'அத்வைதம்' எனும் வேதாந்தத்தை, சிறப்புமிக்க தத்துவ நெறியாக விளங்குமாறு செய்த சங்கரர், பண்டைத் தமிழகத்தில் தோன்றியவர் என்பது நாடறிந்த உண்மை. இன்றைக்கு இந்தியச் சிந்தனையில், வேதாந்தம் அறிவின் ஒளிவிளக்காய் விளங்குவதற்குக் காரணமாக இருப்பவர் சங்கரேயார்.

காஞ்சிக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் தோன்றிய இராமானுசர், வைணவ சமயத்திற்கு 'விசிஷ்டாத்துவைதம்' எனும் தத்துவ அடிப்படையை அமைத்துத்தந்தார். தமிழகத்தில் ஆழ்வார்களின் அருள் மொழியாகிய திவ்வியப் பிரபந்த பாசுரங்களின் வாயிலாக உருவான. வைணவ சித்தாந்தத்தை முறைப்படுத்திக் கொடுத்ததன் மூலம் இராமானுசர் இந்திய தத்துவ வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றியுள்ளார்.

தமிழகத்திற்குத் தத்துவ உலகில் போன்றாப் புகழைத்தேடிக் கொடுத்துள்ள 'சைவசித்தாந்தம்' எனப்படும் தத்துவ நெறியை முதன் முதலாக அறிவியல் முறைப்படி 12 சூத்திரங்களாக வகுத்துக் கொடுத்தவர் மெய்கண்டார் என்ற தமிழ்ச் சான்றோராவர். இவ்வரிய தத்துவம் இந்திய மக்களின் சிந்தனை முறையின் தெளிவிற்கு ஓர் உரைகல்லாகும். 'சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை மிக விரிந்ததும், பெரும் செல்வாக்குடையதும், ஐயத்திற்கு இடமின்றி உண்மையிலேயே பெரு மதிப்பிற்குரியதும்,

இந்திய நாட்டிலுள்ள சமயக் கொள்கைகளிலெல்லாம் தலைசிறந்ததுமாகும். தென்னிந்திய மக்களின் மிகச் சிறந்த பேரறிவின் பெருவிளைவே சைவ சித்தாந்தமாகும். இறை – உயிர் – மக்கள் தன்மை –உலகியற்கை – அறியாமை – துன்பம் – காணப்படாத மறுமை நிலைகள் என்பனவற்றைக் குறித்த சிக்கலான பொருள்களைத் தெளிந்து கொள்ளும் இத்தகைய சிறந்த முயற்சி பற்றி, இதுவரை ஆங்கிலத்தில் முற்றிலும் எடுத்து விளக்கப்படவேயில்லை'[31] என்னும் டாக்டர் ஜி.யூ. போப்பின் கருத்து, சைவ சித்தாந்தத்தின் அருமை பெருமைகளை அறிவிப்பனவாகும்.

மனித இனத்தின் சிந்தனையிலேயே மிகவும் முழு நிறைவுடையதும், திறமையானதுமாகிய சிந்தனைமுறை சைவ சித்தாந்தம் என்று அறிஞருலகம் வியந்து போற்றுவது இங்குக் கருதத்தக்கது. இவ்வாறு தொன்மைமிக்க இலக்கிய மரபும், மாண்புமிக்க தத்துவமுறையும் இன்றும் இந்தியாவில் உயிர்பெற்று உலவுவதற்குத் தமிழகம் ஆற்றியுள்ள தொண்டு பேரளவினதாகும்.

இத்தமிழகத்தால் மூன்று உலகப்பெரும் சமயங்களாகிய யூத சமயமும், கிறித்துவமும், இஸ்லாமும் இந்தியாவில் முதன் முதலாக வேரூன்றுவதற்கு ஆதரவான இடத்தைப் பெற்று மதிப்புற்று இந்தியப் பெருநாட்டில் பரவின.

31. 'Homa or the Fire-Ritual and Puja or the Flower Ritual. Represent two distinct worlds of religious thought or conception. The Flower Ritual of the Puja is unknown to the Vedic religion; there the ritual is everywhere homa.' – Dr.S.K.Chatterji Racial and Cultural Intermixture in India, Tamil Culture Vol. VIII P.319.

**வாணிக நிலையங்கள்**

தென்னாட்டு வாணிக அமைப்புகளும் நிலையங்களும் இந்திய நாகரிக வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணிகள் இங்குக் குறிப்பிடத்தக்கன. வட இந்தியாவின் பொருளாதாரமும் வாணிகமும், உள்நாட்டு வாணிக வழிகளைச் சார்ந்திருந்தன. வாணிகச் சாத்துக்கள் உள்நாட்டு வாணிகத்தையே போற்றி வளர்த்தன. ஆனால், தென்னாட்டில் 'வாணிகம்' என்பது பெரும்பாலும் திரைகடலோடி திரவியம் தேடும், கடல் வாணிகமாகவே சிறப்புற்று விளங்கியது. ஆகவே, கடல் வாணிகத்தை நடத்துவதற்கத் தென்னாட்டில் பல அமைப்புகள் தோன்றின. அவை நாநாதேச திசையாயிரத் தைஞ் நூற்றுவர், மாணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சு வண்ணத்தார் எனப்படும் வாணிகக் குழுக்களாகும். அவை கடல் கடந்த நாடுகளில் சென்று வாணிகம் செய்வதற்கு இந்திய மக்களுக்கு ஆக்கமும் ஊக்கம்ம் அளித்தன.[32]

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மலேசியாவில் தகோபா என்னும் இடத்தில் 'மணிக்கிராமம்' என்ற தமிழ்நாட்டு வணிகர் சங்கம் ஒன்று இருந்து வந்தமை ஒரு கல்வெட்டால் தெரிகிறது. சீகாழிக்கு அருகில் உள்ள நாங்கூரைச் சேர்ந்த வாணிகன் ஒருவன், அவனி நாரணன் என்ற சிறப்புப் பெயரையுடைய மூன்றாம் நந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் (கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில்) மலேயாவின் பெராக்கு மாவட்டத்திலுள்ள இவ்வூரில் குளம் ஒன்றை வெட்டி, அதன் கரையில் கல்வெட்டொன்றைத் தமிழில் பொறித்துள்ளான்.[33]

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் இந்திய நாகரிகத்தைப் பரப்புவதில் இவ்வாணிக நிலையங்கள் அரும்பெருந்தொண்டாற்றியுள்ளன.[34] இவை தாயகத்தில்

32. Dravidic Studies Ed. By M.Collins Vol.III PP. 59-60.
33. Dr.S.K.Chatterji: The History and Culture of the Indian people. Vol.I Vedic Age. P.160.
34. A.B.Keith: The Religion and Philosophy of the Vedas and Upanishads.

தனிச்சலுகைகளையும் உரிமைகளையும் தத்தம் அரசர்களிடம் பெற்றிருந்தன. கடல் கடந்த நாடுகளில் அவை வாணிகம் செய்து வந்தன. இவ்வகையில் இந்தியப் பொருளாதாரச் செழிப்பிற்கு அவை காரணமாக அமைந்தன. இவ்வெளிநாட்டு வாணிகம் தமிழகத்தின் அரசியல் வரலாற்றில் சிறப்புமிக்க ஓர் இயலாக விளங்குகிறது.[35]

**கடற்பேரரசு**

இந்திய வரலாற்றில், வேறெந்தப் பேரரசும் கனவில்கூடக் கருதாத 'கடல்கடந்த பேரரசினைப்' பிற்காலச் சோழப் பேரரசர்கள் நிறுவினர். இலங்கையும் இலட்சத் தீவுகளும், அந்தமான் நிக்கோபார் தீவுகளும் தென்கிழக்காசிய நாடுகளுள் பெரும்பகுதியும் சோழப் பேரரசரின் ஆட்சிக்குட்பட்டிருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கது. இத்தகைய மிகப் பெரிய கடல் பேரரசை நிறுவுவதற்கேற்ற ஆற்றல்மிக்க கடற்படையைச் சோழப் பேரரசர்கள் பெற்றிருந்ததைப் போன்று, வேறெந்த இந்தியப் பேரரசும் பெற்றிருந்ததாகத் தெரியவில்லை. இந்திய நாகரிகம் கடல் கடந்த நாடுகளில் பரவுவதற்கு இப்பேரரசு பேருதவி புரிந்தது. மேலும் இந்தியாவின் அரசியல் ஆதிக்கத்தை அந்நாடுகளில் நிலைநாட்டவும் அது வழிகோலியது.[36]

இன்றைய நாகரிகத்தின் சிறப்புமிக்க பல்வேறு பண்புகளை உருவாக்கி உதவியது தமிழ்ப் பண்பாடு. ஆனால், அதனுடைய அரும்பெரும் தொண்டினைப் பன்னெங்காலமாக அறிஞர்கள் புறக்கணித்தே வந்துள்ளனர்.[37] ஓர் அழகிய மாளிகையின் அடிப்படை, வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு எவ்வாறு தோன்றாதோ, அதைப்போன்று இந்திய நாகரிகத்தின் அடிப்படையாக அமைந்துள்ள தமிழ்ப் பண்பாடும் வெளிப்படாது மறைந்து கிடக்கிறது. இந்நாட்டில் ஆரியர் படையெடுத்து வந்த

---

Vol.P.31.

35.. P.T.Srinivasa Iyengar: of Indian Philosophy, PP.129-135.

36. Dr.S.Krishnaswami Aiyangar: Some Contributions of South Indian Culture. P.V.I.

37. Dr.G.U.Pope: The Tiruvacagam (English Translation) appendix-Note XI.P.IXXIV.

நாள்முதல். ஆங்கிலேயர் ஆண்டு, அகன்றுபோன இந்நாள்வரை அந்த அடிப்படையின் மீது எழுப்பப்பட்டுள்ள மேற்கோப்புக் கட்டங்களின் ஒவ்வொரு பகுதியையும் விடாமல் யாவரும் கண்டு, களிப்படைந்து வருகின்றனர்.[38] ஆனால். அத்தகைய நாகரிகத்தின் திருக்கோயிலைத் தாங்கி நிற்கும் அடிப்படை யாதென்பதை ஆராய்ந்தறிவார் மிகச் சிலராகவே உள்ளனர். அம்மாபெரும் மாளிகையைத் தாங்கி நிற்கும் தமிழ்ப் பண்பாடெனும் அடிப்படை, காலமெனும் மணலால் மூடப்பட்டு ஆழப் புதைந்து கிடக்கிறது.

38. Dr.Kamil zvelebil: The Tamil Contribution to World Civilisation, Tamil Culture, Vol.V.P.296

# 4

# சோழர் காலத்திய சமுதாய அமைப்பு

ஒரு நாட்டின் வரலாற்றை வரைவதற்கு அந்நாட்டு இலக்கியம், தொல்பொருள் சின்னங்கள், கல்வெட்டுகள், பழங்காசுகள் முதலியனவற்றை ஆதாரங்களாகக் கொள்ளுவது வழக்கம். வரலாறு எனும் மாளிகையைக் கட்டுவதற்குத் தேவைப்படும் அடிநிலமாக இலக்கியத்தையும், செங்கற்களாகத் தொல்பொருள் சின்னங்களையும், சுண்ணாம்புப் பசையாகக் கல்வெட்டுகளையும், எஃகு கம்பிகளாகப் பழங்காசுகளையும் கூறலாம். இவற்றுள் கல்வெட்டுகள், வரலாற்று மாளிகையைக் கட்டுக்கோப்புடையதாகவும், கவர்ச்சியுடையதாகவும் செய்வதற்குப் பயன்படும் சாந்தாக விளங்குகின்றன. ஒரு நிகழ்ச்சியையோ, செய்தியையோ, பொருளைப் பற்றியோ கல்லில் வெட்டி, அக்கல்லை மக்கள் பலரும் பார்க்கத்தக்க பொதுவிடங்களிலோ, கோயில்களிலோ பதித்து வைப்பது தொன்றுதொட்டு, நம் நாட்டில் இருந்துவரும் வழக்கமாகும். அவ்வழக்கம் சோழப்பேரரசர்கள் காலத்தில் (கி.பி.850 – கி.பி.1218) பெருவழக்காயிற்று.

இந்திய வரலாற்றில் சோழப் பேரரசு தனிச்சிறப்புடையதாகத் தோன்றுகிறது. சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகளுக்குத் தென்னிந்தியாவை ஒரு குடைக் கீழ்க் கொண்டுவந்து சோழப் பேரரசர்கள் ஆட்சி செய்தனர். அக்காலத்தில் அவர்கள் வழங்கிய செப்பேடுகளும் பொறித்த கல்வெட்டுகளும் எண்ணற்றவை இன்றைக்கு நமக்குக் கிடைத்திருப்பவை ஐயாயிரத்திற்குக் குறைவானவையாகும். அவற்றை அரசரால் பொறிக்கப்பட்டவை என்றும், அரசாங்க அதிகாரிகளாலும் குறுநில மன்னர்களாலும் பொறிக்கப்பட்டவை என்றும், அரச குடும்பத்துப் பெண்மணிகளால் பொறிக்கப்பட்டவை என்றும் வாணிகர்களால் பொறிக்கப்பட்டவை என்றும் பலவகையாக நாம் பாகுபாடு செய்யலாம். அவையாவும், அன்றைய அரசியல் நிலையையும் நாகரிகப் பண்பாட்டு வரலாற்றையும் அறிவதற்குப் பேருதவியாக

உள்ளன. அவற்றின் துணையைக் கொண்டு, சோழர் காலத்திய சமுதாய அமைப்பினை இக்கட்டுரை விளக்க முயல்கிறது.

### சமுதாயம்

சமுதாயம் என்பது நெறிமுறைகளையும், மரபுகளையும் பழக்கவழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட ஓர் அமைப்பு எனலாம். அவ்வமைப்பு, அதிகாரமும் ஒருவர் மற்றொருவருக்கு உதவும் இயல்பும் கொண்டதாகக் காணப்படுகின்றது. அது மக்கள் இனத்தின் பல்வேறு பிரிவுகளையும் குழுக்களையும் கொண்டு விளங்குவதாகும். மக்களுடைய நடத்தையையும் உரிமைகளையும் கட்டுப்படுத்தும் அமைப்பாகவும் அது இயங்குகிறது. தனி மனிதனின் வாழ்க்கை முழுமைத் தன்மையை அடைவதற்குக் கருவியாக இருப்பதும் அதுவே. மனிதனின் செயல்களை உரிமையுடையனவாகச் செய்வதோடு அவற்றைக் கட்டுப்படுத்தி நெறிப்படுத்துவதும், மக்கள் தவறாமல் பின்பற்றுவதற்குத் தேவையான வாழ்க்கைக்குரிய விதிமுறைகளை வகுத்துக் கொடுப்பதும் சமுதாயமெனில் அது மிகையாகாது.

### சமுதாய அமைப்பு

சோழர் காலத்தில் தமிழ்ச்சமுதாயம், நெகிழ்ச்சிமிக்க ஒன்றாக இருந்தது. அச்சமுதாய அமைப்பின் அடிப்படையாகச் சாதி அமைந்திருந்தது. சாதி அடிப்படையில் அமைந்த குழுக்கள் பல அக்காலத்தில் சிறப்புற்று விளங்கின.

ஒவ்வொரு சாதியும் குறிப்பிட்ட ஒரு தொழிலைத் தலைமுறை தலைமுறையாகச் செய்துவரும் தொழிற் குழுக்களின் பரிணாம வளர்ச்சியாகக் காணப்பட்டது. ஒவ்வொரு சாதியும், அவனுடைய பொருளாதார, சமூக உரிமைகளைக் காத்துக் கொள்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தன. வைதிக நெறி பற்றிய நான்குவகைச் சாதிப்பாகுபாடு, தமிழகத்தில் அதே முறையில் கால்கொண்டதாகத் தெரியவில்லை. ஷத்திரியர் என்னும் வகுப்பினர் நாட்டில் வாழவில்லை. சோழர் காலத்திய கல்வெட்டுகளில் காணப்பட வழி இல்லை. ஒரே வழி அரசர்கள், தங்களை 'ஷத்திரிய மரபு' வழியினர் என்று கூறிக்கொள்ளுவதில் பெருமையுற்றனர். மன்னர் மன்னனாக – பேரரசனாக – விளங்கிய

முதலாம் இராசராசனை 'ஷத்திரிய சிகாமணி' எனச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அரசர்களின் முடிமணியாக – மணிமுடியாக விளங்கியவன் இராசராசன் என்பதே இதற்குப் பொருள். இதனை சமஸ்கிருத மொழியில் சிறப்புற எடுத்துரைத்தபொழுது ஸஷத்திரிய சிகாமணி என்று சுட்டினர். மற்றபடி, இப்பெயரால் அக்காலத்தில் ஒரு சாதி நாட்டில் இருந்ததற்கு இலக்கியத்திலோ, கல்வெட்டுகளிலோ, செப்பேடுகளிலோ யாதோர் ஆதாரமும் காணப்படவில்லை. நாடாண்ட அரசர்களும், குறுநில மன்னர்களும் சோழர் பாண்டியர், கொடும்பாளூர் வேளார் (வேளிர்) பழுவேட்டரையர், வல்லவரையர் எனும் குடிப்பெயராலும், இடப்பெயராலுமே குறிப்பிடப்பட்டனர். மேலும் சோழப் பெருவேந்தர்கள், உழுவித்துண்ட, வேளாளர் குடிகளில் திருமண உறவு கொண்ட செய்தியைக் கல்வெட்டுகளில் காணுகின்றோம். வேளிர் குடியினரே, சோழர் குடிக்குப் பெரிதும் பெண் கொடுத்து வந்தனர். இதனால், அரசியல் உறவு இறுகிய ஒன்றாகியது. எனவே, சோழப் பேரரசைத் தாங்கும் தூண்களாக அவர்கள் பெரும் பொறுப்புக்களில் பண்போடும் பாசத்தோடும் பணியாற்றியதில் வியப்பில்லை!

சோழப்பேரரசர்களின் ஆட்சிக்காலத்தில்தான், இன்றைக்குத் தமிழகத்தில் காணப்படும் பல்வேறு சாதிகள் அரும்பின. அவை காலப்போக்கில் மலர்ச்சியுறத் தொடங்கின. இதற்கு முன்பு எல்லாம் தொழில்முறைப் பாகுபாடாக இருந்த வகுப்புநிலை மாறி, பிறப்பால் சாதிவேறுபாடு பாராட்டப்படும் நிலை நன்கு வேரூன்றத் தொடங்கியதை நாம் காண்கிறோம். அக்காலத்தில் மேல்வகுப்பினர், கீழ்வகுப்பினர் என்ற பாகுபாடுகள் நிலைபெற்றிருந்தன என்பதை எடுத்துரைக்கும் கல்வெட்டுகள் பல கிடைத்துள்ளன. ஆயினும், சோழர் ஆட்சிக்காலத்தில் பல்வேறு வகையான சாதியினரும் தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்துகொண்டிருந்தனர் என்பதையும் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

'சமுதாயத்தின் தலைமையிடத்தில் பிராமணர்கள் சிறப்புற்று விளங்கினர். அவர்கள் வேதங்களில் வல்லுநர்களாகவும், சாத்திர இதிகாசங்களில் தெளிவுமிக்கவராகவும் இருந்தனர். அவர்கள்

அம்பலங்களிலும் திருக்கோயில்களிலும் இரவில் மகாபாரதம், பதினெண்புராணம் முதலியவற்றைப் படித்துப் பொதுமக்கள் புரிந்துகொள்ளுமாறு விளக்கி வந்தனர். அவர்களுடைய சமஸ்கிருத மொழிப்புலமையையும் 'வேதசாத்திர' அறிவையும் கண்டு வியந்த மன்னர்களும் மக்களும் அவர்களுடைய நல்வாழ்வைக் கருதி அவர்களுக்கு வேதவிருத்தி, பாரத விருத்தி, 'பட்டவிருத்தி', 'புராணவிருத்தி' என்னும் பெயர்களால் ஊர்ப்பொது நிலங்களை மானியங்களாக வழங்கினர். மேலும் திருக்கோயில்களில் நாள்தோறும் நண்பகற்பொழுதில் பிராமணர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு, அரசர்களும் அதிகாரிகளும் செல்வர்களும் அறக்கட்டளைகள் பலவற்றை நிறுவினர்.

அந்தணர்களுக்குத் தானமாக அளிக்கப் பெற்ற ஊர்களைப் பிரமதேயங்கள், சதுர்வேதி மங்கலங்கள் என்னும் பெயர்களால் சுட்டும் பழக்கம் அக்காலத்தில் தோன்றியதாகும். அவ்வூர்களில் பிராமண சமூகத்தினரே வாழ்ந்து வந்தனர். மற்ற ஊர்களில் அவர்கள் வாழ நேரிட்டால், அவர்கள் தனிமையான ஒரு பகுதியில், தனிப்பட்ட ஒரு குழுவினராக வாழ்ந்து வந்தனர்.[1] அத்தனிப் பகுதிக்கு 'அகரம்' என்ற பெயர் வழங்கலாயிற்று. 'அக்கிரகாரம்' எனும்வடமொழிச் சொல்லே, பாமர மக்களின் பழகு தமிழில் அகரமாகத் திரிந்து வழங்கியது.

சோழப் பேரரசன் கங்கை கொண்டானான இராசேந்திரனுக்கு ஆசாரியராக, குலகுருவாக – 'சர்வசிவ பண்டிதர்' என்பவர் விளங்கினார். அவருக்கு ஆசாரிய போகமாக இரண்டாயிரம் கலநெல் ஆண்டுதோறும் மானியமாக அளிக்குமாறு அவ்வரசன் ஏற்பாடு செய்திருந்தான் என்பதைக் கல்வெட்டு ஒன்றால் அறிகிறோம்.[2] விக்கிரம சோழனுக்கு 'ஸ்ரீகண்ட சம்பு' என்ற வேத விற்பன்னர் அரசகுருவாக விளங்கினார். அவருடைய திருமகனாக 'ஈசுவர சிவன்' எனப்பட்ட சோமேசுவரர் மூன்றாம் குலோத்துங்க சோழனுக்கு அரசகுருவாக இருந்தார் என்றும், அவர் 'சிந்தாந்தரத்நாகரம்' எனும் சித்தாந்த நூலை இயற்றினார் என்றும் மூன்றாம் குலோத்துங்க சோழனுடைய திரிபுவனத்து வடமொழிக்

1. M.E.R.311 of 1911.
2. S.I.I.Vol.2; No.20; 190 of 1907.

கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது.[3] இவ்வாறு சோழர் காலத்திய தமிழ்ச் சமுதாயத்தில் பிராமணர்கள் சீரும் சிறப்பும் பெற்றவர்களாகவும், கல்வியிலும் கலைஞானங்களிலும் ஆழ்ந்த அறிவும், ஆன்மிகவுணர்வும் வாய்ந்தவர்களாகவும் விளங்கினர்.

இக்காலத்தில் வாணிகம் செய்துவந்த மக்கள் 'வாணியர்' என்றும் 'செட்டிகள்' என்றும் பெயர் பெற்றிருந்தனர். 'எயில் கோட்டத்து எயில் நாட்டு நகரம் காஞ்சிபுரத்து அருமொழி தேவப் பெருந்தெருவில் 'வியாபாரி குமாரப் பெரு வாணியன்' தேவன்4 என்னும் கல்வெட்டின் வாசகத்தாலும், 'மலை மண்டலத்து வள்ளுவ நாட்டு முரணொத்த மங்கலத்து சாத்தன் பேராயிர செட்டி வைத்த திருநந்தா விளக்கு[4] எனும் கல்வெட்டின் தொராலும் வாணிகம் செய்து வந்தவர்களுக்கு வழங்கிய சாதிப் பெயரினை அறிகிறோம். வணிகர்களுள் நாநா தேச திசையாயிரத்தைந்நூற்றுவர், மணிக்கிராமத்தார், நகரத்தார், வளஞ்சியர், அஞ்சுவண்ணத்தார் என்ற பல குழுவினர்களாகச் செயல்பட்டனர் என்பது அக்காலத்திய கல்வெட்டுகளால் தெரியவருகிறது.[5] முதலாம் குலோத்துங்க சோழனது ஆட்சிக்காலத்தில் (கி.பி.1088) சுமித்திராவில் பொறிக்கப்பட்டுள்ள தமிழ்க் கல்வெட்டு ஒன்றில், 'திசையாயிரத்தைந்நூற்றுவர்' என்னும் வாணிகக் குழுவினர் குறிக்கப்பெற்றுள்ளனர்.[6] இவர்களுள் நகரத்தார் எனப்பட்டவர்கள், பெரிய நகரங்களுள் வாணிகத் தொழில் நடத்திக்கொண்டு வந்தனர். அவர்கள் வாழ்ந்த ஊர்களில் இருந்து வந்த ஊராட்சி மன்றத்திற்கு நகரம் என்ற பெயர் வழங்கி வந்ததையும் காணுகின்றோம். இவ்வணிகர்கள் சோழப் பேரரசின் பொருளாதார வாழ்விற்கு முதுகெலும்பு போன்றிருந்தனர்.

பண்டைக்காலம் முதல் நிலத்தினை உழுது, பயிரிட்டு வந்த உழவர்களும், உழுவித்துண்டு வாழ்ந்த வேளாளர்களும் சோழப் பேரரசில் சிறப்புற்று விளங்கினர். உழுவித்துண்போர் குறுநில மன்னர்களாகவும், சிற்றரசர்களாகவும் அரசியல் அதிகாரிகளாகவும் படைத்தலைவர்களாகவும் பணியாற்றி வந்தனர். நிலத்தை

3. M.E.R.190 of 1907.

4. தெ.இ.கோ.சா.பா.1; பக்.950; S.II.Vol.3; P.68.

5..தெ.இ.கோ.சா.பா.1; பக்.366.

6. M.E.R.193, of 402 of 1928.

உழுது, பயிரிட்டு வந்த உழவர் வெள்ளாளன் என்ற பெயரைப் பெற்றிருந்தனர். இதனைத் 'திரிபுவன சக்கிரவர்த்திகள் விக்கிரம சோழத் தேவர்க்கு யாண்டுயிருபத்தி ரெண்டாவது பொங்கலூர் நாட்டு கீரனூர் வடக்கே கோயில் வெள்ளாளன்[7] என்பன போன்ற கல்வெட்டுக்களால் அறியலாம். அகமுடையார் எனும் ஒரு பிரிவு அக்காலத்தில் சிறப்புற்றிருந்ததை 'திரு முதுகுன்ற முடைய[8] நாயனார்க்குப் பல்லவன் கோப்பெருந் சிங்கனுடைய அகம்படி[9] முதலிகளில் எதிரிகணாயன்[10] எனத் தொடரும் கல்வெட்டொன்று எடுத்துரைக்கிறது.

அன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் மற்றொரு முக்கிய சாதியினராகக் 'கைக்கோளர்' கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளனர். இப்பெயர், தொடக்க காலத்தில் 'தோள்வலி மிகுந்த காலாட் படையினரைச்' சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டது. காலப்போக்கில், தனிப்பட்ட ஒரு சாதியினரைக் குறிக்கும் பெயராகவே வழங்கத் தலைப்பட்டதைக் கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன.[11] 'திருப்பாசூர் கிராமத்து 'கைக்கோளன்' கண்ணன் அரசு என்பான் என்பதனாலும், 'உகண்ணாட்டுடையார் அருமொழித் தேவ தெரிஞ்ச கைக்கோளரில் கற்றளிபட்டாலகன்' என்பதனாலும், இதனை அறியலாம். இக்கல்வெட்டுகள் குறிப்பிடும் சிறப்புப் பெயர், சாதியைக் குறிப்பதாகாது என்றும், அவை காலாட்படையினரைக் குறிக்கும் அடைமொழிகளேயாகும் என்றும் சில வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். தொழிற் பெயரே நாளடைவில் சாதிப் பெயராக மாறியதை இது குறிக்கிறது எனக் கொள்ளுவது தவறாகாது. மேலும் ஒரு கிராமத்தில் வாழ்ந்த எட்டுவகையான சாதியினர் ஒன்றாகச் சேர்ந்து, 'பூண்டிக் கிராமத்து எட்டுச் சாதியாரும் கூடி, வட பரிசார நாட்டு வடக்கே பற்றியின் பிராட்டீசுவரம் உடையாருக்கு இசைக்கிடாயும் (பன்) குறுணி நெல்லும் அளித்தனர் என்று ஒரு கல்வெட்டு குறிக்கின்றது. இக் கல்வெட்டினால், ஓர் ஊரில் 'எட்டுச் சாதியினர் இருந்தனர்

7. Nilauaui Sartri, K.A.Bolas, P.596

*8. தெ.இ.க.தொ.7. எண்:149*

*9. தெ.இ.கோ.சா.பாகம் 2; பக்.834.*

*10. M.E.R.144 of 1928.*

*11. M.E.R.442 of 1920.*

என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே, சாதியடிப்படையில் தமிழச் சமுதாயம் பல குழுக்களாகப் பிரிந்திருந்து என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இரண்டாம் இராசாதிராசனுடைய பதினான்காம் ஆட்சியாண்டில், குலோத்துங்கச் சோழ சதுர்வேதி மங்கலச் சபையார் செய்த முடிவு ஒன்று ஆச்சான்புரத்தில் உள்ள கல்வெட்டு ஒன்றில் காணப்படுகிறது. அக்கல்வெட்டு சிறு விளக்குகளும் பானைகளும் செய்து விற்கும் குயவர்கள் ஒரு மேலாடை அணிந்து கொள்ளலாம் என்று குறிப்பிடுகின்றது.[12] திரிபுவனி வரதராசப் பெருமாள் கோயிலில் முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சியில் (கி.பி.1113-இல்) பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. அதில் அக்கிராமத்திலுள்ள 'பட்டர்', 'உபாத்தியாயர்', 'கணக்கர்', 'தச்சர்', 'கொல்லர்' முதலானோர் தத்தமக்குரிய, தொழில்களை அவ்வூரிலேயே செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்று ஊராட்சி மன்றத்தினர் செய்த முடிவினை அறிவிக்கின்றது.[13] இவற்றால். அக்காலத்தில் சாதிவேறுபாடுகள் தலைதூக்கத் தொடங்கியமை புலனாகின்றது.

**கலப்புச் சாதியினர்**

அனுலோமர், பிரதிலோமர் என்ற கலப்புச் சாதியினர் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளனர். அக்கலப்புச் சாதியினருக்குரிய கடமைகளும் ஒழுகலாறுகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. அனுலோமர் வகுப்பினருள் ஒரு பிரிவினர் கட்டட வேலை, தேர் செய்தல் போன்ற சிற்ப, தச்சு வேலைகளில் ஈடுபடலாம் என்றும் கோயில் கட்டுதல், மண் பொம்மைகளைச் செய்தல், சிற்பங்களைச் செதுக்குதல் முதலிய பணிகளில் ஈடுபடலாம் என்றும் ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது. அக்கல்வெட்டு, இவர்கள் பிரதிலோமரைக் காட்டிலும் உயர்ந்தவர்களான அனுலோமர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் சாத்திர விதிப்படி பூணூல் அணிந்து கொள்ளும் உரிமையுடையவர்கள் என்றும், ஆனால், 'அக்னிஹோத்திரம் ஔபாசனம்' முதலியவற்றைச் செய்தல் கூடாது என்றும் தெரிவிக்கிறது. இச்செய்திகளைத் தெரிவிக்கும்

---

12.. ஷெ

13. A.R.E.1919, Part.2; P P. 92-98.

கல்வெட்டு, முதலாம் குலோத்துங்கச் சோழனுடைய நாற்பத்தெட்டாம் ஆட்சியாண்டில் திருக்கற்குடிக் கோயிலில் பொறிக்கப்பட்டதாகும்.[14] இவ்வாறு உரிமைகளைப் புதியதாகப் பெற்றவர்கள் கொத்தரும், இரும்புக் கொல்லரும், பொற்கொல்லரும், கல்தச்சரும் மரத்தச்சரும் ஆகிய ஐந்து வகைப்பட்ட கம்மாளர்களாவார்கள். இவர்கள் இரதகாரர் எனும் வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று மற்றொரு கல்வெட்டு தெரிவிக்கிறது. அரசர் குலப் பெண்ணுக்கும் வணிகர் சாதி ஆணிற்கும் பிறந்தவன் ஆயோகவன் எனப்பட்டான் என்று வேறொரு கல்வெட்டு கூறுகிறது. ஆயோகர் பிரதிலோம வகுப்பைச் சேர்நதவர்களாவர். இவர்கள் ஆடைகளை நெய்து அரசருக்கும் அந்தணருக்கும், கோயில்களுக்கும் கொடுத்து வந்தனர். இவர்களுள் சிலர், திரிபுவனை போன்ற இடங்களில் இறையிலியாக நிலங்களைப் பெற்றுக் கோயிலுக்கும் மறையவர்க்கும் வேண்டிய ஆடைகளை நெய்து வந்தனர்.

## புதிய உரிமைகள்

கோயம்புத்தூருக்கு அருகிலுள்ள பேரூரிலும், திருச்சி மாவட்டக் கருவூரிலும் காணப்படும் இரு கல்வெட்டுகள், பல்வேறு சாதியினருக்கு வழங்கப்பட்ட புதிய உரிமைகளைப் பற்றித் தெரிவிக்கின்றன. அவை தென் கொங்கு நாட்டுக் கம்மாளர்களுக்கும், வெங்கால நாட்டுக் கம்மாளர்களுக்கும் சோழப் பேரரசன் மூன்றாம் குலோத்துங்கன் வழங்கிய சில உரிமைகளை எடுத்துரைக்கின்றன. கம்மாளர்கள் நன்மை தீமைகளுக்குச் சடங்குகள் செய்கின்ற பொழுது 'இரட்டைச் சங்கு ஊதிப் பேரிகை, முரசு முதலியனவற்றைக் கொட்டுவித்துக் கொள்ளலாம். தம் வீடுகளுக்குச் சுண்ணாம்புச் சாந்துபூசிக் கொள்ளலாம்.[15] என்பன அரசன் அளித்த புதிய உரிமைகளாகும். இதைப்போன்றே வீட்டை விட்டு வெளியே செல்லும் பொழுது, கம்மாளர் மிதியடி அணிந்து கொள்ளுவதற்குக்கூட அரசனிடம் இருந்து உரிமை பெற வேண்டியிருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.[16] பாண்டிய நாட்டு இடையர்களுக்கு விக்கிரம சோழன் அளித்த உரிமைகளைக் கீரனூர் கல்வெட்டு

14. M.E.R.205 of 1919.
15. A.R.E.19089, Part.2; P P 95-96.
16. M.E.R.508 of 1922.

ஒன்று தெரிவிக்கின்றது. இடையர்கள் வீடு கட்டும்பொழுது, இருபுறமும் வாசற்படிகள் வைத்துக் கொள்ளலாம் என்றும் நன்மைகளுக்குப் பல்லக்கு ஏறிச் செல்லலாம் என்றும் இழவுகளுக்கு மேல் வளைவுள்ள பாடைகட்டி, அதன்மேல் பச்சைப்பட்டு, புலியூர்ப்பட்டு என்பனவற்றைக் கட்டிக் கொள்ளலாம் என்றும், நன்மை, தீமைகளுக்குப் பேரிகை கொட்டலாம் என்றும் கீரனூர் நாட்டு இடையர்கள் பெற்ற உரிமைகளை அக்கல்வெட்டு அறிவிக்கிறது.

இவ்வாறு அரசர்களால் மனமுவந்து வழங்கப்பட்ட உரிமைகளிலிருந்து அக்காலத்தில் சாதி வேற்றுமை எத்துணை அளவிற்குச் சமுதாயத்தில் ஆழ வேரூன்றி இருந்தது என்பதையும், எல்லோரும் பொதுவாக அனுபவிக்க வேண்டிய வாழ்க்கை வசதிகள், எவ்வாறு ஒரு சிலரால் மட்டும் அனுபவிக்கப்பட்டு வந்தன என்பதையும் மற்ற சாதியினர் அவற்றைத் தாங்களும் பெறவேண்டும் என்னும் ஆர்வத்தால் வாய்ப்புக் கிடைக்கின்ற போதெல்லாம் அரசரிடத்துத் தங்களுக்கு அவ்வுரிமைகளை அளிக்குமாறு பணிவுடன் வேண்டிக் கொண்டனர் என்பதையும் நாம் அறிய முடிகிறது. இத்தகையநிலை, சோழர் காலத்திய சமுதாய அமைப்பிறகு அடித்தளமாக அமைந்தது.

### வலங்கை இடங்கை வகுப்பினர்

சோழர் காலத்திய தமிழ்ச் சமுதாயத்தில் வலங்கை இடங்கை எனும் வகுப்புகள் இருந்தன. 'வலங்கையர்'சோழப் பேரரசின் சிறப்புமிக்க படைவீரர்களாக விளங்கினர். இப்பிரிவுகளும் வகுப்புகளும் எவ்வாறு தோன்றின என்பதைத் தெளிவாக அறிய இயலவில்லை. 'இடங்கையர்' காசியப முனிவரது வேள்வியைக் காக்கத் தீக்குழியிலிருந்து படைக்கப்பட்டதாக ஒரு கதை வழங்குகிறது. சோழ மன்னன் அரிந்தமன் என்பான் வடநாட்டிலிருந்து மறையவரைத் தமிழகத்திற்கு அழைத்து வந்தான். அப்போது அவர்களுடைய மிதியடிகளையும் பிறவற்றையும் தாங்கிக்கொண்டு இடங்கையர் தென்னாட்டிற்கு வந்தனர் என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகின்றது.[17] தம்மினத்தினர்க்கு யாதேனும் துன்பம் வருமாயின் இனத்தார் அனைவரும் ஒன்று சேர்ந்து அதைப் போக்க முயலவேண்டும்

17.M.E.R.189 of 1925, 208 of 1919

என்றும், கொக்கின் இறகினை, சீவி முடிக்கப்பெறாதத் தலைமுடியில் அணிந்து கொள்ளுவதே தங்களுக்குரிய அடையாளம் என்றும் அது சுட்டுகிறது. அவர்கள் உலா வருகின்றபொழுது, அவ்வூர்வலத்தில் தாரைக்கொம்பும், சங்கும் ஊதப்படல் வேண்டும் என்றும் இவ்விதிக்கு மாறுபட நடக்கும் இடங்கையர், தம் இனத்தினின்றும் வெளியேற்றப்படுவாரகள் என்றும் அவர்கள் தங்களுக்குள்ளே ஒரு முடிவிற்கு வந்ததை மற்றொரு கல்வெட்டு அறிவிக்கிறது. இடங்கை வகுப்பினருக்குச் 'சுருதிமான்கள்' எனும் பெயர் வழங்கியதாகத் தெரிகிறது. ஆடுதுறைக் கல்வெட்டு ஒன்று இடங்கை வகுப்பினருள் 98 உட்பிரிவுகள் இருந்தன என்னும் செய்தியைத் தெரிவிக்கிறது.[18] இவ்வலங்கை, இடங்கை இனத்தவருக்கு இடையே தீராப்பகை உண்டானதைப் பிற்காலக் கல்வெட்டுகளால் அறிகிறோம்.

சோழர் காலத்திய தமிழ்ச் சமுதாய அமைப்பு பல்வேறு சாதிகளைக் கொண்ட அமைப்பாக இருந்ததை அக்காலத்திய கல்வெட்டுகளால் அறிகிறோம்.[19] சங்கக் காலத்திய தமிழ்ச் சமுதாயத்தில் காணப்படாத பல பிரிவுகளும், உட்பிரிவுகளும் தோன்றி வளர்ந்ததைச்சோழர் காலத்திய கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. ஒவ்வொரு சாதியினரும் தத்தம் கடமைகளை நெறிபிறழாது செய்வதில் கருத்துடையவர்களாக வாழ்ந்தனர் என்பதையும் குடிமக்கள் குலவொழுக்கம் தவறாமல் ஒழுகுமாறு அரசன் கண்காணித்து வந்தான் என்பதையும்[20]

**மன்னுயிர்க் கெல்லாம் இன்னுயிர்த் தாய்போல்**
**தண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து**
**மண்முழுதுங் களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்**
**கோயிற் கொற்றவாசல் புறத்து**
**மணிநா வொடுங்க முரசுகள் முழங்க**
**விசையமும் புகழும் மேன்மே லோங்க**
**வாழி வாழிஇம் மாநிலங் காக்க!**[21]

எனும் விக்கிரம சோழனுடைய மெய்க்கீர்த்தியால் அறிகிறோம்.

---

18. M.E.R.151 of 1905. M.E.R.562 of 1893: 66 of 1890.
19. M.E.R.341 of 1907, 489 of 1907
20. M.E.R.34 of 1913, A.R.E.192 para 47,
21. M.E.R.34 of 1913

# 5

# தமிழகத்தின் இசைக்கருவிகள்

ஒரு நாட்டின் நாகரிகத்தின் முதிர்ச்சியையும் மக்களுடைய வளமிக்க வாழ்வினையும் அறிவிக்கும் அளவு கோலாக இசைக்கலை விளங்குகிறது. பண்டைத் தமிழர் அமிழ்தினுமினிய தமிழ்மொழியினைக் கலையின் வடிவமாகவே கண்டனர். உடலினுள் இருந்து எழும் உணர்ச்சியின் ஆற்றலால் உண்டாகும் ஒலி, மொழியாக வெளிப்படுகின்றது. அதை 'இயல் தமிழ்' என்று அவர்கள் போற்றினர். கேட்போரைத் தன் வயப்படுத்தும் ஆற்றல் உடையதாய் உள்ளத்தில் எழும் எண்ணங்களை இன்னொலியுடன் புலப்படுத்தும் மொழியை 'இசைத் தமிழ்' என்று நம் முன்னோர்ள் குறித்தனர். குறித்த செய்கையினை இயலும் இசையும் இணைந்து விளங்க நடிப்பால் புலப்படுத்துவதை நாடகத் தமிழ் என்று அவர்கள் பாராட்டினர். இவ்வாறு மொழியை அவர்கள் மூவகையாகப் பாகுபாடு செய்திருந்தனர். இம்மூன்றையும் முத்தமிழ் என்று முதுபெரும் புலவர்கள் போற்றியுள்ளனர்.[1]

## இசைத் தமிழ்

இவற்றுள்ள 'இசைத் தமிழ்' கேட்போர் உள்ளத்தை நெகிழ்வித்துத் தன் வயப்படுத்தி இசைவிப்பதனால் 'இசை' எனப்பெற்றது. மனமொழி மெய்களின் தொடர்புபெற்று வளர்ந்த முத்தமிழுள், நடுநாயகமாய் விளங்கும் இசைத்தமிழ் மன வளர்ச்சியின் பயனாய் மொழியின் இனிமையைப் புலப்படுத்திச் செயலாற்றலை மிகுதிப்படுத்தும் தனிச்சிறப்புடையதாகும். மிடற்றுப் பாடலும், சூழல், யாழ் முதலி இசைக் கருவிகளின் ஒலியும், அவற்றின் கால அளவினைப் புலப்படுத்தும் தாளமும்

---

1. இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழென வகைப்படச் சாற்றினர் மதியுணரந்த தோரே – பிங்க நி 1332 தெரிமாண் 'தமிழ்மும்மை'த் தென்னம் பொருப்பன்-பரி.திர.4 முத்தியை ஞானத்தை 'முத்தமிழ்' ஓசையை – திருமந், 2115. 'முத்தமிழ்த்துறை'யின் முறை போகிய – கம்ப. பால.தற்.1

ஆகிய இசை மூன்றும் ஒத்திசைத்து இயங்குவதே 'இசை' என்பர். இயல் தமிழ்ப் பாவினோடு இன்னோசையாகிய திறத்தை இசைத்துப் பாடுதலால் 'இசை' என்று பெயர் பெற்றது என்பது பண்டை உரையாசிரியர்களின் கருத்தாகும்.

## இசைக் கருவிகள்

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு, இசைக்கலையினைப் போற்றி வளர்த்த பண்டைத் தமிழச் சான்றோர்கள் இசைக் கருவிகள் பலவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். அவர்கள் இசை பிறந்தற்கு நிலைக்களன் இரண்டு என்று கருதினர். அவை மிடறு, கருவி என்பன. அவற்றிலிருந்து எழும் இசை மிடற்று (கண்ட)ப் பாடல் என்றும், கருவிப் பாடல் என்றும் சுட்டப்பெற்றன. மிடற்றுக் கருவியாகிய கண்டத்தையே 'வீணை' என்ற சொல்லால் இடைக்காலத்தைச் சேர்ந்த புலவர் திருத்தக்கத்தேவர் குறிப்பிடுகிறார்.

**தொட்டமையுடைய வீணை செவிச்சுவை**

(சிந்தாமணி 2047)

இசைக்கருவிகளைப் பண்டைத் தமிழர் 'இயம்' என்ற பொதுப் பெயரால் குறிப்பிட்டு வந்தனர். 'பல்லியம்' (பல் இயம்) என்பது பலவகை இசைக்கருவிகளைக் கொண்ட குழுவிற்கு (Grchestra) வழங்கிய பெயராகும்.

வாங்குபு மருப்பு யாழொடு பல்லியம் கறங்க (புறம்.281)

சங்க காலப் புலவர் ஒருவருக்கு 'நெடும்பல்லியத்தனார்' என்ற பெயர் வழங்கியதைப் புறநானூற்றின் அறுபத்து நான்காம் பாடலின் அடிக்குறிப்பால் நாம் அறிகிறோம். நெடிய பல வாத்தியங்களை உடையவராக இருந்தமையின் இப்பெயர் அவருக்கு வந்தது என்பர்.

இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்திய பண்டைத் தமிழ் மக்கள், இயற்கைப் பொருள்களில் இனிய இசை எவ்வாறு எழுகிறது என்பதைக் கூர்ந்து நோக்கி, ஆராய்ந்து பார்த்துச் செயற்கை முறையில் இசைக் கருவிகளைச் செய்திருக்க வேண்டும் என்பது,

**ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்**
**கோடை யவ்வரி குழலிசை யாகப்**
**பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்**
**தோடமை முழவின் துதை குரலாகக்**
**கணக்கலை இகுக்கும் கடுங்குரல் தூம்பொடு**
**மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக**
**இன்பல் இமிழிசை கேட்டு.**

*(அகம்.82)*

என்னும் கபிலரது பாட்டால் தெரியவருகிறது. கபிலருக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்பு வாழ்ந்த ஆதித்தமிழர்கள், மூங்கிலின் துளை வாயிலாக வெளிவரும் காற்றினால் உண்டாகும் இன்னொலியைக் கேட்டு அதைப் போன்று இசை உண்டாக்கும் 'குழல்' கருவியையும், மலைகளிலிருந்து உருண்டு திரண்டு நிலத்திடை வீழும் அருவிகள் எழுப்பும் இன்னொலியிலிருந்து அதைப்போன்ற இசை எழுப்பும் 'முழவு' எனப்பெறும் மத்தளக் கருவியையும், ஆண்மான்கள் எழுப்பும் இனிய குரலினைப் போன்று இசை எழுப்பும் 'தூம்பு' எனப்பெறும் ஒத்திசைக்கும் கருவியையும், வண்ணமலர்களில் தேனினை உண்டு மகிழும் வண்டுகள் எழுப்பும் இனிய ஒலியைக் கேட்டு அத்தகைய இசையை எழுப்பும் 'யாழ்' என்ற இசைக் கருவியையும் படைத்துக் கொண்டிருக்கலாம்.

இசைக் கருவிகளுக்குப் 'பல்லியம்' என்ற பெயர் வழங்கியதைப் போன்று, 'குயிலுவக் கருவி' என்ற பெயரும் பண்டைக்காலத்தில் வழங்கியது. குயிலுதல் என்ற சொல்லிற்கு 'ஒலித்தல்' என்பது பொருள். மனிதரால் செய்யப்பட்ட இசைக் கருவிகளுக்கு இப்பெயர் பொதுப் பெயராய் வழங்கி வந்திருக்கிறது. இசைப்பாக்களின் இசையையும், பாணியையும் நிகழ்த்தவல்ல கருவிகள் இசைக் கருவிகள் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இசைக்கருவிகளை 'வாத்தியம்' என்ற பெயரால் குறிப்பிடுவது மிகவும் பிற்பட்ட கால வழக்கு. 'வாத்திய' என்ற வடசொல் தமிழில் வாச்சியம், வாத்தியம் என்று இருவகையாகத் திரிந்து வழங்கலாயிற்று. முதன் முதலாக அடியார்க்கு நல்லார் என்ற சிலப்பதிகார உரையாசிரியரே 'கூத்து விகற்பங்களுக்கு அமைந்த

வாச்சியக்கூறுகளும்'[2] என்ற உரைப் பகுதியில் 'வாச்சியம்' என்ற சொல்லைக் கையாண்டுள்ளார். அவருடைய காலம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டாகும். பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொறிக்கப்பெற்ற கல்வெட்டு ஒன்றில் 'செம்பியன் வாத்தியமாராயன்[3] என்ற வாத்தியக் குழுவின் தலைவன் ஒருவன் குறிப்பிடப் பெற்றுள்ளான்.

பண்டைக்காலத்தில் இசைக்கருவிகள் (1) தோல் கருவி, (2) துளைக்கருவி, (3) நரம்புக்கருவி என்று மூவகையாகப் பாகுபாடு செய்யப் பெற்றிருந்தன. கி.பி. ஏழாம் நூற்றாண்டு அளவில் நான்காவது வகையாகக் கஞ்சக்கருவி என்ற புதுவகைக் கருவிகளும் தமிழகத்தில் வழங்கத் தலைப்பட்டன. ஒரு கருவியை மற்றொன்றுடன் மோதுவதால் இசையெழுப்பும் கருவி கஞ்சக் கருவியாகும். இது பெரிதும் உலோகங்களினால் செய்யப்பெற்றனவாகும்.

### தோல் கருவிகள்

நாகரிக வளர்ச்சியில் தோலினை மனிதன் ஆடையாக உடுத்துவதற்குக் கற்ற காலத்தை ஒட்டி, தோலினால் இசைக் கருவிகள் செய்யும் பழக்கம் உண்டாகியிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது. தொல்காப்பியத்தினுள் பறை, துடி, முரசு என்ற மூன்று தோல்கருவிகளே குறிக்கப்பெற்றுள்ளன. அவை தொன்மைச் சிறப்பு வாய்ந்தனவாகும்.

### 1.பறை

பறை என்பது ஓடும் இசையை ஒழுங்குபெற நிறுத்தி ஓர் அளவோடும், சீரோடும், ஒத்த அழகோடும் நடக்க, இசைக்கு நடை கற்பிக்கும் கருவி என்பர். பறை என்பதனைக் 'கொட்டு' என்றும் கூறுவர். இசைக்கு இன்றியமையாத கருவியாகவும் நெருங்கிய தொடர்பு உடைய கருவியாகவும் உள்ளது பறை. நானிலத்து மக்களின் அன்றாட வாழ்க்கைக்குப் பயன்பட்ட கருப்பொருள்களுள் ஒன்றாகப் பறையினைத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளமை, பண்டைத் தமிழரின் இசையறிவுக்குச் சிறந்ததொரு சான்றாகும்.

---

2. சிலப்.3: 4 அடி உரை.
3. தெ.இ.கல்.2: 275.

*பறைபடப் பணிலம் ஆர்ப்ப (குறுந். 15)*

*வெரூஉப் பறை நுவலும் பரூஉப்பெருந் தடக்கை*

*(பத்து. பொரு.171)*

*நிறையழி கொல்யானை நீர்க்குவிட் டாங்குப்*

*பறையறைந் தல்லது செல்லற்க (கலி.56)*

*அரும்பறை வினைஞர் புல்லிகல் படுத்துக (பதிற்.75)*

*அறைபறை அன்னர் கயவர் (குறள்.1076)*

*நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும் (சிலப்.14:29)*

குறிஞ்சி நிலத்து மக்கள் பயன்படுத்திய பறைக்குத் தொண்டகப் பறை என்பது பெயராகும். முல்லை நிலத்து மக்கள் எருதுகளை ஓரிடத்தில் ஒன்றாகச் சேர்ப்பதற்குக் கையாண்ட பறை 'ஏறுகோட்' பறை எனப் பெற்றது. நெய்தல் நிலத்து மக்கள் மீன் பிடிக்கப் புறப்படுவதற்கு ஆட்களைச் சேர்க்க அறைந்த பறை 'மீன்கோட்' பறையாகும். 'நெல்லரி கிணை' என்பது மருத நில மக்கள் பயன்படுத்திய சிறுபறையாகும். பாலை நிலத்து மக்கள் கொள்ளை அடிப்பதற்குப் புறப்படும் பொழுது அறைந்த பறை 'சூறைகோட்' பறை என்பதாகும்.

இவையல்லாமல், வேறு சில பறைகளையும் சங்க காலத் தமிழ் மக்கள் பயன்படுத்தியுள்ளனர். 'சிறுபறை' என்பது சிறுவர்கள் விளையாடுகின்றபொழுது பயன்படுத்தியதாகும். 'பெரும்பறை' அல்லது 'பணை' என்பது ஆடல் மகளிர், நடனமாடுகின்றபொழுது அறையப்படுவது என்பதைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. கிணைப்பறை என்பது செய்திகளை அறிவிப்பதற்கு முன்னர், நாட்டு மக்களுடைய கருத்தைக் கவருவதற்கு அறையப் பெற்ற சிறிய பறையாகும். இதை இக்காலத்தில் 'தமுக்கு' என்பர். கிணைப்பறையைப் போர் வீரர்கள் போர்க்களத்தில் பயன்படுத்தியதாகவும் தெரிகிறது. இதற்குத் 'தடாரி' என்றும் மற்றொரு பெயருமுண்டு.

**2.துடி**

இரு முகங்களையுடையது துடி, இது தோலினால் போர்த்தப்பெற்ற சிறிய கருவி. ஒருமுறை அறைந்தால், நெடுநேரம் அக்கருவியின் தோல் பகுதி துடித்துக்கொண்டே

இருக்கும். இதனால், ஒலியலையின் அதிர்வு தொடர்ந்து எழும்பும். அப்பொழுது அதிர்ச்சிமிக்க ஓசை உண்டாகும். இக்காரணத்தால் 'துடி' என்று அதற்குப் பெயரிட்டனர். துடிப்பது துடியாகும். நுண்மையான ஒலியின் அலையதிர்வைத் தெரிவிக்கும் தோல் கருவியைத் துடியாக நம் முன்னோர்கள் கருதினர்.

***கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தல் (பத்து.பெரு.124)***

***சீர்தரு கேள்வ னுருட்டுந் துடிச் சீராற் (பரி:21:60)***

***துடியொடு சிறுபறை வயிரொடு துவைசெய (சிவப். 12: 20)***

பெரிதும் வீரமறவர்கள், உள்ளக் கிளர்ச்சி பெற வேண்டி முழக்கிய ஒருவகைப் பறையே 'துடி' என்பதைச் சங்க இலக்கியங்களால் நாம் அறிகிறோம். இதைப் பாலை நிலத்துப் பறையாகக் கூறுவதும் உண்டு.

**3. முரசு**

தோல் கருவிகளுள், முதன்மையானதும் சிறப்புடையதுமாகக் கருதப் பெறுவது 'முரசு'. இம்முரசு மூன்று வகைப்படும் அவை 'படை முரசு', 'கொடை முரசு', 'மணமுரசு' என்பனவாகும்.

***'உரந்தலைக் கொள்ட உருமிடி முரசம் (பத்து.திருமு.121)***

***முரசதிர்ந்த தன்ன இன்குரல் ஏற்றெடு (பத்து.குறிஞ்.49)***

***இன்னிசை முரசினியங்கி (நற்.197)***

***கடிப்பிகு முரசின் முழங்கி (குறுந்.270)***

***முரசுகடிப் பிகுப்பவும் வால்வளை துவைப்பவும் (புறம்.158)***

படை முரசினைப் 'போர்முரசு', 'வீரமுரசு' என்றும் வழங்குவர். அம்முரசு செய்வதற்குப் பயன்படுத்தப்பெற்ற தோல், எத்தகையது என்பதைச் சங்கப்பாடல்கள் சிலவற்றால் நாம் அறிகிறோம். சீற்றமும் உடலுரனும் மிக்க இரண்டு எருதுகள் போரிடுகின்றபொழுது, வெற்றி பெறுகின்ற எருதினுடைய தோலினைப் பதப்படுத்தாது, அப்படியே முரசின் மீது போர்த்திக் கட்டுவராம். அம்முரசில் எழுகின்ற ஒலி, கேட்போர் உள்ளத்தை நடுக்கமுறச் செய்யும் ஆற்றல் வாய்ந்தது என்று நம்முன்னோர்கள் நம்பினர்.

*மண்கொள வரிந்த வைந்நுதி மருப்பின்*

*அண்ண னல்லே றிரண்டுடன் மடுத்து*

*வென்றதன் பச்சை சீவாது போர்த்த*

*திண்பிணி முரசு மிடைப்புலத் திரங்க (புறம்.288)*

என்று கழாஅத் தலையார் என்ற புலவர் குறிப்பிடுகின்றார். இதே கருத்தினை,

*ஓடா நல்லேற் றுரிவை தைஇய*

*பாடுகொள் முரசம் (அகம் 334)*

*கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த*

*மாக்கண் முரசம் ஓவிய கறங்க*

*(பத்து. மதுரை. 732-3)*

என்று வேறு சில புலவர்களும் குறிப்பிட்டுள்ளனர். இம்முரசினைத் தெய்வமாகப் போற்றி பண்டைத் தமிழ் மக்கள் வழிபட்டனர்.

'கொடை முரசு' என்பது அரண்மனையில் அரசர் முதலியோர் அறம் செய்வதை – பாணர்க்கும் புலவர்க்கும் கலைஞர்க்கும் பரிசு கொடுப்பதை – அறிவிக்கும் முரசாகும். 'மணமுரசு' விழாக்களிலும், திருமணம், முடிகவித்தல் போன்ற நன்னிகழ்ச்சிகளிலும் பயன்படுத்தப்பெற்றதாகும்.

**4. முழவு**

பறை, துடி, முரசு முதலிய பேரொலி தரும் கருவிகளைப் படைத்துப் பயன்படுத்திய பண்டைத் தமிழர் பின்னர், இனிய இசையைத் தருகின்ற முழவினைச் செய்தனர். முழக்கமிடுவது முழவு எனப்பெறும். ழகரம் தமிழ் மொழிக்கு இனிமை தருவதைப் போன்று, இசைக் கருவிகளில் இனிமை மிக்கனவாக ஒலிப்பனவற்றின் பெயர்களிலும் பண்டைத் தமிழ் மக்கள் 'ழகரத்தை'ச் சேர்த்து 'யாழ்', 'குழல்', 'முழவு' எனப் பெயரிட்டுள்ளமை ஆழ்ந்து சிந்திக்கத் தக்கதாகும்.

*குரல் புணர் 'நல்யாழ்' முழவோடொன்றி*

*(பத்து. மதுரை. 605)*

***விண்ணெதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்***

***திண்வார் விசித்த முழவு (பத்து மலை. 2-3)***

***பண்ணமை முழவும் பதலையும் பிறவும் (பதிற்.41)***

***ஒருதலை பதலை தூங்க வொருதலைத்***

***தூம்பகச் சிறுமுழாத் தூங்க (புறம்.104)***

***பண்ணமை குழவின் பச்சை நல்யாழ் (புறம்.164)***

***முழவிமிழ் மத்தரி தடாரி (பரி.12:41.2)***

***பண்ணமை முழவின் கண்ணெறியெறிந்து (சிலப்.3:61)***

முழவு ஏழு வகைப்படும். அவை அகமுழவு, அகப்புற முழவு, புறமுழவு, புறப்புற முழவு, பண்ணமை முழவு, நான் முழவு, காலை முழவு என்பன. 'மத்'தென்னும் ஓசையுடன் ஒலித்தமையால் முழவிற்கு 'மத்தளம்' என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. இதனை, 'மத்து; ஓசைப் பெயர். இசையிடனாகிய கருவிகட்கெல்லாம் தளமாதலான், மத்தளமென்று பெயராயிற்று' என்னும் அடியார்க்கு நல்லார் கூற்றால், நாம் அறியலாம்.

**5.தண்ணுமை**

இது முழவைக் காட்டிலும் இனிய (குளிர்ச்சியான) ஓசையை உடையது, 'தண்', 'தண்' என்று ஒலிக்கும் இயல்புடையது.

***மடிவாய்த் தண்ணுமை நடுவண் சிலைப்ப (பத்து.பெரு 144)***

***மடிவாய்த் தண்ணுமை நடுவனார்ப்ப (நற்றி.130)***

***வெண்ணெ லரிநர்தண்ணுமை வெரீஇ (பத்.மலை.471)***

***வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை (அகம்.40:13)***

***தண்ணுமை முதல்வள் (சிலப்.3:62)***

இன்று தவுல் என்று வழங்கப்பெறும் மேளம் தண்ணுமை என்ற இசைக் கருவியின் ஒரு வகையாகும். 'தவுல்' என்னும் பெயர் 'தபெ' என்ற உருதுச் சொல்லின் திரிபாகும். தண்ணுமை

என்பதே அண்மைக்காலம் வரை வழங்கிய பெயராகும். 'மேளம்' என்ற பெயர் மிகவும் பிற்பட்ட காலத்திய வழக்கு. 'மேளம்' என்பது முதலில் அடிப்படைப் பண்களை உணர்த்தி வந்தது. பின்னர் கூட்டாகப் பல கருவிகளைக் கொண்டு எழுதப்படும் இசையைக் குறித்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியிலிருந்தே அச்சொல் 'தோல் கருவிகளைக் குறிக்கத் தொடங்கியது. 'மேளா' என்ற வடசொல்லின் திரிபே மேளமாகும்.

தோல் கருவிகளுள் துடியை இசைத்தவன் துடியன் என்றும், 'பறை' அறைந்தவன் பறையன் என்றும், 'முரசு' அறைந்து செய்திகளைத் தெரிவித்தவன் வள்ளுவன் என்றும் சுட்டப்பெற்றனர். இக்குடிகளைச் சேர்ந்த தமிழ் மக்கள் சங்க காலச் சமுதாயத்தின் சிறப்புமிக்க பழங்குடி மக்களாவர்.[4]

பன்னிரண்டாம் நூற்றாண்டு அளவில், தோல்கருவிகள் முப்பதுக்கு மேற்பட்டவை தமிழகத்தில் இருந்தன. அவை பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கரைப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிலகப்பறை, துடி, பெரும்பறை என்பனவாகும்.[5] இவற்றுள் பல இன்னும் தென்னாட்டின் திருக்கோயில்களுள் பயன்படுத்தப் பெற்றுவருகின்றன.

**2. துளைக் கருவிகள்**

மரத்தினால் செய்யப்பெற்று, துளைகள் உடையனவாக அமைக்கப்பெறும் இசைக் கருவிகளைத் துளைக்கருவிகள் என்பர். இயற்கை அளிக்கும் செல்வங்களுள் சங்கு, மாட்டுக்கொம்பு, மான்கொம்பு போன்றவற்றைத் துளையிட்டு ஊதுவதற்கு ஆதி மனிதன் நன்கு அறிந்திருந்தான். நாகரிக முதிர்ச்சிக்கேற்ப அவற்றை வெண்கலம் போன்ற உலோகங்களினால் செய்து அவன் பயன்படுத்தலானான்.

---

4. புறம் 335.

5. சிலப் 3,27, அடி உரை

**1.குழல்**

துளைக் கருவிகளுள் சிறந்தது 'குழல்'. இதைப் 'புல்லாங்குழல்', 'வேய்ங்குழல்', 'வங்கியம்' என்றும் சுட்டுவர். மூங்கினாலும், வெண்கலத்தாலும், சந்தனமரம், செங்காலி மரம், கருங்காலி மரம் முதலிய மரங்களாலும் குழலினைச் செய்தனர். மூங்கிலினால் செய்யப்பெற்ற குழலே, சிறப்புமிக்கதாகக் கருதப்பெற்றது.

***குழலிசைக் குரல குறும்பல வகவும் (குறுந்த. 151)***

***குழலினி தியாழினி தென்பதம் மக்கள்***

***மழலைச்சொல் கேளா தவர் (குறள். 66)***

***அறல் குழல் பாணி தூகியவரொடு (பத்து.சிறு.162)***

***விளிப்பது கவருந் தீங்குழல் துரைஇ (பத்து. மலை 8)***

***எழுப் புணர் யாழு மிசையுங் கூடக்***

***குழலளந்து நிற்ப (பரி.7.78: 79)***

***ஒத்தகுழலி னொலியெழ (பரி.121: 40)***

***தீங்குழ லாம்பலி னினிய விமிரும் (ஐங்.215)***

***குழல் வழி நின்ற தியாழே (சிலப்.3:139)***

என்பன குழலைப் பற்றிய சில குறிப்புகளாகும். இக்குழலில் ஐந்து துளைகள், ஏழு துளைகளிட்டு ஊதும் வழக்கம் சங்க காலத்தில் இருந்ததை,

***ஏழ்புழை ஐம்புழை யாழிசை கேழ்த்தன்ன (பரி. 8.22)***

என்ற குறிப்பினால் நாம் அறிகிறோம். தீக்கடை கோலால் அத்துளைகளையிடும் வழக்கம் இருந்ததை,

***ஞெரலிகோலி கொண்ட பெருவிறன் ஞெகிழிச்***

***செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலி (பத்து பெரும்.178-79).***

என்பதனால் தெரியவருகிறது.

வேய்ங்குழலோடு இன்னும் பலவகைக் குழல்கள், பண்டைத் தமிழர்களால் பயன்படுத்தப்பெற்றன. கொன்றைப் பழத்தை துருவிச் செய்யப்பட்ட குழல் 'கொன்றைக் குழல்' என்றும்

முல்லைக் கொடியால் அமைத்த வளையத்தை வாயினிடத்தே செறித்த இசைக் குழல் 'முல்லைக் குழல்' என்றும் ஆம்பல் பூவைப்போல வெண்கலத்தால் செய்யப் பெற்ற அலகினை விளிம்பில் உடையது 'ஆம்பற் குழல்' என்றும் பெயர் பெற்று விளங்கின.

'குழல் என்று பழந்தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப் பெறவது புல்லாங்குழல் அன்று; குழல் என்பது நாகசுரத்தையே குறிப்பதாகும்' எனச் சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சங்ககாலத்தின் கடைப் பகுதியில், வடநாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குக் கொண்டுவரப்பெற்றதே புல்லாங்குழல் என்பது அவர்களுடைய துணிவாகும்.

நாம் மேலே கண்ட குழலைப் பற்றிய குறிப்புகளுள் ஓரிடத்தில்கூட, குழல் ஆயருடைய இசைக்கருவி என்றோ, கண்ணனுடைய இசைக் கருவி என்றோ பேசப்பெறவில்லை. ஆனால், முதன்முதலாகத் திருக்குறளிலும் கலித்தொகையிலும், சிலப்பதிகாரத்திலுமே ஆயர்களோடும் கண்ணனோடும் தொடர்புடையதாகக் குழல் குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

**குழல்போலும் கொல்லும் ஆயன் படை (குறள் 1228)**

**கழூவொடு சுடுபடை சுருக்கிய தோற்கண்**
**இமிழிசை மண்டை யுறியொடு தூக்கி**
**ஒழூகிய கொன்றைத் தீங்குழல் முரற்சியர் (கலி.106.1-3)**

**தூங்குக் குரவையுள் நின்பெண்டிர் கேளாமை**
**யாம்பல் குழலால் பயிர்பயிர் எம்படப்பை**

**(கலி.108. 61-62)**

**கோவல ரூதுங் குழலின் பாணியும்**

**(சிலப்.27. 241)**

என்பன கோவலர் (ஆயர்) குழல்களைக்கொண்டு இசை எழுப்புவதைத் தெரிவிக்கின்றன.

இனி, கண்ணன் குழலூதும் செய்தி சிலப்பதிகாரத்தில்தான், முதன்முதலாகக் குறிப்பிடப்பெற்றுள்ளதைக் காணுகின்றோம்.

ஆய்ச்சியர் **குரவை** என்ற பகுதியில், திருமாலின் **சீரை**யும் சிறப்பையும், ஏரையும் எழிலையும் போற்றிப் பரவும் ஆயர்

மகளிர் பாடிய பாடல்களில் கண்ணனின் தீராதவிளையாட்டுகள் பேசப்பெறுகின்றன.

**கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்**
**இன்றுநம் மானுள் வருமே லவன் வாயிற்**
**கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!**

**பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்**
**ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்**
**ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!**

**கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்**
**எல்லைநம் மானுள் வருமே லவன்வாயில்**
**முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!**

**(சிலப்.17:19-21)**

இப்பகுதிக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார், 'இதனுள் குழலென்றது வங்கியத்துப் பொதுப் பெயர். இஃது ஐந்து கூறுபடும்' என்று கூறி அவற்றை விரிவாக விளக்கியுள்ளார்.

'வங்கியப் பொதுப் பெயர்' என்பதனால் அது புல்லாங் குழலையும், நாதசுரத்தையும் குறித்ததாகக் கொள்ளலாம். இங்குக் குறிப்பிடுவது புல்லாங்குழல் என்பதை அவருடைய உரை விளக்கத்தால் நாம் அறிய முடிகிறது. சங்க இலக்கியங்களுள் காலத்தால் பிற்பட்ட திருக்குறளிலும், கலித்தொகையிலும், சங்கமருவிய காலத்து எழுந்த சிலப்பதிகாரத்திலும் குழல் பற்றிக் காணப் பெறுகின்ற குறிப்புகள், 'புல்லாங் குழலை'ப் பற்றியனவாக இருக்கலாம். ஆனால், பத்துப்பாட்டிலும் கலித்தொகை நீங்கலாக உள்ள எட்டுத்தொகை நுல்களில் குறிக்கப்பெறும் குழல் நாதசுரத்தையும், புல்லாங்குழலையும் பொதுவாகக் குறிப்பனவாக நாம் கூறலாம். இதனால், இவ்விரு கருவிகளும் தொன்றுதொட்டு தமிழகத்தில் வழக்கில் இருந்தன எனக்கொள்ள இடமுண்டு.

குழல் போன்ற வடிவத்தையுடையனவாக உள்ளமையால், அவை இரண்டையும் குழல் என்ற பெயராலேயே பண்டைத் தமிழர் வழங்கினர் போலும்.

**2.தூமும்பு**

தூம்பு என்பதனை வங்கியம் என்ற இசைக் கருவி என்று பண்டை உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். 'தூம்பு' என்ற சொல்லிற்கு 'உள்ளீடு அற்றது' என்பது பொருளாகும். அதாவது உள்ளே சடப்பொருள் அற்ற 'போலை' யுடையது இதனை,

**கடுவொ டொடுங்கிய தூம்புடைவாலெயிற்று...**

*பாம்பு* *(பத்து திருமு.148.50)*

**தூம்பு உடைதிரள்தாள் துமித்த வினைஞர்**

***(பத்து பெரும்131)***

என்னும் இலக்கிய வழக்குகளால் நாம் அறியலாம். இதனால், முற்றிலும் உள்ளீடு அற்றதாய் குழல் வடிவில் செய்யப் பெற்ற இசைக் கருவியைத் 'தூம்பு' என்ற பெயரால் நம்முடைய முன்னோர்கள் குறிப்பிட்டனர் எனலாம்.

அதில் எழுப்பப் பெற்ற இசை ஆண் மானின் குரலொலியைப் போன்று கடுமையான குரலாக இருக்கும் என்று கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

**கணக்கலை இருக்கும் கடுங்குரல் தூம்பொடு *(அகம் 82)***

யானையின் பெருமூச்சைப் போன்ற ஓசையுடையது தூம்பு என்பதைப் பின்வரும் பாடற் பகுதிகள் தெரிவிக்கின்றன.

**கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்**

***(புறம் 152)***

**நீர்நசைக் கூக்கிய வுயவல் யானை**
**யியம்புணர் தூம்பி னுயிர்க்கு மத்தம்**

***(ஐங். 77)***

**ஓய்களி றெடுத்த நோயுடை நெடுங்கை**
**தொகுசொற் கோடியர் தூம்பி னிசைக்கும்**

***(அகம்.111)***

**செறிநடைப் பிடியொடு களிறுபுணர்ந்த தென்னக்**
**குறுநெடுந் தூம்பொடு முழவுபுணர்ந் திசைப்ப**

***(அகம்.301)***

**கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்**
**கிள்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு**

***(பத்து மலை 6-7)***

**கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கி** ***(பதிற்று.41)***

மேற்கண்ட இலக்கியச் சான்றுகளால் தூம்பு என்பது வாத்தியம் என்னும் வாச்சியம்; இது குறுந்தூம்பு, நெடுந்தூம்பு என இருவகைப்படும்; அது துளைகளையுடையது. கண்ணறுத் தியற்றிய தூம்பு என்றது மூங்கிலின் கணுக்களை அறுத்து இயற்றப்பட்டதைக் குறிப்பதாகும் என்னும் பல செய்திகளை நாம் அறிகிறோம். 'கழைவளர் தூம்பின்' என்பதற்கு 'மூங்கிலாகிய இசை வளம் நெடுவங்கியத்தோடே'[6] என்று நச்சினார்க்கினியர் வரைந்துள்ள உரை விளக்கம் இங்கு குறிப்பிடத்தக்கது. இது யாழ் முதலிய இசைி கருவிகளோடு சேர்த்து இசைக்ககப் பெற்றமை 'இயம்புணர் தூம்பு' என்பதனால் தெரிகிறது.

இதனை,[7] இக்காலத்தில் நாதசுரத்துடன் ஊதப் பெறுகின்ற சுருதியோடும் கருவியாகிய 'ஒத்து' என்பர். இதற்குச் சுரம் வாசிக்கும் துளைகள் இல்லை. தூம்பையும் குழலையும் வங்கியம் என்ற பொதுப் பெயராலேயே உரையாசிரியர்கள் சுட்டுவதனால், அவற்றின் வடிவ அமைப்பிலும், இசைக்கும் முறையிலும் பெரிதும் ஒப்புடை இருந்தமை தெரியவருகிறது. தூம்பினை நாதசுரத்தின் பண்டை முன்னோடி என நாம் கூறலாம்.

---

*6. பத்து மலை. 533.*
*7. (1) ஐங். 377.*

**3.கொம்பு**

*மான் கொம்பு, மாட்டுக்கொம்புகளை ஊதும் பழக்கம் பழைமையானது. வெண்கலத்தாலும், பிற உலோகங்களாலும் அவற்றைப் போன்ற கருவிகளைச் செய்து இசைக்கருவிகளாகப் பயன்படுத்தும் பழக்கம் அண்மைக்காலம் வரையில் இருந்து வந்திருக்கிறது. இதனைக் கோடு, 'எக்காளம்', 'வயிர்', 'துத்தரி', 'சிங்கநாதம்' என்றும் வழங்குவர்.*

***கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி***

***(பத்து. திருமு.246)***

***கோடுவாய் வைம்மின் கொடுமணி இயக்குமின்***

***(சிலப்.24,17)***

***கோடுங் குழலும் பீடுகெழு மணியும்***
***கணங்கொண்டு துவைப்ப (சிவப். 12; 41-2)***
***காழ் வயிரு எழுந்திசைப்ப (பத்து. திருமு, 120)***
***வயிரும் வளையும் ஆர்ப்ப (பத்து 5: 92)***
***வளைநரல வயிரார்ப்ப (பத்து, மதுரை. 185)***

*பிற்காலத்தில் பித்தளையால் செய்யப் பெற்ற 'தாரை', திருச்சின்னம் போன்ற கருவிகள் வழக்கிற்கு வந்துள்ளன. இவை கொம்பின் வகையைச் சேர்ந்தனவாகும்.*

**4. சங்கு**

*சங்கு இயற்கையில் கிடைக்கும் இசைக் கருவி. அதைத் தூய்மைப்படுத்தி ஊதுவது பன்னெடுங் காலமாக இருந்து வரும் வழக்கமாகும். சங்கிற்கு வளை, பணிலம் என்னும் பெயர்களே பழமையானவை. மேலே வயிருடன், வளை சேர்த்து இசைக்கப் பெற்றதை நாம் கண்டோம். பணிலம் இசைக்கருவியாகப் போற்றப் பெற்றதை,*

***பறைபடப் பணிலம் ஆர்ப்ப (குறுந். 15)***
***பணிலங் கலியவிந் தடங்க (பத்து, மதுரை. 621)***
***முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன பணிலம்***

***(சிலப். மங்க.46)***

*என்னும் இலக்கியச் சான்றுகளால் நாம் அறிகிறோம்.*

இந்நால்வகைக் கருவிகளே அல்லாமல், வேறு சில துளைக் கருவிகளும் பண்டைத் தமிழகத்தில் பயன்படுத்தப்பெற்றதை, நாம் சங்க இலக்கியத்தால் அறிய முடிகிறது. அவற்றுள் பாம்பாட்டிகள் பயன்படுத்திய 'மகுடி' சிறப்புமிக்கதாகும். பொதுவாக இது சுரைக் குடுக்கையின் மேலும் கீழும் சிறிய மூங்கில் குழல்களைப் பொருத்தி அமைக்கப்பெறும்.

**3.நரம்புக் கருவிகள்**

இழுத்துக் கட்டப்பட்ட நரம்புகளை மீட்டுவதால், இசையொலியை எழுப்பும் கருவிகள் நரம்புக் கருவிகளாகும். தமிழன் கண்ட ஒரே நரம்புக் கருவி யாழ். அது நரம்புக் கருவிகளுள் ஒப்புயர்வற்றதாக விளங்கியது. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த பழந்தமிழர்கள், இயற்கையில் காணப்பெறும் பொருள்களின் அசைவினாலும் அவை ஒன்றோடொன்று மோதிக் கொள்ளவதனால் உண்டாகும் அதிர்ச்சியனாலும் ஏற்படும் பலவிதமான ஒலிகளைத் தங்களுடைய நுண்ணிய செவியால் உணர்ந்து அனுபவித்தனர். வேட்டுவர் தங்கள் தொழிலைச் செய்கின்றபொழுது இறுகக் கட்டிய 'வில்' நாணின் ஓசையை உணர்ந்து வில் போன்ற வளைவுடையதும், நரம்புகளாலானதும், விரல்களால் அசைக்கப் பெறுவதுமான ஓர் இசைக் கருவியைக் காலப்போக்கில் அமைத்துக் கொண்டனர். அதனை 'வில்யாழ்' என்று அழைத்தனர்.

**1. வில்யாழ்**

ஆடு, மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கும் நேரத்தில், ஆயர்கள் இத்தகைய யாழினைச் செய்து இசையெழுப்பி இன்புறுவர் என்று பெரும்பாணாற்றுப்படை தெரிவிக்கிறது.

ஞெலிகோல் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
இன்தீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுக்க மாற்புரி நரம்பின்
வில்யாழிசைக்கும் விரலெறி குறிஞ்சி

*(பத்து. பெரு.178. 182)*

இத்தகைய முறையிலேயே 'யாழ்' என்ற நரம்புக் கருவி தோன்றிப் பிற்காலத்தில் பலவகையாக வளர்ந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் நானிலத்தின் கருப்பொருள்களுள் ஒன்றாக 'யாழினை'க் குறிப்பிட்டுள்ளார். 'யாழ்' என்பது இசையையும் இசையைத் தரும் கருவியாகிய யாழையும் குறிப்பதாகும்.

## 2. நால்வகை யாழ்

ஒவ்வொரு சுரத்திற்கும், தனித்தனி நரம்பு கட்டப்பெற்றது பழந்தமிழர் கண்ட யாழ் என்னும் இசைக் கருவி. அது நால்வகைப்படும். அவை 'பேரியாழ்', 'மகரயாழ்', 'சகோடயாழ்' 'செங்கோட்டி யாழ்' என்பனவாகும்.

**பேரியாழ் மின்னு மகரஞ் சகோடமுடன்**
**சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினார் –தார்பொலிந்து**
**மன்னுந் திருமார்ப வன்கூடற் கோமானே**
**பின்னு முளவே பிற (சிலப் 3: 26 அடி உரை மேற்கோள்)**

பெரியாழ் 21 நரம்புகளையும், மகரயாழ் 19 அல்லது 17 நரம்புகளையும், சகோடயாழ் 14 நரம்புகளையும், செங்கோட்டி யாழ் 7 நரம்புகளையும் கொண்டதாக இருந்தன. இவற்றுள் பேரியாழும் செங்கோட்டியாழுமே பண்டைத் தமிழகத்தில் பெருவழக்காக இருந்தன. ஏழு நரம்புகள் ஒரு தானமாதலின் பேரியாழிலே மூன்று தானங்கள் இருந்தன. அவை மெலிவுத் தானம், சமன்தானம், வலிவுத்தானம் என்பன. பெரியாழின் ஒவ்வொரு தானத்திலும் உள்ள ஏழு நரம்புகளும் 'கமபதநி சரி' என்னும் முறையாக அமைக்கப் பெற்றதாக அறிஞர் கூறுவர்.

பெரியாழின் பின், 'சீறியாழ்' (சிறிய யாழ்) தோன்றியது. இதுவே செங்கோட்டியாழ் எனப்படும். பொதுவாக இதற்கு ஏழு நரம்புகளே உண்டு. சிலவற்றில் ஒன்பது நரம்புகளும் இருந்தன என்பதைத் 'தொண்டுபடு திவவின் முண்டக நல்யாழ்' என்று ஆசிரியமாலை கூறுகிறது. பாடப்பெறுகின்ற பெரும் பண்ணுக்கு ஏற்ப, சீறியாழின் நரம்புகளுக்கு இசை கூட்டுவது வழக்கம்.

*'குழலினிது யாழினிது என்பதம் மக்கள்*
*மழலைச்சொல் கேளா தவர்' (குறள், 66)*
*'யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா*
*...புதல்வர் தம்மழலை' (புறம். 92)*
*ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை*
*யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதா மென்செய்யும்*
*(கலி: 9)*

என்னும் இலக்கிய வழக்குகளால் பழந்தமிழருடைய வாழ்க்கையில், யாழிசைக்குக் கொடுக்கப்பெற்ற முதன்மையும் சிறப்பும் தெரியவருகின்றன. யாழிசையைக் கேட்டு விலங்குகளும் மெய்ம்மறந்து நின்றனவாம். இதனை,

*காழ்வரை நில்லாக் கடுங்களிற் றொருத்தல்*
*யாழ்வரைத் தங்கி யாங்கு*

என்னும் கலிப்பாட்டு (2) அறிவிக்கிறது.

பேரியாழ் பற்றிய குறிப்புகள் சில சங்க இலக்கியத்துள் காணப்படுகின்றன.

*................வீறுபெறு*
*பேர்யாழ் முறையுளிக் கழிப்ப (பத்து. பொரு. 168-8)*
*வண்டுபடு கூந்தன் முடிபுனை மகளிர்*
*தொடைபடு பேரியாழ் பாலை பண்ணி (பதிற். 46)*
*பாணர் கையது பணிதொடை நரம்பின்*
*விரல்கவர் பேரியாழ் பாலை பண்ணி (பதிற்.57)*
*வாங்கிரு மருப்பிற் றீந்தொடை பழுனிய*
*இடனுடைப் பேரியாழ் பாலை பண்ணி (பதிற். 66)*
*களங்கனி யன்ன கதழ்ந்துகிள ருருவின்*
*வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்*
*(பத்து. மலை.36-7*

*சீறியாழ் எனப்படும் செங்கோட்டு யாழே, சங்க காலத்தில் பெரு வழக்குடையதாக இருந்தது. செம்மையான கோட்டினையுடைய யாழ் என்பது இதற்குப் பொருள். இதனைப் பொதுவாக 'யாழ்' என்ற பெயரளவிலேயே குறிப்பிடுவர்.*

**கணைகொடிது யாழ்கோடு செவ்விது**

**(குறள் 279)**

**மண்ணமை மூழ்வின் பண்ணமை சீறியாழ்**

**(பத்து. பொ.109)**

**செவிநேர்பு வைத்த செவ்வுறு திவவின்**
**நல்வியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்**
**மென்மொழி மேவலர் இன்னரம் புளர**

**(பத்து முருகு.140-42)**

**புணர்புரி நரம்பின் றீந்தொடை பழுனிய**
**வணரலாம நல்யாழி ளையர் பொறுப்ப (பதிற். 41)**
**களங்கனி யன்ன கருங்கோட்டுச் சீறியாழ் (புறம் 127)**
**வணர் கோட்டுச் சீறியாழ் (புறம் 155)**
**வாங்குமருப் பியாழொடு (புறம்: 281)**
**வாங்கு மருப்பிற் றீந்தொடைச் சீறியாழ் (புறம் 285)**
**வணர்கோட்டுச் சீறியாழ் (சிலப் நடு. 31)**
**செந்நிறம் புரிந்த செங்கோட்டி யாழ் (சிலப். புறஞ். 106)**

*இதையே ஊர் ஊராகச் சுற்றித் திரிந்த பாணர்கள். தங்களுடன் எடுத்துச் சென்றனர் என்ற செய்தி தெரியவருகிறது.*

*மகரயாழ் என்பது பேரியாழின் இருபத்தொரு நரம்புகளிலே இரண்டினையோ, நான்கினையோ குறைத்து அமைக்கப்பெறுவது. இதனால், இந்த யாழ் பத்தொன்பது அல்லது பதினேழு நரம்புகளைக் கொண்டதாக இருந்தமை தெரிகிறது. இது சுறா, (மகர) மீனின் வடிவமுடையதாகச் செய்யப் பெற்றமையால், இப்பெயர் பெற்றது. மகர யாழைப் பற்றிய குறிப்பு பத்துப் பாட்டிலும், எட்டுத் தொகையிலும் காணப்பெறவில்லை. சிலப்பதிகாரத்தின் கானல்வரிப் பாடலிலே,*

**சித்திரப்படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர்புனைந்து**
**மைத்தடங்கண் மணமகளிர் போல் வனப்பெய்திப்**
**பத்தருங்கோடும் ஆணியும் நரம்பும் என்று**
**இத்திறநத்துக் கற்ற நீங்கிய யாழ்**

என்று கூறப்பெறுவது, மகரயாழாக இருந்திருக்கலாம் என்பது யாழ் நூலாசிரியர் விபுலானந்தரின் கருத்தாகும்.8

மணிமேகலையிலேயே **மகரயாழ்** என்னும் சொல்லாட்சியை நாம் முதன் முதலாகக் காண்கின்றோம்.

**தசரக் குழலாள் தன்னோடு மயங்கி**
**மகர யாழின் வான்கோடு தழீஇ**
**வட்டிகைச் செய்தியின் வரைந்த பாவையின்**

**(மணி 4: 55-57)**

ஆனால், வேறொர் இடத்தில் **மகரவீணை** என்று சாத்தனார் குறிப்பிட்டுள்ளார்.

**மகரவீணையின் கிளைநரம்பு வடித்த**
**கிளிபுணர் இன்சீ ரெஃகு உளங்கிழிப்ப**

**(மணி.19. 25-26)**

பின்னர்ப் பெருங்கதையிலும், சீவகசிந்தாமணியிலும் இந்த யாழைப் பற்றிய குறிப்புகள் வந்துள்ளன. ஆனால், அவை மகரவீணை என்ற பெயராலேயே சுட்டப்பெறுகின்றன.

**யாணர்க் கூட்டத் தியவனாங் கைவினை**
**மாணப் புணர்ந்ததோர் மகரவீணை**

**(பெருங். 13-15, 22-23)**

**தீந்தொடை மகரவீணைத் தெள்விளி யெடுப்பித்தேற்றிய**

**(சிவ. காந். 608**
**)**

---

8. 'குமரன்' தமிழிசை மலர், காரைக்குடி இதழ் 2-4-1942, பக்.176.

பெருங்கதையில் 'யவனக் கைவினை ............... 'மகரவீணை', என்று குறிக்கப்பெறுவதால், ஒருகால், அது யவனருடைய நாட்டிலிருந்து கொண்டுவரப் பெற்றதாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

சகோட யாழ் பதினான்கு நரம்புகளைக் கொண்டது. இதனை 'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி.[9] (சிலப் 3: 70) எனவும், 'பிழையா மரபின் ஈரேழ் கோவை'[10] (சிலப். 8:31) எனவும் தமிழ்ச் சான்றோர்கள் போற்றியுள்ளனர். பேரியாழிற்கும், செங்கோட்டி யாழிற்கும் இடைப்பட்டதாகவும், அடக்கமான வடிவினையுடையதாகவும் இது இருந்தது. இதனால், பெரிதும் இசைவாணர்களும், அரசரது அரண்மனை மகளிரும், ஆடல் மங்கையரும் இதனைப் பெரிதும் பயன்படுத்தினர். சிலப்பதிகாரத்தில் மாதவி அரங்கேறியபொழுது, யாழாசிரியன் இக்கருவியைக் கொண்டு இசை எழுப்பியுள்ளான்.[11] (3.70) கோவலனால் கைவிடப்பட்ட மாதவி சகோட யாழில் இசையெழுப்பி, தன் மனத்துன்பத்தைப் போக்கிக் கொள்ள முயன்றாள் என்று இளங்கோவடிகள் வேனிற்காதையில்[12] (30-40) குறிப்பிட்டுள்ளார்.

**நாடுகாண் காதையில்,**

ஈரேழ் சகோடமு மிடநிலைப் பாலையும் (சிலப். 10: 14)

என்று அவர் சகோடயாழினைப் போற்றிப் பாராட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தால் மட்டுமே இந்த யாழைப் பற்றிய செய்திகள் தெரியவருகின்றன.

இந்நால்வகை யாழ்க் கருவிகளோடு வில்யாழும், ஐவகை நிலத்திற்குரிய 'குறிஞ்சியாழ்', 'முல்லையாழ்', 'மருதயாழ்', 'பாலையாழ்' என்ற வேறு பிற யாழ்களும் பண்டைத் தமிழர்களால் பயன்படுத்தப் பெற்றன. பாலையாழை,

---

9. சிலப். 3: 70
10. சிலப். 8: 31
11. சிலப். 3: 70
12. சிலப். 8: 30-40

*மணங்கமழ் மாதரை மண்ணியன்ன*

*அணங்குமெய்ந் நின்ற அமைவரு காட்சி*

*ஆறலை கள்வர் படைவிட அருளின்*

*மாறுதலை பெயர்க்கு மருவின் பாலை*

*(பத்து. பொ. 18-22)*

என்று பொருநராற்றுப் படை குறிப்பிடுகிறது.

*பாலை குறிஞ்சி மருதஞ்செவ் வழியென*

*நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே (பிங்.நி.1375)*

*உரவிய பாலையாழே மழவிய குறிஞ்சி யாழே*

*மருதஞ்செவ்வழி யாழென்ன வகுத்த நாலிசையு நாற்பணி*

*(சூடா. நி.12-19)*

என்னும் குறிப்புகளால், நால்வகை யாழும் அவற்றிற்குரிய நால்வகைப் பண்களும் நெடுங்காலமாக வழக்கு வழிப்பட்டிருந்தமை புலனாகின்றன.

**பாணரும் யாழும்**

யாழிற்கு 'கேள்வி' என்ற பொதுப்பெயரும், 'பாணர்கைவழி' என்ற சிறப்புப் பெயரும் வழங்கி வந்தமை இங்குக் கருதத் தக்கதாகும்.

*அமிழ்துபொதிந் திலிற்றும் அடங்குபுரி நரம்பின்*

*பாடுதுறை முற்றிய பயன்றெரி கேள்விக்*

*கூடுகொள் இன்னியம் (பத்து சிறு 227-229)*

*ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி (சிலப். 3-70)*

*பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்*

*தொடையமை கேள்வி (பத்து. பொரு. 16-15)*

*கையது கடனிறை யாழே (புறம்: 69)*

*கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி (புறம்: 149)*

யாழின் உறுப்புகளாகிய பத்தல், பச்சை, போர்வை, ஆணி, வறுவாய், திவ்வு, கவைக்கடை, நரம்பு தொடையல், மருப்பு என்பன பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம் போன்ற சங்கப் பாடல்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

இந்த யாழ்க் கருவிகளில், இசை மீட்டியவர்கள் பாணர் என்ற பெயர் பெற்றிருந்தனர். 'பண்'ணினை மீட்டுபவர் 'பாணர்' என்று அழைக்கப் பெற்றனர். சிறிய பாழைப் பயன்படுத்தியவர்கள், 'சிறுபாணர்' என்றும் பெரிய யாழைப் பயன்படுத்தியவர்கள் பெரும்பாணர் என்றும் சிறப்புற்றனர். இவர்கள் நால்வகைப் பண்ணையும், அறுவகைச் சிறுபொழுதுகளுக்கு ஏற்றவகையில், பாகுபடுத்தி யாழில் பாடி வந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள்,

**வைகறை விடியல் காலையில் மருதப் பண்ணையும்**

**நண்பகற் பொழுதில் பாலைப் பண்ணையும்**

**ஏற்பாடு, மாலைப் பொழுதுகளில் செவ்வழிப் பண்ணையும்**

**யாமப் பொழுதில் குறிஞ்சிப் பண்ணையும்**

மரபு அறிந்து பாடியதாக நாம் அறிகின்றோம். மகிழ்ச்சி மிகுதியால் இம்மரபை அவர்கள் மாற்றிப் பாடியதை,

**நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்**

**மாலை மருதம் பண்ணிக் காலைக்**

**கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி**

**வரவெமர் மறந்தனர்** *(புறம்: 1-49)*

என்று ஒரு புலவர் குறிப்பிட்டுள்ளமை இக்கருத்தை வலியுறுத்தும்

### யாழும் வீணையும்

பல்லவர்களுடைய ஆட்சிக்காலத்திற்கு முன்பே, யாழிற்குப் போட்டியாக வடநாட்டு இசைக் கருவியாகிய வீணை தமிழ் நாட்டில் வழக்கிற்கு வரலாயிற்று. வீணை என்ற சொல்லாட்சி முதன் முதலாக மணிமேகலையில்,

**மகர வீணையின் கிளை நரம்பு வடித்த (மணி. 19-25)**

என்றும், பெருங்கதையில்

**மாணப் புணர்ந்ததோர் மகர வீணை (பெருந். 3. 15-23)**

என்றும் இடம் பெற்றுள்ளது.

இவற்றிற்குச் சற்று முற்பட்ட காலத்தில், பரிபாடல் என்ற நூலில் 'தெய்வப் பிரமம்' என்றொரு இசைக்கருவி குறிப்பிடப் பெற்றுள்ளது.

**'தெய்வப் பிரமஞ் செய்கு வோரும்' (பரி. 19:40)**

அதனைப் பிரமவீணை என்று உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

திருஞானசம்பந்தர் 'யாழ் முரி' என்ற ஒரு பதிகத்தைப் பாடியுள்ளர். அதாவது யாழில் வாசிக்க முடியாத பாட்டு என்பது அதற்குப் பொருளாகும்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனுடைய குடுமியாமலைக் கல்வெட்டில் (கி.பி.600-630) குறிப்பிடப்பெறும் **'பரிவாதிநி'** யாழ் அன்று; வீணையே யாகும். அக்காலத்தில் வாழ்ந்த அப்பரே,

மாசில் **வீணையும்** மாலை மதியமும் என்று தெளிவாக வீணையைக் குறிப்பிட்டுள்ளார். ஒன்பதாம் நூற்றாண்டினரான மாணிக்கவாசகர்,

**இன்னிசை வீணையர்; யாழினர் ஒருபால்**

**(திருவா. திருப்.)**

என்று இரு இசைக்கருவிகளையும் வேறுபடுத்திக் கூறியுள்ளமை கருதத்தக்கது. இவருக்குப் பின்னால் வந்த கல்லாடர், திருத்தக்கர் போன்றவர்கள், யாழ் என்ற பெயராலேயே வீணையையும் குறிப்பிடலாயினர். புதிதாக வந்த பொருளுக்கு நன்கு பழக்கப்பட்டதும், புதிய பொருளோடு ஒரு புடை ஒப்புடையுடையதுமான பழைய பொருளின் பெயரையே வழங்குவது மக்களியல்பு அதற்கேற்ப,

**நாரதப் பேரியாழ்,**
**கீசகப் பேரியாழ்**

என்று கல்லாடரும்,

**அண்ணல் யாழ் நரம்பைப் பாய்ந்து (சீவ.சிந்.723)**

என்று திருத்தக்க தேவரும்

**நெற்றித் தனிக்கண் நெருப்பைக் குளிர்விக்கும்**
**கொற்றத் தணியாழ் (நளவெண்பா. 320)**

என்று புகழேந்திப் புலவரும் வழங்கியுள்ளனர்.

இவற்றால் யாழ் வேறு, வீணை வேறு என்ற உண்மை புலனாகிறது. யாழின் அமைப்பு வீணையின் அமைப்பிலிருந்து வேறுபட்டது. இதனை,

'ஒவ்வொரு சுரத்திற்கும் தனித்தனி நரம்பு கட்டப்பெற்றது. பழந்தமிழர் கண்ட யாழ் என்னும் இசைக்கருவியாகும். ஒரே நரம்பிலே, பல சுரங்களையும் வாசித்தற்கமைந்தது பிற்காலத்து வீணைக் கருவியாகும். இவ்வீணைக் கருவி, ஒரே முறையில் தொடர்ந்து செல்லும் தொடரிசையினை மட்டுமே வாசித்தற்குரியது. பழந்தமிழர் பயன்படுத்திய யாழ்க் கருவியோ, தொடரிசையுடன் பலரும் சேர்ந்து பாடும் பண்ணாகிய ஒத்திசையினையம் வாசித்தற்கேற்ற அமைப்பினையுடையதாகும். தொடரிசையினை மட்டும் வாசித்தற்குரிய வீணைக் கருவியைக் காட்டிலும் தொடரிசையினையும் ஒத்திசையினையும் சேர வாசித்ததற்கு அமைந்த யாழ்க்கருவி பெரிதும் சிறப்புடையதாகும்' என்று விபுலாநந்தர் அடிகள் குறிப்பிட்டுள்ளமையால்.[13] அறியலாம்.

சிந்தாமணி ஆசிரியராகிய திருத்தக்கத் தேவர் காலத்தில், யாழிற்கும் வீணைக்கும் இடையே இருந்து வந்த வேறுபாடு மறைந்து, யாழ் என்றால் வீணை, வீணையென்றால் யாழ் என்னும் பொருள்படும் நிலை உண்டாயிற்று. யாழிசையொடு மிடற்றுப் பாடலும் சேர்ந்த ஒன்றையே 'வீணை' என்ற திருத்தக்கத்தேவர் சுட்டுவதாக நச்சினார்க்கினியர் குறிப்பிடுகிறார்.

---

13. 'குமரன்' தமிழிசைமலர், 'பழந்தமிழரின் யாழ்க் கருவிகள், பக்.179, காரைக்குடி, 2-4-1942.

விருந்தாக யாழ் பண்ணி வீணை தோற்பாள்'

(சிந்த 730)

என்பது போதிய சான்றாகும்.

இதனால், யாழ் மெல்ல மறையத் தொடங்கியதை நாம் அறிய முடிகிறது. கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டு அளவில், யாழ் அடியோடு தமிழகத்திலிருந்து மறைந்து போயிற்று.

'முன்னாளிலே பாணன் கையிலும் இருந்த யாழ்க் கருவியானது, இளங்கோவடிகள் காலத்திலே இசையாசிரியன் கையிலும், நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது. ஆளுடை பிள்ளயாருடைய காலத்திலு தெய்வ மீந்த பொற் பலகை மீதேறி அன்பர் உள்ளத்தை உருக்கிய அருட் கருவியாயிற்று. கொங்குவேளும் திருத்தக்கதேவரும் நூல் எழுதிய காலத்தில் அரசிளங்குமரிகள் கையில் ஏறி அவர் மனம் விரும்பிய காதலைரை அவருக்கு அளிக்குங் கருவியாயிற்று... சரித்திர கால எல்லைக்கு எட்டாத காலத்திலே வில்யாழ் எனப்பெயரிய குழவியாய் உதித்து. மழலைச் சொற்பேசி, இடையர் இடைச்சியரை மகிழ்வித்தது. சீறியாழ் என்னும் பேதைப் பருவச் சிறுமியாகப் பாணனொடும் பாடினியொடும் நாடெங்கும் திரிந்து, ஏழைகளும் களிப்பெய்த இன்சொற் கூறி, பின்பு பேரியாழ் என்னும் பெயரோடு பெதும்மைப் பருவம் எய்திப் பெரும்பாணரோடு சென்று, குறுநில மன்னரும், முடி மன்னரும், தமிழ்ப் புலவரும் கொடை வள்ளல்களும் கேட்டு வியப்பெய்தும் வண்ணம் நயம்பட வுரை பகர்ந்து, அதன்பின் ஆடையும் அணிகலனும் பூண்டு நாடக அரங்கத்திலே திறமை காட்டி மடத்தைப் பருவம் வந்து எய்துதலும், திருநீல கண்ட பெரும்பாணரொடும் மதங்க சூளாமணியாரொடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்கள் பலவற்றை வலம் வந்து, தெய்வ இசையிலே அன்பர் உள்ளத்தினை உருக்கி, முத்தமிழ் விரகரால் பாராட்டப்பட்டு, அரிவைப் பருவம் வந்தெய்துதலும் அரசிளங்குமரிகளுக்கு இன்னுயிர்ப்பாங்கியாகி அவர்க்கேற்ற தலைவரை அவர்பாற் சேர்த்திச் சீரும் சிறப்பும் எய்தி நின்ற யாழ் என்னும் மென்மொழி நங்கை இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயினாள்' என்பது தமிழரின் ஒப்புயர்ற்ற யாழ்க் கருவியின் வரலாறாகும்.

**கஞ்சக் கருவி**

கஞ்சம் என்னும் சொல் வெண்கலம், பாத்திரம் எனப்பொருள்படும் வடமொழிச் சொல்லாகும். ஒன்றோடொன்று தட்டியடிக்கும் கருவியாகிய இதனைக் கஞ்சக் கருவி என்றும், கரைவாச்சியம் என்றும் வழங்குவர். தாளம், மணி முதலியன இவ்வகையைச் சேர்ந்தனவாகும்.

**1. தாளம்**

தாளம் என்பது பல இசைக்கருவிகளோடு சேர்த்து வாசிக்கப்படும் கருவியாகும். இது வெண்கலத்தால் வட்ட வடிவமாக செய்யப்பெற்றது. இளங்கோவடிகள் இதனைக் 'கொட்டு' என்பர்.

**கொட்டிரண்** டுடையதோர் மண்லமாக (சிலப்.3-144)

இவ்வடிகளுக்கு உரை எழுதிய அரும்பத உரையாசிரியர் 'ஒரு தாளத்துக்கு இரண்டு பற்றாக வென்றவாறு' (சிலப். பக்.74) என்றும், 'ஒரு தாளத்திற்கு இரண்டு 'பற்றாக' என்று அடியார்க்கு நல்லாரும் (பக்.119) தெளிவுறுத்தியுள்ளனர்.

திருஞான சம்பந்தப் பெருமானிற்கு இறைவன் பொற்றாளம் கொடுத்த வரலாறும் இங்கு நினைகூர்வதற்குரியதாகும்.

கோயில்களில் பயன்படுத்தப்பெற்ற பெரிய தாளம், 'பிரமதாளம்' என்று வழங்கப்பெற்றது.

**2. மணி**

அரசருடைய அரண்மனைகளிலும், கோயில்களிலும் வெண்கலத்தால் செய்யப்பெற்ற மணிகள் பயன்படுத்தப்பெற்றன. பெரிய வடிவினையுடைய மணிகள் 'கண்டா மணிகள்' என்று வழங்கப் பெற்றன. மனுநீதிச் சோழனுடைய அரண்மனை வாயிலில் கட்டப்பட்டிருந்த மணியினை,

**வாயிற் கடைமணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத் தான்றன்**
**அரும்பெறற் புதல்வனை யாழியின் மடித்தோன்**

**(சிலப். 20:52-54)**

என்று இளங்கோவடிகள் குறிப்பிட்டுள்ளார்.

*பல்லவர் காலத்தில், திருக்கோயில்களில் மணிகள் பயன்படுத்தப் பெற்றதைத் தேவாரப் பதிகங்களால் நாம் அறிகிறோம்.*

*நம்முடைய முன்னோர்கள், பண்டைக் காலத்தில் பயன்படுத்திய இசைக்கருவிகளின் வரலாற்றை நாம் இதுவரையில் கண்டோம். அவர்கள் இசைக்கருவியை மிடற்றுக் கருவி, குயிலுவக் கருவி என்று பாகுபாடு செய்திருந்த சிறப்பும், குயிலுவக் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என்று வேறுபடுத்தி வழங்கிய நுட்பமும் அவர்களுடைய இசை அறிவின் நுண்மாண் நுழைபுலத்தைத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.*

# 6

# தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பல்லவர் காலத் தமிழர் நாகரிகம்

இந்தியா பிற நாடுகளைக் கொள்ளையடிப்பதற்கோ சூறையாடுவதற்கொ தனது படைகளை அனுப்பியது இல்லை. ஆனால், பல்வேறு நாடுகளிடையே நட்புறவை வளர்ப்பதற்கும் அமைதிப் பணிபுரிவதற்கும் தொண்டர் குழுக்களை அனுப்பியதுண்டு. இந்நற்பணிகளை ஆற்றுவதையே 'தவமென'க் கொண்டு ஒழுகிய இந்தியத் தாய் இப்பணிகளால் பொன்றாப் புகழ் பெற்று விளங்குகிறாள்.

## இரவீந்திரநாத் தாகூர்

தென்கிழக்கு ஆசிய நாடுகள் என்பனவற்றை நாம் இரண்டாகப் பிரித்துக் கூறலாம். தாய்லாந்து, கம்போடியா, லாவோசு, வியட்நாம் ஆகிய நாடுகளைக் கொண்டது ஒரு பகுதி; மற்றொரு பகுதியாக மலேசிய உலகத்தை நாம் குறிப்பிடலாம். இந்தோனேசியா பிலிப்பைன், தீவுகளின் மாபெரும் பிறைவளைவும். சிங்கப்பூர் நகரமும், போர்னியோ தீவும் சேர்ந்தது இப்பகுதியாகும். இவை அனைத்தையும் ஒன்றாகச் சேர்த்தே அதனை கிழக்கு ஆசியா என்னும் பெயரால் இங்கு நாம் சுட்டுகின்றோம்.

இந்நாடுகளுக்கு வடக்கே உள்ள சீனாவும், மேற்கேயுள்ள இந்தியாவும் வரலாற்றுக் காலம் நெடுக நாகரிகத்தின் சுடரொளியை இந்நாடுகளுக்குத் தந்து உதவி புரிந்துள்ளன. சிறப்பாகச் சோழ மண்டலக் கடற்கரைப் பகுதியும், வங்காளமும் மிகச்சிறந்த முறையில் இந்திய நாகரிகக் குடியேற்றங்களை அந்நாடுகளில் அமைத்துள்ளன. இவற்றிற்குரிய – தொல்பொருள் சின்னங்கள் பல தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அகழ்ந்து எடுக்கப்பெற்றுள்ளன. அவற்றோடு சில இந்தியப் பழக்க வழக்கங்களும் அந்நாடுகளின் மக்களுடைய வாழ்க்கையில் பின்னிப் பிணைந்துள்ளன. அவற்றுள் பல்லவப் பேரரசர்களின்

ஆட்சிக்காலத்தில், தமிழகத்திலிருந்து சென்று பரவிய தமிழர் நாகரிகத்தின் கூறுகளுள் முதன்மையான சிலவற்றை நாம் இங்கு காணலாம்.

**1.தாய்லாந்து**

பண்டைக்காலத்தில் சையாம் என்று இந்நாடு வழங்கப்பெற்றது. தமிழகத்தார் இந்நாட்டைச் 'சீயம்' என்று குறிப்பிடுவது மரபு. தாய்லாந்தில் ஈனயான பௌத்த சமயம் இன்றுவரை செல்வாக்குடன் திழக்ந்துவருகிறது. பல்லவர் ஆட்சிக்காலத்திற்கு முன்பு இருந்தே காஞ்சி மாநகர், ஈனயான பௌத்த சமயத்தின் வளர்ப்புப் பண்ணையாகச் சிறப்புற்று விளங்கியதை வரலாறு எடுத்தியம்புகிறது. இத்தேரவாத பௌத்த சமயம் தமிழகத்தில் தலைசிறந்து விளங்கிய காலத்தில், பௌத்த குருமார்களால் தாய்லாந்திற்குக் கொண்டு சென்று பரப்பப் பெற்று இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

மணிமேகலை என்னும் தமிழ்க் காப்பியத்தில் சாதுவன் என்ற வாணிகன் நாகர் நாட்டு மன்னனிடம்

**மயக்குங் கள்ளும் மன்னுயிர் கோறலும்**
**கயக்கறு மாக்கள் கடிந்தனர் கேளாய்**
**நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்**
**அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்**
**உன்டென உணர்தலின் உரவொர் களைந்தனர்'**

***(மணி.16: 84-90)***

என்று அறிவுரை கூறிய பகுதியைக் காணுகிறோம். இதை ஆதாரமாகக்கொண்டு, பௌத்த சமயக் கொள்கைகளே சாதுவனால் எடுத்துரைக்கப்பெற்றது. அதனால் பௌத்த சமயம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு அளவிலேயே சையாம் போன்ற நாடுகளில் பரவி இருக்கலாம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

தாய்லாந்தில் நடைபெற்று வந்த முடிசூட்டு விழாவில், பல்லவர் காலத்திய தமிழ்ப் பண்பாட்டின் அடிச்சுவடுகள் சிலவற்றை நாம் காணமுடிகிறது. பண்டைக் காலத்தில் சையாமிய அரசர்களுடைய முடிசூட்டு விழாவில் தமிழ்

மந்திரங்கள் ஓதப்பட்டன. அத்தமிழ் மந்திரங்கள் பல்லவர் காலத்தில் வாழ்ந்த புகழ்மிக்க அருளாளர்களாகிய அப்பருடைய 'கூற்றாயினவாறு விலகக்கலீர்' என்னும் திருப்பதிகமும் மாணிக்கவாசகப் பெருமானின் திருவெம்பாவைப் பாடங்களுள் 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி, பாசம் பரஞ்சோதிக்கு என்பாய்' என்ற முதலிரண்டு பாடல்களுமேயாகும் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.[1]

தாய்லாந்தின் தவகுவா-பா நகரில் வாட்நா மியாங்கு (Wat Na Miang) கோயிலின் உட்புறத்தில் தமிழ் மொழியில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டு ஒன்று காணப்பெறுகிறது. ஹீல்ஷ் என்ற கல்வெட்டியல் ஆராய்ச்சியாளர், அக்கல்வெட்டு பெரும்பாலும் விசயநந்தி விக்கிரமவர்மனின் திருவல்லம் கல்வெட்டோடு ஒப்புமையுடையதாகத் தோன்றுகிறது என்று அறிவித்துள்ளார். பல்லவப் பேரரசர்களுள் மூன்றாம் நந்திவர்மனே விஜயநந்திவர்மன் என்ற சிறப்புப் பெயருடையவனாவான். அவன் கி.பி.846 முதல் 869 வரை ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது.[2] அக்கல்வெட்டு சிதைந்து காணப்பெறுகிறது.

'நாங்கூருடையான் தொட்டகுளம் பேர் அவனிநாரணம், மணிக்கிராமத்தார்க்கும் சேனாமுகத்தார்க்கும்.... பதார்க்கும் அடைக்கலம்.'[3]

இக்கல்வெட்டினால் சில உண்மைகள் தெரியவருகின்றன. 'ஸ்ரீ அவனி நாரணம்' என்னும் பெயருடைய குளத்தை நாங்கூரைச் சேர்ந்த தலைவன் ஒருவன் தோண்டினான் அல்லது செப்பனிட்டான் என்பது புலனாகின்றது. சோழ நாட்டில் சிறப்புற்று விளங்கிய வேளிர்குடிக்குரிய ஊரே நாங்கூர், பத்துப்பாட்டின் உரை விளக்கத்தில், 'கரிகாலன் நாங்கூர் வேளினுடைய மகளைத் திருமணம் புரிந்து கொண்டான்' என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கது. வைணவ அடியாரான திருமங்கை ஆழ்வார் நாங்கூரைச் சேர்ந்த போர் வீரர்களின் வீரத்தைப் பெரிதும் நாங்கூர் வண் புருடோத்தம்மே' (பெரிய

1. Tamil Culture, Vol.V, பக்.208.
2. T.V.Mahalingam: Kanchipuram inthe Early. south Indian history P.196
3. Thultzch: J.R.A.S., South Indian History P.196, 1015; PP 357 ff 1914 PP 397 ff.

திரு.IV,I) என்று போற்றிப் பாடியுள்ளார். இந்நாங்கூர் சீர்காழிக்கு அருகிலுள்ள திருநாங்கூர் என்னும் திருத்தலமேயாகும். மேற்கண்ட கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் நாங்கூரின் தலைவன் இந்த நாங்கூரைச் சேர்ந்தவனாகவே இருக்கலாம்.

அக் குளத்திற்கு இடப்பெற்ற 'அவனி நாரணம்' என்ற பெயர் மூன்றாம் நந்திவர்மனுக்கு வழங்கிய சிறப்புப் பெயர் என்பதற்குப் பல சன்றுகள் உள்ளன. நந்திக் கலம்பகத்தில் பலவிடங்களில் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் 'அவனி நாராயணன்' என்று குறிப்பிடப் பெற்றுள்ளான். பல்லவ மன்னன் நிருபதுங்கவர்மனின் பதினைந்தாம் ஆட்சி ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள காவேரிப் பாக்கத்தில் பொறிக்கப் பெற்ற கல்வெட்டு ஒன்றில் 'அவனி நாராயண சதுர்வேதிமங்கலம்[4] என்று அவ்வூர் குறிப்பிடப் பெற்றுள்ளது. திருவிசலூரில் உள்ள பிற்காலத்திய கல்வெட்டுகள் 'வேம்பற்றூரை அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்' என்று குறிப்பிடுகின்றன.[5]

மணிக்கிராமம் என்பது தமிழ்நாட்டில் சிறப்புற்று விளங்கிய வாணிகக் குழு ஒன்றிக்கு வழங்கிய பெயராகும். இக்கல்வெட்டில் குறிப்பிடப் பெறும் 'நாங்கூருடையான்' அக்குழுவைச் சேர்ந்த ஒருவனாக இருக்கலாம். இதனால் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டு வாணிகக் குழு ஒன்று சையாமில் நிலையாகத் தங்கி இருந்தமையும், அவர்கள் அங்குக் குளத்தை அமைத்துக் கண்காணித்து வந்தமையும் தெரிய வருகின்றன. சேனாமுகம் என்ற ஒரு சொற்றொடர் அக்கெல்வெட்டில் காணப்பெறுகிறது. 'சோனாமுகம்' என்பதற்கு 'ஒரு படையின் முன்னணி' என்பது பொதுவான பொருள். எனினும், படைவீரர் தங்கியிருக்கும் இடத்திற்கும் அப்பெயர் வழங்கப்படுவதுண்டு. எனவே, வாணிகக் குழுக்கள் வெளிநாடு சென்றபொழுது, தற்காப்புப் படையின் துணையோடு சென்றிருக்க வேண்டும் என்பதும் இதனால் அறியப்படுகிறது.

மற்றும் இக்கல்வெட்டு ஒரு பாழடைந்த திருமால் கோயிலின் உள்ளே காணப்பெறுவதாலும் அதில் குறிக்கப்பெற்றுள்ள குளம் அக்கோயிலைச் சார்ந்து இருப்பதாலும், அதைத் தமிழகத்தின் வணிகர்களே கட்டியிருக்கலாம் எனத் தோன்றுகிறது.

4.. I, I, Vol.XII, No.67

5.. 3 & 35 of 1907

கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் பெருக்கெடுத்து ஓடிய சைவ, வைணவ பக்தி வெள்ளத்தின் ஓர் அலை, அலைகடல்களுக்கு அப்பால் பெருந்தொலைவில் உள்ள தாய்லாந்து நாட்டில் சென்று விசியதன் விளைவாக, அங்கு இந்து சமயத்திற்குரிய திருமாலின் கோயில் தமிழ்நாட்டு வாணிகர்களால் கட்டப்பட்டிருக்கலாம்.

இக்கெல்வெட்டு பல்லவர் காலத்திய தமிழ்நாட்டு கிரந்த எழுத்துகளில் பொறிக்கப்பெற்றுள்ளது. இதனால் தமிழகத்தின் தென்னாட்டின் எழுத்துமுறை கடல் கடந்த நாடுகளில் சென்று செல்வாக்குற்றமை புலனாகிறது.

**2. கம்போடியா**

'காம்போஜம்' என்பது இதனுடைய பழைய பெயர். இந்நாட்டின் பழங்குடி மக்கள் 'கெமர்கள்' என்பவராவர். அவர்கள் 'கம்புசுயம்பு' என்ற முனிவருக்கும் நாகக் கன்னிகை ஒருத்திக்கும் பிறந்த மாவீரன் ஒருவனுயை கால்வழியினர் என்று கூறிக்கொள்ளுவதில் பெருமிதம் கொண்டனர். இதைப் போன்ற கதைகள் நம் நாட்டிலும் வழங்கி வருகிறது. நெடுமுடிக் கிள்ளிக்கும் பீலிவளை என்ற நாகக் கன்னிகைக்கும் பிறந்தவனே 'தொண்டைமான் இளந்திரையன்' என்று மணிமேகலை பேசுகிறது.[6] ஸ்கந்த சிஷ்யன் என்ற பல்லவ அரசன் அசுவத்தாமனுக்கும் நாகக் கன்னிகை ஒருத்திக்கும் பிறந்ததாகக் கூறப்படுகிறது.[7] இக்கதைகளுக்கு இடையே ஏதோ ஒரு வகையான தொடர்பு இழையோடிச் செல்வதை நாம் காணமுடிகிறது.

காம்போஜத்தின் தொடக்க கால வரலாற்றில், சிறப்புற்று விளங்கிய அரசின் 'உருத்திரவர்மன்' என்பவனாவான். அவனுக்கு முன்னர் சுருதவர்மன், சிரேஷ்டவர்மன் என்ற மன்னர்கள் ஆட்சி புரிந்ததாகத் தெரிகிறது. உருத்திர வர்மனுடைய ஆட்சிக் காலத்தில் சைவமும் வைணவமும் அந்நாட்டில் சிறப்புற்று விளங்கின. காம்போஜத்தின் அரசர்கள் பல்லவர்களுக்குரிய வர்மன் என்ற பட்டப் பெயரினைப் பூண்டிருந்தனர். அவர்கள்

---

6. மணிமேகலை, 25: 27-42.
7. *S.I.I, Vol: NO.134.*

கட்டிய அங்கோர்வாட், பயோன் போன்ற கோயில்கள் தமிழகத்தின் கோயில்களைப் பெரிதும் ஒத்துள்ளன. மேலும் பல்லவர் காலத்தில் தமிழகத்தில் மலர்ச்சியுற்ற சிவநடராச வடிவம், காம்போஜத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டிருக்கிறது. இவை அனைத்தையும் ஒருங்கு இணைத்துப் பார்க்கின்ற பொழுது, சையாமில் குடியேறிய இந்தியர்கள் பல்லவர் காலத்திய தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் மக்களாகவே இருக்கலாம் என்ற எண்ணம் உண்டாகிறது.[8]

பலவர்மன் என்ற அரசனுடைய மதகுரு 'சோமவர்மன்' என்பவராவர். இவர் சாமவேதத்தில்வல்லவர். காஞ்சி மாநகரில் கலைக்கழகமாகிய 'கடிகை'யில் கல்வி பயின்றவர் என்பது அங்குக் காணப்பெறும் சமஸ்கிருத மொழிக் கல்வெட்டு ஒன்றினால் தெரியவருகிறது.[9]

பலவர்மனுடைய தம்பியான[10] சித்திரசேனன்[11] அரசுக் கட்டி லேறியவுடன் மகேந்திரவர்மன் என்ற அபிடேகப் பெயரைச் சூட்டிக் கொண்டான். அவன் கி.பி.604இல் பொறித்த கல்வெட்டு ஒன்று கம்போடியாவில் கிடைத்திருக்கிறது.

இவ்வரசன் 'மகேந்திரவர்மன்' என்ற சிறப்புப் பெயரைச் சூடிக் கொண்டதிலிருந்து பல்லவருக்கும் காம்போஜ மன்னருக்கும் யாதோவொரு வகையான தொடர்பு இருந்திருக்கவேண்டும் என்பது புலனாகின்றது.[12]

[13]ஐந்தாம் ஜெயவர்மன் (கி.பி.968-1001) என்ற அரசர் கி.பி.968 இல் பொறித்த கல்வெட்டு ஒன்று 'தஷணபாதம்[14] (தென்னாடு) சைவ சமயத்தின் நிலைக்களனாய் விளங்கியதைக் குறிப்பிடுகிறது. மேலும் தமிழகத்தை ஆண்ட பல்லவ மன்னர்களையும் தென்னாட்டில் தோன்றிய (ஆதி) சங்கராச்சாரியாரையும் பற்றிய

8. காண்க: P.N. போசின் 'Hindu Colony of Camdia' பக்.17.
9. K.A.Nilakanta Sastri; South Indian Influences in the For East. P.37.
10. K.A.Nilakanta Sastri; South Indian Influences in the For East. P.37.
11. .K.A.Nilakanta Sastri; South Indian Influences in the For East. P.37.
12.. K.A.Nilakanta Sastri; South Indian Influences in the For East. P.37.
13 . J.Fergusson: History of Indian and Eastern Architecture, Vol. I. பக்.327-28
14 H.G. Quaitch Wales: The making of Greater India, P.105

செய்திகள் அதில் காணப்பெறுகின்றன. இவற்றால், பல்லவர் காலத்தில் இவ்விரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான பண்பாட்டுத் தொடர்பு இருந்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

**3. ஜாவா**

இந்தோனேசியாவில் உள்ள தீவுகளுள் ஜாவா நீர்வளமும் நிலவளமும் மக்கள் குடிவளமும் உடைய நாடாகும். மத்திய ஜாவாவில், எண்ணற்ற கோயில்கள் கட்டப்பெற்றுள்ளன. அவற்றுள், பஞ்ச பாண்டவருக்கென்று அமைக்கப்பெற்றுள்ள ஐந்து கோயில்களின் தொகுதி இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். அவை சாண்டி பாண்டவதேவ, சாண்டிபீம, சாண்டி அருச்சுன என்ற பெயர்களால் சுட்டப்பெறுகின்றன. அவை மாமல்லபுரத்தில் உள்ள பஞ்ச பாண்டவருடைய ரதங்களின் அமைப்பு முறையைப் பெரிதும் ஒத்துள்ளன என்று இந்தியக் கட்டடக்கலை ஆராய்ச்சியாளர்களின் முன்னோடியான ஜே.பர்கூசன் (J.Fergus-son) குறிப்பிடுகிறார். அவற்றின் இயல்புகளை அவர் விரிவாக விளக்கியுள்ளார். வாயில்களின் மீது அமைக்கப் பெறும் 'கால மகரம்' பல்லவர்களுடைய கட்டடக் கலையின் சிறப்பியல்பாகும். அவ்வியல்பு சிற்சில மாற்றங்களுடன் ஜாவாவில் உள்ள கோயில்களினுடைய வாயில்களில் அழகுற அமைக்கப்பெற்றுள்ளன. பல்லவருடைய கலை மரபின் செல்வாக்கிற்கு இதைவிட சிறந்ததொரு சான்று தேவை இல்லை. என்பது அவருடைய கருத்தாகும்.

பல்லவர் காலத்திய தமிழ் நாகரிகத்தின் சிறப்பியல்புகளுள் கலை. சமயம், வாணிகம் போன்ற துறைகளுக்கு உரிய பண்புகள் சில, தென்கிழக்கு ஆசிய நாடுகளுள் சிறப்புற்று விளங்கியதை அறிவதற்கு இவ்வாய்வுரை ஓரளவிற்கு உதவி புரியுமென நம்புகின்றேன். இரவீந்திரநாதர் கூறியதைப் போன்று அன்புப்பணி புரிவதற்கே, இந்தியாவின் தென்பகுதியான தமிழகமும் தன்னுடைய பண்பாட்டுத் தொண்டர்களைத் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கு அனுப்பி வைத்ததை இதனால் நாம் அறியலாம்.

# 7

# வரலாறு புகட்டும் பாடம்

போர் வெறிகொண்ட சிலர் வீரத்தின் பெயரால், பல்லாயிரக்கணக்கான மக்களைப் போர்க்களத்தில் பலியிட்ட துன்பக் கதையினைக் கூறுவதே வரலாறு என்று கருதிய காலம் மாறிவிட்டது. அரசர்களின் அந்தப்புரங்களில் இருந்த ஆயிரக்கணக்கான ஆரணங்குகள் கற்பழிக்கப்பட்ட தொடர்கதையே வரலாறு என்று போற்றிய காலம் போய்விட்டது.

இன்று வரலாற்றிற்குத் தரப்படும் விளக்கம் புதுமையானது. சிந்தனையைத் தூண்டுவது; சிறந்த குறிக்கோளினை அடிப்படையாகக் கொண்டு விளங்குவது; நம் நினைவுக்கு எட்டாத, தொல்பழங்காலத்தில் மக்களினம் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில், இன்றுவரை அடைந்துள்ள வெற்றி, தோல்விகளையும் பெருமை சிறுமைகளையும் வாழ்வு தாழ்வுகளையும் இன்ப துன்பங்களையும் நம்பிக்கைகளையும் ஏமாற்றங்களையும் கால வரன்முறைப்படி கூறும் தொடர்கதையே வரலாறு.

மனிதன் காட்டில் திரிந்து காய்கனி முதலியன தின்று விலங்குகளிடையே வாழ்ந்த வந்த காலம் முதற்கொண்டு சமுதாயமாகக் கூடி வாழக் கற்று, எண்ணத் தெரிந்து, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால் உயர்ந்த நாகரிகத்தை அடைந்த காலம் வரையில் அவன் பெற்ற அனுபவக் கருவூலமாக விளங்குவது வரலாறு.

## வரலாற்றின் பயன்

நம்முடைய உள்ளங்களிலிருந்து ஊற்றெடுக்கும் பேரார்வமே வரலாற்றிலிருந்து நாம் பெறக்கூடிய சிறந்த பயனாகும். நமது தனி வாழ்விலும் பொது வாழ்விலும் வழுக்கி விழாமல் எச்சரிக்கையுடன் இருப்பதற்குக் கடந்த காலத்திலிருந்து நாம் பெறும் படிப்பினைகள் பேருதவியாக உள்ளன. நம் முன்னோர்கள் செய்த தவறுகள் எல்லாம் நம் வாழ்க்கைப் பயணத்தின் 'மைல்'

கற்கள் அல்லவா? ஒரு நாட்டின் எழுச்சியும், வீழ்ச்சியும், அதன் கடந்தகால வரலாற்றை அடிப்படையாக் கொண்டதாகும். ஒரு நாட்டின் வரலாற்றைப் பொறுமையுடன் படிப்பவர்க்கு இவ்வுண்மைகள் புலனாகாமல் போகா.

கடந்த காலம் நிகழ்காலத்திற்கு அடிப்படை மட்டுமன்று; எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்லும் நல்லதொரு வழிகாட்டியுமாகும். ஒரு நிகழ்ச்சி நிகழும் கணப்பொழுதிலிருந்து எதிர்காலம் என்பது பொங்கி எழுகிறது. இவ்வாறு முக்காலமும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க இயலாதவாறு இணைந்தும் இழைந்தும், முறுகியும், முடுகியும் காணப்பெறுகின்றன.

கடந்த காலத்தைப் படம் பிடித்துக் காட்டும் 'காலக் கண்ணாடி' வரலாறு. அதில் மனித சமூகத்தை உருவாக்கிய சக்திகள் எவையென்பதை நாம் காண முடியும். கடந்தகால நிகழ்ச்சிகளை நன்கு புரிந்துகொள்ள உதவுவதுடன் எதிர்கால நிகழ்ச்சிகளின் போக்கை முன்னரே அறிவிக்கும் ஆற்றல் வாய்ந்தது வரலாறு.

'வரலாறு என்பது ஒரு நிகழ்ச்சித் தொடராகும். வரலாற்று அறிஞனும்' அவன் காணும் உண்மைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு உடையன. அந்தவிளைவுகளின் தொடர்ச்சியாக வரலாறு அமைந்துள்ளது. எதிர்காலத்திற்கும் இறந்த காலத்திற்கும் இடையே கருத்துப் பரிமாற்றத்தைஏற்படுத்தும் வகையில் அமைந்த ஓர் இணைப்பே வரலாறு எனலாம்.

வரலாறு இன்றைக்கு இரு முக்கியப் பணிகளைச் செய்து வருகிறது. முதலாவதாகப் பண்டைய சமூகத்தின் பெருமைகளை இன்றைய மனிதன் உணரும்படி செய்கிறது. இரண்டாவதாக இன்றைய சமூகத்தை அவனுடைய முழுமையான கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர உதவுகிறது.

## வரலாற்றின் படிப்பினைகள்

நாம் எச்செயலைச் செய்தாலும், யாதாகிலும் ஒரு பயன் கருதியே அச்செயலைச் செய்கிறோம். இலக்கியத்தைப் படிப்பதால் நாம் பெறும் பயன்கள் இரண்டு. ஒன்று இன்பம். மற்றொன்று மனத்தைப் பண்படுத்தும் பண்பு. அதைப் போன்று நாம் வரலாற்று நூல்களைப் படிப்பதால் பெறக்கூடிய பயன்கள் இரண்டு. ஒன்று புத்துணர்ச்சி, இரண்டாவது படிப்பினைகள்.

கடந்த காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளின் ஊடே கூர்ந்து நோக்குவோமானால், அவ்வரலாற்று நிகழ்ச்சிகளை இயக்கிய சக்திகள் யாவை என்பதையும், அச்சக்திகள் எங்கிருந்து, எவ்வாறு தோன்றின என்பதையும் நாம் அறியமுடியும். அத்துடன் பல பேரரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்குரிய காரணங்கள் யாவை என்பதையும் அந்தக் காரணங்களுக்குரிய சூழ்நிலைகள் எவ்வாறு அமைந்தன என்பதையும் நாம் வரலாற்று ஏடுகளிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. குறிப்பிட்ட சூழலில், குறிப்பிட்ட குறைபாடுகளைக்கொண்ட தனி மனிதர்கள் செய்த தவறுகளால், எவ்வாறு நாகரிகத்தின் கொடுமுடியில் வீறுடன் விளங்கிய நாகரிக மறுமலர்கள் வாடி, வதங்கி, உலர்ந்து, உதிர்ந்துவிட்டன என்பதை நாம் படிப்பினையாகப் பெற முடியும்.

எனவே, காலந்தோறும் வரலாற்று நிகழ்ச்சிகள் விடுத்துள்ள எச்சரிக்கைகளை நம்முடைய முன்னோர்கள் எவ்வாறு ஏற்றுப் போற்றி நெருக்கடிகளைத் தவிர்த்தனர் அல்லது நாம் எவ்வாறு அவற்றை உணர்ந்து நம் வாழ்க்கையையும் நாட்டின் தலைவிதியையும் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது நம்முடைய கடமையாகும். வரலாறு கற்பிக்குங் படிப்பினையும், விடுக்கும் எச்சரிக்கையும், புகட்டும் அறிவுரையும் இன்றைய 'அரசியல் சமதாயம்' வாழ்வில் உண்டாகும் சிக்கல்களைத் தீர்க்கப் பயன்படும் என்ற நோக்கத்தோடு இந்திய வரலாற்றின் பொன்னேடுகளைப் புரட்டிப் பார்த்தால், நாம் பெறக்கூடிய படிப்பினைகள் பல வரலாறு விடுக்கும், அபாய அறிவிப்புகளாகத் தோன்றுவதை உணரலாம்.

### விஜயநகர பாமினப் பேரரசுகள்

பதினான்காம் நூற்றாண்டுவரை தென்னாட்டப் பேரரசுகளில் சாதவாகன, சாளுக்கியப் பேரரசுகள் தவிர பெரும்பாலானவை பண்டைத் தமிழகத்திலிருந்தே தோன்றின. ஆனால், பதினான்காம் நூற்றாண்டில் பேரரசுகள், தென்னிந்தியாவின் நடுப்பகுதியிலும் வடபகுதியிலும் எழுந்தன. அவற்றுள் முதல் பேரரசுகளும் முதன்மையான பேரரசுகளும் பாமினி விஜயநகரப் பேரரசுகளாகும். பாமினிப் பேரரசு தென்னிந்தியாவில் தோன்றிய முதல்

இஸ்லாமியப் பேரரசு. அது தென்னாட்டுக் கலைப்பண்பையும் பாரசீகக் கலைப்பண்பையும் இணைத்துத் தென்னாட்டுக்குச் சிறப்பான ஓர் இஸ்லாமிய நாகரிகத்தையும் உருதுமொழி இலக்கியத்தையும் உருவாக்கித் தந்ததாகும்.

இஸ்லாமியப் படைவீரர்களின் அட்டூழியங்களாலும், பாமினிப் பேரரசர் படையெடுப்புகளாலும் தென்னாட்டில் மக்களிடையே எதிர்ப்பு ஆற்றல் வளர்ந்தது. ஹொய்சல அரசரின், வீழ்ச்சிக்குப்பின், இந்து சமயமும் நாகரிகமும் அழிந்தொழியாமல் காப்பதற்காக நிறுவப்பட்டதே விஜயநகரப் பேரரசு. அது இசுலாமிய பேரரசிற்கு எதிராகத் தென்னாட்டுக்குச் சிறப்பான ஒரு புதிய இந்து சமயப் பண்பாட்டை உருவாக்கி, அதைத் தென்னாட்டுக்கும் பரப்பிற்று. இன்றைய தென்னாட்டு நாகரிகத்தையும் தென்னாடு கடந்த இந்திய நாகரிகத்தையும் படைத்து வளர்த்த பெருமை இவ்விரு பேரரசுகளுக்கே உரியதாகும்.

மாலிக்காபரின் படையெடுப்பு தென்னிந்திய வரலாற்றின் ஓர் திருப்பு மையமாகும். அப்படையெடுப்பிற்குப் பிறகு தேவகிரி தில்லியின் ஆட்சிக்குட்பட்டது. முகமது துக்ளக் என்ற தில்லிப் பேரரசன் தில்லியிலிருந்து, தன் தலைநகரை அதற்கு மாற்ற முயன்றான். இத்திடீர் முயற்சி, முற்றிலும் தோல்வியடைந்தது. அத்துடன் அதனால் ஏற்பட்ட குழப்பத்திடையே அலாவுதீன் ஹசன் கங்கு பாமனி என்பவன் கி.பி.1347இல் தேவகிரிக்கும் அதனைச் சூழ்ந்த பகுதிக்கும் அரசனானான். குல்பர்க்கா என்ற தலைநகரை அமைத்து, அவன் பாமினிப் பேரரசின் முதல்வனானான். அது முதல் பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையில் பாமனிப் பேரரசு சீரும் சிறப்பு முற்று விளங்கியது. மாமூது அரசன் (கி.பி.1482-1518) ஆட்சியில், படைத்தலைவர்களும், குறுநில மன்னர்களும் மத்திய அரசை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதன் விளைவாக, அவன் ஆட்சியின் முடிவிற்குள் பாமனிப் பேரரசின் பகுதிகள் பீஜப்பூர், கோல்கொண்டா, அகமது நகர், பீடார், பீரார் என்ற ஐந்து சிற்றரசுகளாகச் சிதைந்து போயிற்று.

பாமனிப் பேரரசிற்கு ஒருபுறம் வாரங்கல் இந்து அரசும், மற்றொருபுறம் விஜநகரப் பேரரசும் ஆற்றலுடைய அரசுகளாக

விளங்கின. துக்ளக்கு பேரரசின் தென் எல்லையாகிய மதுரை வரை தன்னுடைய அரசைப் பரப்ப வேண்டும் என்று பாமினி அரசு திட்டமிட்டது. இந்து அரசுகளோ இத்திட்டத்தைத் தகர்த்தெறிவதில் கண்ணும் கருத்துமாக இருந்தன.

ஹஸன்கங்கு பாமனியின் மகனான முகமதுஷாவின் ஆட்சிக் காலத்தில் (கி.பி.1358) விஜயநகர அரசிற்கும் பாமினி அரசுக்கும் இடையே தொடங்கிய போர் விஜயநகரப் பேரரசு அழிந்தொழியும் வரை, தொடர்ந்து நடைபெறலாயிற்று. புதிதாகத் தோன்றிய இரு அரசுகளுக்கும் இடையே உண்டான போர் தற்காப்பிற்காக அவை மேற்கொண்டவையாகும். இங்கு, நாம் ஓர் உண்மையை நினைவுகூர்தல் வெண்டும். பாமனி அரசுக்கும் விஜயநகரப் பேரரசுக்கும் இடையே போராட்டம் உண்டாவதற்கு அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளே காரணமாகும். அப்போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில்தான், அதற்குச் சமய வண்ணம் பூசப்பட்டது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

விஜயநகரப் பேரரசு சிறந்ததோர் இலட்சியத்திற்காக வித்தியாரண்யர் என்ற பெரியாரின் ஆதரவில் கி.பி.1336இல் ஹரிஹரன், புக்கன் என்பவரால் நிறுவப்பட்டது. சற்றேறக்குறைய நானூறு ஆண்டுகட்கு அது தன்னுடைய இலட்சியத்திற்காகப் போராடியது.

கி.பி.1565ல் இராக்சகி-தங்கடி எனும் ஊர்களுக்கு அருகில் இஸ்லாமியக் கூட்டணியை எதிர்த்து இராமராயர் கடும்போர் புரிந்தார். அப்போரில் விஜயநகரப் பேரரசு படுதோல்வி அடைய நேர்ந்தது. அதனால் அப்பேரரசு அழிவுற்றது. எனினும் எண்பது ஆண்டுக் காலத்திற்கு விஜயநகர அரசு குற்றுயிருடன் பகைவர்களை எதிர்த்துப் போராடியது. இவ்வாறு தென்னகத்தில் இந்துப் பண்பாட்டையும் சமயத்தையும் அழிந்தொழியாது காப்பதற்கு அரும்பாடுபட்ட இந்தப் பேரரசு கி.பி.1645 அளவில். இந்திய அரசியல் வானிலிருந்து மறைந்து போயிற்று.

இந்து சமயமும் பண்பாடும் அழிந்தொழியாமல் கட்டிக் காத்த பெருமை இப் பேரரசிற்குரியதாகும். இந்து மதம் இன்றைய வடிவத்தைப் பெற்றது இக்காலத்தில்தான். விஜயநகரை ஆண்ட அரசர்கள் நால்வகைக் குடிமரபுகளைச் சேர்ந்தவர்களாவர். அவை

சங்கம் மரபு, சாளுவ மரபு, துளுவ மரபு, அரவீட்டு மரபு என்பனவாகும்.

இந்நால்வகை மரபுகளும் முறையே கன்னட நாட்டையும். தெலுங்கு நாட்டையும், தமிழகத்தையும் சேர்த்த தலைவர்களால் நிறுவப்பட்டதாகும் இதனால், அது தென்னகத்தில் பேரரசாக விளங்கியதில் வியப்பில்லை.

பாமினிப் பேரரசும் விஜயநகரப் பேரரசும் சற்றேறக்குறைய ஒரே காலத்தில் தோன்றியவை. விஜயநகர ஆட்சி, உண்மையில் சற்று முற்பட்ட காலத்திலேயே தொடங்கிற்று. ஆயினும், பாமினிப் பேரரசு விரைவில் சிதறுண்டு, வலிமை வாய்ந்த பல அரசுகளாயிற்று. சிதறிய பிறகும் அது விஜயநகரப் பேரரசின் வலிவைச் சிதறடிக்கும் ஆற்றல் உடையதாயிருந்தது.

**ஆற்றல் மிக்கோரே ஆளத் தகுதியுடையவர்**

விஜயநகரப் பேரரசை ஹரிஹரன், புக்கன் என்ற இருவர் நிறுவினர் என்பதைக் கண்டோம். அவர்கள் தங்களுடைய மற்ற மூன்று சகோதரர்களின் உதவியைப் பெற்று, அவ்வரசைக் கட்டிக்காக்க முயன்றனர். விஜயநகர அரசைச் சூழ்ந்திருந்த பகைவர்கள் பலராக இருந்தனர். அவர்கள் எத்தருணத்திலும் தாக்கலாம் என்ற அச்சம் இருந்து வந்தது. இதனால், விஜயநகர அரசு தொடங்கிய நாள் முதல், இறுதிவரை படையாற்றலையே பெரிதும் நம்பி வாழும் அரசாக அது இருக்க நேர்ந்தது. இதனால், அதனை 'இராணுவச் சார்புடைய அரசு' என்று சில வரலாற்றுப் பேராசிரியர்கள் கூறுவதுண்டு. அத்தகைய அரசிற்குத் தலைமை தாங்கிய அரசர்களுள் பேரறிவுடன், பேராற்றலும், பெருந்திறனும் வாய்க்கப் பெற்றவர்களாக இருந்தவர்களால்தான் அதைக் கட்டிக் காப்பதற்கு முடிந்தது.

தொன்றுதொட்டுத் தந்தைக்குப் பிறகு மூத்த மகனே முடிசூடிக் கொள்ளும் உரிமையுடையவன் என்ற மரபு, நம் நாட்டு அரச மரபினரிடையே நெடுங்காலமாக இருந்து வந்தது. இதற்கு இரண்டோர் விதிவிலக்குகள் இருந்திருக்கலாம். ஆனால், விஜயநகர அரச மரபுகள் இதைப்பற்றிக் கவலைப்படவில்லை

என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. 'ஆற்றல் மிக்கவனே அரசாளத் தகுதியுடையவன்' என்ற கோட்பாடு விஜயநகர அரசர்களிடத்துக் காணப்பட்டதை நாம் பார்க்கிறோம்.

விஜயநகரத்தை ஆண்ட முதல் அரச மரபு சங்கம மரபு என்பதை முன்னர் நாம் கண்டோம். அந்த மரபைச்சேர்ந்த இரண்டாம் ஹரிஹரன் இறந்தவுடன், அவருடைய மூன்று பிள்ளைகளான முதலாம் விருபாஷன், இரண்டாம் புக்கன், முதலாம் தேவராயன் என்பவர்கள் அரசுரிமைக்காகத் தங்களுக்குள்ளே போராடினர்.

இப் போராட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்தது. தந்தை இறந்தவுடன் முதலாம் விருபாஷன் முடிசூட்டிக் கொண்டான் ஓராண்டிற்குள் அவனைத் தூக்கியெறிந்துவிட்டு அவனுடைய இளவல் இரண்டாம் புக்கன் அரசுக் கட்டிலேறினான். சில மாதங்களுக்கு எல்லாம் அவனுடைய தம்பி, முதலாம் தேவராயன் அண்ணனை விரட்டிவிட்டு தானே அரசன் என்று கி.பி.1406-இல் அறிவித்தான். இவ்வாறு இரண்டு ஆண்டுகள் பதவிப் போராட்டம் நடைபெற்றது. இதனால் நாட்டிலே குழப்பங்களும், கொந்தளிப்புகளும் உண்டாயின. இவர்களை ஆதரித்த பிரபுக்களிடையே பிளவுகளும், தீராப் பகைமையும் உண்டாயின. இப்பதவிப் போராட்டத்தின் விளைவாக 'ஆற்றல் மிக்கவர் யாராக இருந்தாலும் அரசராகலாம்' என்ற எண்ணம் மக்களிடையே பரவிற்று அது பிற்காலத்திய அரசர்களுக்குத் தவறான ஓர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

ஆற்றலற்ற மல்லிகார்ஜுனன் என்ற தன் பங்காளியைக் கொன்று இரண்டாவது விருபாஷன் அரசுக் கட்டில் ஏறியது (கி. பி.1465) இங்குக் குறிப்பிடத்தக்கது. சங்கம அரசமரபின் கடைசி அரசனான இரண்டாவது விருபாஷன் காலத்தில் ஆந்திரத்தின் மேற்குப் பகுதியில் சாளுவர் மரபைச் சேர்ந்தவர்கள் ஆற்றல் மிக்க தலைவர்களாக விளங்கினர். அவர்களுள் சந்திரகிரியின் தலைவனாக இருந்த சாளுவ நரசிம்மன் பேராற்றலும் பெருந்திறனும் உடையவனாத் திகழ்ந்தான். மல்லிகார்ஜுனனைக் கொன்று விருபாஷன் அரசுக் கட்டிலேறியது. நாட்டு மக்களுள் பெரும்பாலோருக்கு அதிருப்தியை உண்டாக்கிற்று. அத்துடன், பாமினி அரசுடன் நடத்திய போரில் அவன் தோல்வியுற்றான்.

அதனால் கோவா உள்ளிட்ட மேலைக் கடற்கரைப் பகுதியை இழக்க நேர்ந்தது. இவையனைத்தும் மக்களுக்குத் தம் புதிய அரசனிடத்து வெறுப்பை மிகுதிப்படுத்தின.

அந்நிலையில் சாளுவ நரசிம்மன் தமிழ்நாட்டுப் பகுதிகளை வென்று, தன் ஆட்சிக்குக் கொண்டுவந்ததோடு, முகம்மதுஷா பாமினியைத் தோற்கடித்துத் தெலுங்கானாப் பகுதிகளையும் கொண்ட வீட்டையும் கைப்பற்றிக்கொண்டான். விருபாஷனுக்குப் பிறகு அரசுக் கட்டில் ஏறிய பிரபு - தேவராயனை எதிர்த்துப் போரிட்டுச் சாளுவ நரசிம்மன் வாகை சூடினான். பிரபு - தேவராயன் உயிர் தப்பினால் போதும் என்று நாட்டைவிட்டு ஓடிவிட்டான். அவனோடு, சங்கம அரசமரபு விஜயநகர அரசியல் மேடையைவிட்டு இறங்கிவிட்டது. கி.பி.1485இல் சாளுவ நரசிம்மன் மாமன்னனாக முடிசூடிக்கொண்டான். இவ்வாறு புதியதோர் அரசமரபு விஜயநகர சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொண்டது இங்கு சிந்திக்கத்தக்கது.

சாளுவ நரசிம்மன் செய்த இச்செயல் நேர்மையற்றது என்று நமக்குத் தோன்றுகிறது. ஆனால், நேர்மையற்ற அச்செயலால் சங்கம மரபினரிடமிருந்து ஆட்சியுரிமையைச் சாளுவ நரசிம்மன் வன்முறையைக் கையாண்டதால் சிதற இருந்த விஜயநகரப் பேரரசு காப்பாற்றப்பட்டது. அவன், அந்த அபாயத்திலிருந்து அதைக் காப்பாற்றியதற்கு, நாம் அவனைப் பாராட்ட கடமைப் பட்டுள்ளோம். இந்நிகழ்ச்சி நமக்கு விடுக்கும் எச்சரிக்கை 'ஆற்றல் மிக்கவர்களே ஆளத் தகுதியுடையவர்கள்' என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? இவ்வாறே, சாளுவ நரசிம்மன் இறக்கும் தருவாயில் தன்னுடைய இருபிள்ளைகளுள் ஒருவனையும் அரசனாக்காமல், தன்னுடைய நம்பிக்கைக்குரியவனும் மாபெரும் வீரனுமான நரச நாயக்கனை விஜயநகரத்து அரசனாக்கிவிட்டு மாண்டான்.

தான் அரும்பாடுபட்டுக் காப்பாற்றிய பேரரசை. மீண்டும் அழிந்தொழியாமல் கட்டிக்காக்கும் ஆற்றல் நரச நாயக்கனிடம் இருப்பதைக் கண்டுணர்ந்து, சாளுவநரசிம்மன் நம் பேரரசை அவனிடம் ஒப்படைத்ததில் வியப்பில்லை.

***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து***
***அதனை அவன்கண் விடல் (குறள். 517)***

*என்ற வள்ளுவர் வாய்மொழி அரசர்கள் (தெரிந்து விளையாடல்) (அதி.52) வேண்டும் என்று அறிவுறுத்துகிறது. இவ்விலக்கணத்திற்குச் சிறந்ததோர் இலக்கியமாக சாளுவ நரசிம்மனின் செயல் அமைந்தது எனலாம்.*

**தேரான் தெளிவு**

*பாமினிப் பேரரசினைச் சிறப்புற்று விளங்குமாறு செய்வதற்கு அரும்பாடுபட்ட பெரியார் முகம்மது கவான் சற்றேறக்குறைய நூறு ஆண்டுகள் வரை வாழ்ந்த அவர், முதிர்ந்த அறிவும், கனிந்த அனுபவமும் உடைய முதுபெரும் இராசதந்திரியாக விளங்கினார். அவர் பாமினி அரசர்களுள் நான்கு அரசர்களுக்கு முதல்அமைச்சராகவும் படைத்தலைவராகவும் சிறந்தமுறையில் பணியாற்றியவராவார். நாட்டு மக்களின் நலன் கருதி அவர் பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்தி, நாட்டு ஆட்சியைச் செம்மைப்படுத்த முயன்றார். அவற்றால் அவர் பேரும் புகழும் பெற்றார்.*

*வெளிநாட்டு முஸ்லிமான முகமது கவான் தம்முடைய வாழ்க்கையைப் பாமினி அரசுக்குப் பணிபுரிவதற்காகவே அர்ப்பணித்து இருந்தார். அத்தகைய அமைச்சர்மீது, தக்காண முஸ்லிம்களுக்கு வெறுப்பும் பொறாமையும் உண்டாயின. அவர்கள் ஒன்றுகூடிச் சதி செய்தனர். சதிக்கூட்டத்தினர் ஒரியா அரசனைப் பாமனி அரசு மீது படையெடுத்து வருமாறு ஒரு கடிதத்தை எழுதி, அதில் முகமது கவானுடைய கையெழுத்தைப் போன்று பொய்க் கையெழுத்து இட்டு முதலமைச்சரின் முத்திரையையும் அதில் பொறித்தனர். பின்னர், அவர்கள் அதை அரசனிடம் காட்டி அவன் மதியை மயக்கினர். பொறுமையாக அக்கடிதத்தைப் பற்றிய உண்மையை நாடுவதற்குத் தவறிய பாமனி அரசன், முகமது ஷா, 1481ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் ஐந்தாம் நாள், தம் பேரரசிடத்து நன்றி விசுவாசமுடைய அந்நல்லவரைக் கொலை செய்யுமாறு கட்டளையிட்டான். 'உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய உத்தமரின் படுகொலை பாமனிப் பேரரசிற்குச் சாவுமணி அடித்தது! விரைவிலே*

வெளிநாட்டு முஸ்லிம்கள் பாமணி அரசைவிட்டு வெளியேறினர். நாட்டிலே கலகம் ஏற்பட்டது; சிறிது காலத்திற்கெல்லாம் அதிகார வெறி பிடித்த பிரபுக்களாலும் படைத்தலைவர்களாலும் அப்பேரரசு சிதைந்து போயிற்று.

இந்திய நாட்டு வரலாற்றில், சிறப்பிடம் பெற்ற ஒரு சில இராசதந்திரிகளுள் ஒருவரான முகமது கவான் படுகொலை செய்யப்பட்ட நிகழ்ச்சி நமக்கு எதை அறிவிக்கிறது? முப்பாட்டன் காலம் முதல் பாமனி அரசைக் கட்டிக்காத்து வந்த கவான், இத்தகைய சதிச்செயலில் ஈடுபடுவாரா?' என்பதைப் பற்றிச் சிறிதும் சிந்தித்துப் பாராது, அவரிடத்து ஐயுறவு கொண்ட முகமதுஷாவின் கொடுஞ்செயல் வீண் போயிற்றா? அதற்கு அவன் விலை கொடுக்கத்தான் செய்தான். பாமனி அரசின் வீழ்ச்சி என்பதன்றோ அவன் அதற்காகக் கொடுத்த விலை 'ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றவர் ஆராய்ந்து பார்க்காது ஒருவனிடம் நம்பிக்கை வைத்தாலும் ஆராய்ந்து பார்த்துத் தெளிவடைந்த ஒருவனிடம் சந்தேகம் கொள்ளுதலும் என்றும் நீங்காத துன்பத்தைத் தரும்' என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும் என்பது திருவள்ளுவரின் அறிவுரையாகும்.

**தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்**

**தீரா இடும்பைத் தரும் (குறள். 509)**

என்பது திருக்குறளாகும். முகமது கவானின் படுகொலை தெளிந்தான்கண் கொண்ட ஐயுறவாகும்.

விஜயநகரப் பேரரசின் வரலாற்றிலிருந்து இதற்கு நாம்சான்றுகள் சில காட்ட முடியும். கிருஷ்ண தேவராயர் மாபெரும் வீரர்; சிறந்ததொரு படைத்தலைவர்; எண்ணியதை எண்ணியாங்கு செய்து முடிக்கும் திண்ணிய வீர உள்ளம் படைத்த செயல் வீரர் குடிமக்களின் நலன் கருதி நாடாண்ட நல்லாட்சியாளர்; அறநெறி பிறழாது ஆட்சி புரிந்த அறவோர்! இறைவனை இடையறாது போற்றி வணங்கிய இறையருளாளர், கலையுள்ளங்கொண்ட கலைஞர், சூடிக் கொடுத்த சுடர்க் கொடியை 'ஆமுக்தமால்யதா' எனும் காப்பியத்தில் போற்றிப் பாடிய பாவலர். இவ்வாறு பாவலரும் காவலருமாக விளங்கிய பேரரசர் கிருஷ்ணதேவராயரும் இத்தவற்றைச் செய்தார். நன்றாகத் தம்முடைய நலத்தை

நாடுபவன் என்று அவர், தம் முதலமைச்சர் சாளுவதிம்மராசரை நினைத்திருந்தார். ஆனால், எதிர்பாராத நிகழ்ச்சிகள் சிலவற்றின் காரணமாகப் பேரரசருக்குத் தம்முடைய முதல்அமைச்சரின் மீது ஐயுறவு உண்டாயிற்று. அதன் விளைவாக இந்திய வரலாற்றின் பொன்னேடு ஒன்றில் இரத்தக்கறை படிந்தது.

கிருஷ்ணதேவராயரின் மகன் திருமலதேவ மகாராயன் அரசுக் கட்டிலேற்றப்பட்ட எட்டு மாதங்களுக்குள் நோய் வாய்ப்பட்டு இறந்துவிட்டான். புத்திர சோகத்தில் மூழ்கிய பேரரசருக்குத் தம் மகன் நஞ்சு வைத்துக் கொல்லப்பட்டான் என்ற செய்தி எட்டியது. அதனால் அவர் மனம் உடைந்தார். தம்முடைய மாண்புமிக்க முதல் அமைச்சர் சாளுவதிம்மராசருடைய மகனான திம்மதண்ட நாயகனே அக்கொடுஞ் செயலைச் செய்ததாக அவர் கேள்விப்பட்டார். உடனே முதலமைச்சரையும் அவருடைய மகனையும் அமைச்சரின் தம்பியான சாளுவகுண்டராஜனையும் அவர் சிறைப்படுத்தினார். மூன்றாண்டுகள் அவர்கள் சிறையில் அடைபட்டுக் கிடந்தனர். மூன்றாம் ஆண்டின் இறுதியில் திம்மதண்ட நாயகன் தப்பியோடி அரசுக்கு எதிராகக் கலகம் செய்தான். பல போர்களுக்குப் பிறகு அவனைத் தோற்கடித்துக் கைதியாகக் கொண்டு வந்தனர். உடனே அவனையும் அவன் தந்தையையும், சிறிய தந்தையையும் குருடர்களாக்கி மீண்டும் சிறையில் கிருஷ்ணதேவராயர் அடைத்தார். மாபெருந் தவற்றைச் செய்து பழியைத் தேடிக் கொண்டார்.

### வலிமைமிகு மைய அரசு

ஒரு பேரரசினைக் கட்டிக் காப்பது என்பது எளிய செயலன்று. அதனுடைய உயிர்நாடியாக இருப்பது மைய அரசு. மைய அரசின் தலைவனாக இருக்கின்ற பேரரசன் ஆற்றலும் அறிவுத்திறனும் பெற்றவனாக மட்டும் இருந்தால் போதாது. கவர்ச்சித் திறன்மிக்க ஆளுமையுடையவனாகவும் இருக்க வேண்டும். அப்பொழுதுதான், மாநில ஆளுநர்கள் அவனுடைய ஆணைக்குக் கீழ்ப்பட்டு ஏவல் புரிவர். ஆனால் மைய அரசின் தலைவன் ஆற்றலற்றவனாகவோ, ஏமாளியாகவோ. சிற்றின்ப பிரியனாகவோ இருப்பானானால், குறுநில மன்னர்கள் தங்கள் தனியுரிமையை நிலைநாட்டுவதன் மூலம் அரும்பாடுபட்டு நிறுவப்பட்ட பேரரசை மிக விரைவில் எளிதாகத்

தகர்த்தெறிந்துவிடுவர் என்பது விஜயநகர பாமனி அரசுகளின் வரலாறு விடுக்கும் மற்றோர் எச்சரிக்கையாகும்.

மத்திய அரசு வலுவுடையதாக இருக்க வேண்டும் என்றால், அது படையாற்றல் உடையதாக மட்டும் இருந்தால் போதாது. பாரபட்சமற்றதாக, நடுவுநிலைமை பிறழாததாகவும் இருக்க வேண்டும். யார் தவறு செய்தாலும் அவரைத்தண்டிக்க வேண்டும். இவ்வாறு பேரரசன் நடந்துகொள்ளத் தவறினால் நாட்டிலே 'பல்குழுவும்' பாழ் செய்யும் உட்பகையும்' தோன்றிவிடும். அதன் விளைவாகக் கலகங்களும் குழப்பங்களும் உண்டாகும். இறுதியில் மத்திய அரசு ஆற்றல் குலைந்து, மாநிலத் தலைவர்களின் உதவியை நாட நேரிடும். அயல்நாட்டவர்கள் எளிதில் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவர். இவ்வலநிலை உண்டாகமலிருக்க வேண்டுமானால், மத்திய அரசு எப்பொழுதும் வலுவுடையதாக இருக்க வேண்டும் என்பது வரலாறு தரும் படிப்பினையாகும்.

பேரரசர் கிருஷ்ணதேவராயருடைய ஆட்சியின் இறுதிப் பகுதியில், மதுரை மண்டலத்தின் தலைவனாக இருந்த நாகம நாயக்கன் தனியுரிமை அரசை நிறுவ, அவன் மகன் விசுவநாதனைக்கொண்டு தகப்பனை அடக்க வேண்டிய நெருக்கடி உண்டாயிற்று. சிறிது காலத்திற்கெல்லாம், மதுரையிலே நாயக்கருடைய அரச மரபு ஆற்றல்மிக்க தனியரசாக மாறியது. இராக்சசி – தங்கடிப் போருக்குச் சற்று முன்பே, மத்திய அரசின் ஆற்றல் குன்றியது. அந்நிலையில் பாளையப் பற்றுக்கள் எனப்பட்ட நிலமானியப் படை முறைத் தலைவர்கள் பேராற்றல் வாய்ந்தவர்களாக மாறினர். போட்டியும் பொறாமையும் தலைவிரித்தாடியது. எந்த இலட்சியத்திற்காக விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டதோ, அந்த இலட்சியத்தை அவர்கள் மறந்தனர். இவ்வாறு மத்திய அரசு தளர்ச்சியுற்றது. அதன் விளைவை கி.பி.1565இல் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க போர் உலகிற்குப் பறைசாற்றியது.

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு**

வெற்றித் திருநகரை வீழ்ச்சியுறச் செய்தாலொழிய தங்களுக்கு வாழ்வு கிடையாது என்பதை உணர்ந்த அகமது நகர், பீஜபுரி அரசுகள் திருமண உறவு கொண்டு ஒன்றுபட்டன. பின்னர், பீடார், பீரார், கோல்கொண்டா அரசுகளையும் உடன்

*சேர்த்துக்கொண்டன. இவ்வாறு முஸ்லிம் அரசுகள் விஜயநகர அரசை எதிர்க்க ஒரு கூட்டணியை அமைத்தன. சிதறிக் கிடந்த முஸ்லிம் அரசுகள் ஒன்றுபட்டமை, விஜயநகருக்குப் பெருந்தீங்காயிற்று.*

*அவ்வரசுகள் ஐந்தும் இராக்சசி – தங்கடி என்ற இடத்தில் விஜயநகரத்தை எதிர்த்துப் போரிட்டன. வீரம் பொருந்திய வெற்றித்திருநகரப் பேரரசு, 'வெற்றி வாய்ப்பை' இழந்தது. பகைவர்கள் கையில் சிக்கிச் சீரழிந்தது. இப்போரில் விஜயநகரப் பேரரசு வீழ்ச்சியுற்றது ஏன்?*

*முஸ்லிம்களிடத்துப் புதிதாக உண்டான ஒற்றுமை, அவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்தது. பல ஆண்டுகளாகப் பதவிப் போட்டியாலும் ஆதிக்க வெறியினாலும் ஒற்றுமை குலைந்திருந்த விஜயநகரப் பேரரசு, ஆற்றல் அனைத்தையும், ஒருங்கு திரட்டி ஒன்றுபட்ட முஸ்லிம் 'மூல பலத்தோடு' போரிட முடியாமல் போயிற்று. அதன் விளைவாக அப்பேரரசே அழிந்தது. இப்போர் நமக்கு,*

**'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே – நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே'**
**எனும் உண்மையை எச்சரிக்கை செய்கிறது.**

*விஜயநகரத்தின் வீழ்ச்சியால், இசுலாமியர்கள் மட்டும் தென்னாட்டில் ஆதிக்கம் செலுத்தவில்லை! வாணிகத்தின் பொருட்டு வந்த போர்ச்சுக்கீசியர்கள், டேனிஷ்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்ற வெளிநாட்டினரும் இந்நாட்டை அடிமை நாடாக்க அது வழி வகுத்தது என்பதை நாம் மறக்கலாகாது!*

*எனவே, நாம் கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடரக்ளாக வாழாது, நமது இந்திய வரலாற்றின் எச்சரிக்கைகளை உணர்ந்து பதவிப் போட்டிகளையும், போலி மானத்தையும், தன்னல வெறியையும் தவிர்த்து, 'நாட்டின் நலனே பெரிது' என்னும் விழுமிய நோக்கத்தோடு செயல்படுவோமானால், அந்தக் கொடிய வரலாற்று நிகழ்ச்சிகள் மீண்டும் வேறு வடிவில் திரும்ப நிகழாமல் நம்மால் தடுக்க இயலும்!*

# 8

# தமிழகத்தின் ஆண்டுக் கணக்கு முறை

பண்டைக்காலத்தில் நாகரிகத்தின் கொடுமுடியில் வீறுடன் விளங்கிய நாடுகள் பல. அவை ஒவ்வொன்றும் தம்முடைய நாட்டின் அமைப்பிற்கும், தட்பவெப்பநிலைக்குமேற்ப காலத்தைக் கணக்கிட்டு வந்துள்ளன. தமிழகமும் தொன்றுதொட்டு இன்றுவரையில் ஒரு வகையான காலக்கணக்கினைப் போற்றி வருகிறது. ஆனால் கடந்த காலங்கள் தோறும் அக்கணக்குமுறை மாற்றமுற்று வந்திருக்கிறது. அத்தகைய ஆண்டுக் கணக்கு முறை நாம் இவ்வாய்வுரையில் காண்போம்.

ஈராயிரம் அண்டுகளுக்கு முற்பட்ட காலத் தமிழகத்தில் – தொல்காப்பியர் காலத்தில் – காலத்தைப் பற்றிய அறிவு நம்முடைய முன்னோர்களிடத்துத் தெளிவாக இருந்து வந்தது அவர்கள் விண்ணில் ஒளிவீசும் நாளையும் கோளையும் அடிப்படையாகக்கொண்டே காலத்தையும், பருவ காலத்தையும் கணக்கிட்டனர்.

### அறுவகைப் பருவங்கள்

தொல்காப்பியர் 'ஓரையும் நாளும்'[1] என்று குறிப்பிடுவதனால் விண்ணில் கோள்களின் வீட்டுத்தொகுதியைப் (Signs of Zodiac) பண்டைத் தமிழர் வரையறுத்து இருந்தமை புலனாகின்றது. 'ஞாயிறு திங்கள்'[2] என்பதனால் ஏழு கோள்களைப் பற்றிய அறிவும், அவற்றால் பெயர் பெறும் ஏழு கிழமைகளையும் நெறிப்படுத்தி இருந்தமை தெரிகிறது. ஆனால், அக்காலத்தில் அவர்கள் ஓர் ஆண்டினை அறுவகைப் பருவங்களாகப் பகுத்திருந்தனர். இன்று நாம் பன்னிரண்டு திங்கள்களாகப் பாகுபடுத்தி உரைக்கும்முறை தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை அவர்,

---

1. தொல், சொல், கிளவி.44
2. தொல், சொல், 58

'காரும் மாலையும்' - தொல். பொருள்- அகத்.
'கூதிர் யாமம் - ' 7
'பனியெதிர் பருவம்' - ' 8
'நண்பகல் வெனி லொடு' - ' 10
'பின்பனி யென' - '12

என்று குறிப்பிட்டுள்ளார். இதனால், அக்காலத்தில் அறுவகைப் பருவங்களை ஓராண்டிற்குரிய உட்பிரிவுகளாகக் கொள்ளுவதே பெருவழக்கு என்பது புலனாகின்றது.

நாளடைவில் திங்களின் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்ட காலத்தைக் கணக்கிடும் முறை தோன்றியது. அப்பொழுது ' இரண்டு திங்களைக் கொண்டது ஒரு பருவம்' என்றுகருதும் வழக்கம் உண்டாயிற்று. இவ்வழக்கத்தைக் கருத்தில் கொண்டு நச்சினார்க்கினியர் என்ற உரையாசிரியர் தொல்காப்பியர் காலத்தில் ஆண்டின் முதல் மாதம் ஆவணியாக இருந்திருக்க வேண்டும் என்பர். இதற்கு ஆண்டின் முதற்பருவமாகக் கார் காலத்தைத் தொல்காப்பியர் கொண்டுள்ளதைச் சான்றாக அவர் காட்டுகிறார்.

'காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்குரிய சிங்க ஓரை முதலாகத் தண்மதிக்குரிய கற்கடக ஓரை ஈறாக வந்து முடியுந்துணை ஓர் யாண்டாமாகலின், அதனை இம்முறையானே அறுவகைப்படுத்தி இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினார்.' என்பது நச்சினார்க்கினியரின் கருத்தாகும்.[3]

'சிங்க ஓரை' என்பது ஆவணித் திங்களாகும். இதனை முதல் மாதமாகக் கொண்டு ஆண்டுக் கணக்கிடப்பெற்றது மிகத் தொன்மையான பழக்கம்' என்பர் வான நூல்வல்லார். ஆவணி மாதத்தை ஆண்டின் முதல் மாதமாகக் கொண்டு கணக்கிட்ட வழக்கம் இன்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலம் முதல் கி.மு.500 வரை வழக்கில் இருந்ததாகவும் சித்திரையை ஆண்டின் முதல் மாதமாகக் கொள்ளுவது கடந்த ஈராயிரத்தைந்நூறு ஆண்டுகளாகத்தான் வழக்கில் இருந்து வருவதாகவும் கருதுகின்றனர்.[4]

3. தொல்பொருள் அகத். 12, உரை.
4. தொல், எழுத்து, நச்சி.கா.சு.பிள்ளை முன்னுரை

**பன்னிரண்டு திங்கள்**

*சங்க இலக்கியக் காலத்தில் ஓர் ஆண்டினைப் பன்னிரண்டு மாதங்களாகப் பகுத்துணரும் பழக்கம் பெரு வழக்காயிற்று. எட்டுத்தொகை நூல்களுள் மூன்று மாதங்களின் பெயர்களே இடம் பெற்றுள்ளன. அவற்றுள்ளும் தை மாதத்தின் பெயர் பெரு வழக்காகப் பயின்று வந்துள்ளதை நாம் காணுகின்றோம்.*

**தை**

*இளையர் பதிப்பெயரும் அருஞ்சுரம் இறந்தோர் 'தைஇ' நின்ற தண்பெயல் கடைநாள் (அகம்.269) சற்றேறக்குறைய பத்து இடங்களில் இத்திங்களின் பெயர் சங்க இலக்கியத்துள் வழங்கப் பெற்றுள்ளமை, இத்திங்கள் பண்டைத் தமிழர் வாழ்வில் பெற்றிருந்த முக்கியத்துவத்தை நமக்கு அறிவிக்கிறது.*[5]

**மாசி**

*இதற்கு அடுத்த திங்களாகிய மாசியைப்பற்றிய குறிப்பு பதிற்றுப்பத்தில் மட்டும் காணப்பெறுகிறது.*

> ***பகனீடாகா திரவுப்பொழுது பெருகி***
>
> ***மாசி நின்ற மாகூர் திங்கள்***

**பங்குனி**

*பங்குனி மாதத்தைப் பற்றிய குறிப்பு புறநானூற்றில் இடம் பெற்றிருக்கிறது.*

> ***பங்குனியுயர் அழுவத்து (புறம்.229:5)***

**கார்த்திகை**

*கார்த்திகைத் திங்களில் சிறப்புமிக்க விழாவாகக் கொண்டாடப் பெறும் கார்த்திகை விளக்கீட்டைப் பற்றிய குறிப்புகள் அகநானூற்றில் காணப்படுகின்றன.*[6]

---

*5. ஐங்கு. 84: கலி. 59:13 குறுந் 59 13 நற்றி 22: 7, 80: பரி.11; 62, 91: 115, புறம் 70-6*

*6. பதிற் 59-2*

***வானம் உயர்ந்த வயங்கொளி மண்டிலம்***
***நெருப்புஎனச் சிவந்த உருப்பவிர் அம்கட்டு***
***இலையில மலர்ந்த முகையில் இலவம்***
***கலிகொள் ஆயம் மலிவுதொகுபு எடுத்த***
***அஞ்சுடர் நெடுங்கொடி பொற்பத் தோன்றி (அகம்.11)***

இப்பாட்டில் கார்த்திகை விளக்கீட்டு விழாவினை ஔவையார் குறிப்பிடுகிறார். ஆனால் 'கார்த்திகை' எனும் சொல்லாட்சி இடம் பெறவில்லை.[7]

***மழைகால் நீங்கிய மாக விசும்பில்***
***குறுமுயல் மறுநிறம் கிளர மதிநிறைந்து***
***அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்***
***மறுவிளக் குறுத்து மாலை தூக்கிப்***
***பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய***
***விழவுடன் அயர (அகம்.141)***

எனும் நக்கீரர் பாடலில், அறுமீன் எனும் சொல் கார்த்திகை நட்சத்திரத்தைச் சுட்டுகிறது மற்றும் கார்த்திகை விளக்கீட்டு விழாவும் விளக்கப்படுகிறது.

முதன்முதலாகப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான கார்நாற்பதில்,

***நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட***
***தலைநாள் விளக்கின் (கார்.நா. 26)***
***எனவும் களவழி நாற்பதில்,***

*கார்த்திகை சாற்றிற் கழிவிளக்கைப் போன்றனவே (களா.நா.17)*

எனவும் கார்த்திகை எனும் பெயர் இடம்பெற்றுள்ளது.

---

7.. காண்க. சிலப். 14-112.

**ஆடி**

*இந்நான்கு மாதங்களைத் தவிர, பிற மாதங்களின் பெயர்கள் சங்க இலக்கியத்துள் இடம்பெறவில்லை. தொல்காப்பியத்தில்,*

***திங்கள் முன்வரின் இக்கே சாரியை (தொல் எழுத்.248)***

*எனும் நூற்பா உள்ளது. இதற்கு, 'திங்களை (மாதத்தை) உணர நின்ற இகர ஈற்றுப் பெயர்களின் முன்னர்த் தொழில் நிலைக் கிளவி வரின், வருஞ்சாரியை இக்குச் சாரியையாம்' என விளக்கம் தந்து, 'ஆடி' எனும் மாதத்தோடு இக்குச் சாரியைசேர்த்துச் சான்று காட்டுவர்.[8]*

*ஆடிமாதம் எனும் வழக்குச சிலப்பதிகாரத்தில் சிறப்பிடம் பெற்றுள்ளது. மதுரை மாநகரம் எரியுண்டதைப் பற்றிக் கூறுகின்றபொழுது,*

***ஆடித் திங்கள்பேரிருள் பக்கத்து (சிலப் 24: 133)***

*என இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.*

**சித்திரை**

*தொல்காப்பியர்,*

*திங்களும் நாளும் முந்து கிளந்தன்ன (தொல்.எழுத்.286) எனும் நூற்பாவில் ஐகார ஈறுபெற்ற மாதப் பெயர் எவ்வாறு புணர்ச்சி இலக்கணம் பெறும் என்பதை எடுத்துரைக்கின்றார். ஐகார ஈறுபெற்ற மாதப்பெயருக்கு உரையாசிரியர்கள் சித்திரை மாதத்தையே எடுத்துக்காட்டாகக் காட்டுவர்.[9] இளங்கோவடிகள்,*

*சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென (சிலப்.5:64)*

*எனச் சித்திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்து உவா நாளைக் குறிப்பிடுகிறார். பழைய தமிழ் இலக்கியங்களுள் இந்த ஆறு மாதங்களைப் பற்றிய குறிப்புகளே காணப்படுகின்றன. தேவார காலத்தில்தான், மாதங்களின் பெயர்கள் பெரு வழக்குப் பெற்றுள்ளன. திருஞானசம்பந்தரது திருமயிலைத் திருப்பதிகத்தில் ஐந்து மாதங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.*

---

*8. தொல்.எழுத். 248, நச்சி உரை*

*9. தொல், எழுத்து. 286*

*ஐப்பசி யோண விழாவும் (தேவா 2: 47-2)*
*கார்த்திகை நாள்*
*விளக்கீடு காணாது போதியோ (தேவா 2: 47:-3)*
*தைப்பூசங் காணாதே போதியொ (தேவ 2:47-5)*
*மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்*
*கடலாட்டுக் கண்டான் கபாலீச் சரமமர்ந்தான்*
*(தேவா 2:47: 6)*
*பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்திரநாள்*
*ஒலிவிழாக் காணாதே போதியோ (தேவா 2:47:7)*

என்பன பல்லவர் காலத்தில் மாதங்களின் பெயர்கள் வழக்கிலிருந்தமைக்குப் போதிய சான்றாகும்.

மாதங்கள் எவ்வாறு பாகுபாடு செய்யப்பெற்றன? என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். மதியின் இயக்கத்தில் வளர்ச்சியையும் தேய்வையும் – அடிப்படையாகக் கொண்ட மதிப்பிடப் பெற்ற காலமே மாதமெனப் பெயர் பெற்றது என்பர். மாதத்தை 'திங்கள்' என்று குறிப்பிடுவதும் இதற்குச் சான்று பகருகிறது. இது பண்டைக்காலத்தில், தமிழர்கள் சந்திரனை நிலைக்களமாகக் கொண்டு போற்றிப் பின்பற்றிய காலமுறையாகும். இதை வடமொழியாளர் 'சாந்திரமானம்' என்பர். ஆனால், இன்று தமிழ்நாட்டில், தமிழரிடையே நடைமுறையில் இருந்து வருவது ஞாயிற்றை அடிப்படையாகக்கொண்ட சௌரமானம் என்ற கணக்கு முறையாகும். கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வராகமிகிரர் வகுத்துத் தந்த வானவியல் காலக் கணக்கு முறையைப் பின்பற்றி அமைக்கப்பெற்றதே 'சௌரமான முறை' என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

'இனி, இம்மாதங்களின் பெயர்கள் தமிழ்ப் பெயர்களா?' என்பதைப் பற்றி அறிஞர்களிடையே கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. 'தை' என்பது தமிழ்ப்பெயர். இதில் யாருக்கும் கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் பிற மாதங்களைப் பற்றி இவ்வாறு நாம் உறுதியாகக் கூறுவதற்கு இல்லை. டாக்டர் கால்டுவெல் மிகப் பழங்காலத்திலேயே வடமொழியில் வழங்கிய மாதங்களின் பெயர்கள் எளிதில் அடையாளங் காண

முடியாதபடி திரிக்கப் பெற்றுத் தமிழில் வழங்கப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறார். இக்கருத்தை அரண் செய்யும் வகையில் அவர்,

'ஆஷாடம்' என்ற வடமொழிப் பெயரே 'ஆடம்' என்று திரிந்து, அதன் பின்னர் 'ஆடி' எனத் திரிந்தது என்றும் பூர்வ பாத்ர பதா' என்ற வடமொழிப் பெயர் 'புரட்டாசி' என்றும், 'அஸ்வினி' என்ற பெயர் ' ஆனி' என்றும் 'சைத்திரா' என்ற பெயர் 'சித்திரை' என்றும் திரிந்து வழங்கலாயிற்று.

தமிழ் ஆராய்ச்சியின் முன்னோடிகளில் ஒருவரான மு.சி. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்கள் 'மாதப் பெயர்கள் அனைத்தும் தமிழ்ப்பெயர்களே' என்னும் கருத்தை ஐம்பதாண்டுகளுக்கு முன்னர் 'தமிழ் மாதங்களின் பெயர்க் காரணம்' என்ற கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். அக்கட்டுரையின் முக்கியமான பகுதிகள் சிலவற்றை நாம் இங்குக் காணலாம்.

'மழை நீங்கிப் பகலவன் வெளிப்பட உலகம் பிணி பீடை நீங்கித்தொழில் புரிய தணிக்கப்படுகின்றது. நடராஜப் பெருமான் 'தை' என்று நடனஞ்செய்வது சிருஷ்டித் தொழிலையே குறிக்கும். மகரத்தில் பரிதி 'பொருந்த' லானும் தை என்ற பெயர் மாதத்திற்கு ஆயிற்று. அன்றியும் செங்கதிரோன் தோற்றத்தால் உண்டாகும் உவகையை வெளியிடற் பொருட்டே வீடு வாசல்களனைத்தும் துப்புரவு செய்யப்பட்டுத் தமிழகங்களில் சூரியனுக்குப் பொங்கலிடப்பட்டு வருகின்றது. ஆதலால் 'சிறப்பு' என்ற பொருளும் 'தை என்ற மொழிக்கு வாய்ந்தது போலும்.[10]

மழை நீங்கினும் வானம் மேகத்தினால் மாசு படிந்திருப்பதனால், மாசி (இ-விகுதி) என்பது அடுத்த திங்களின் பெயராகும்.

மார்கழி மாதம்முதல் நான்கு மாதம் பனிக்காலம். அப்பனி கூறுபடும் மாதம் பங்குனியாகும். (பங்கு–கூறு-பகுதி). படிந்த மாசும், பெய்த பனியும் நீங்கவே வானம் சித்திரம் போன்று வெயிலொளிக்க அழகுறும்.

**வை(வைக்கோல், புல்) காசம், இ-வைகாசி**

10. M.R.Coldwell: A.Comparative Grammar of Dravidian Languages, P.85.

தை முல் ஆனி முடிய ஆறு மாதங்களும் தேவர்கட்குப் பகற்காலம். அப்பகல் முடிவிற்கு எல்லையாயுள்ள மாதமாதலின் அது ஆனி எனப் பெயர் பெற்றது (ஆனி-எல்லை) சூரியன் வடவெல்லையை அடைந்து நோக்குங்காலம் தஷிணாயணம் எனப்படும். வெங்கதிரொளியோன் திசை திரும்புங்கால் உலகம் ஆட்டமுறும். ஆட்டமுற்றுக் குலுங்கவும், காற்று உண்டாகிறது. 'ஆடி' என்பதற்குக் 'காற்று' என்ற பொருளுமுண்டு.

சூடு அதிகரித்துக் காற்றுக் கிளம்பலும், மேகங்கள், வெண்பசுக் கூட்டங்கள் (ஆவணி. ஆ, அணி) அணிவகுத்துச் செனறார் போன்றும், வரிசை வரிசையாக ஒன்றோடொன்று சேர்ந்து ஒழுங்குபட்ட கடைவீதி போன்றும் வானத்திற்றோன்றும் (ஆவணம் – கடைவீதி).

அடுத்து வரும் திங்கள் புரட்டாசியாம். வானில் வெளியிலும் மஞ்சும் புரண்டு புரண்டு மாறுபாட்டைந்து அற்ப மழை பெய்தனிமித்தம் புராட்டாசி எனப்படும்.

புரட்டு, புரண்டு, அசி (வான்), ஆசு (அற்பம்), இ. ஐப்பசி-ஐ பசி-நுறுகிய தீ, அல்லது பசி, சூரிய வெப்பங்குறைவதால் மக்களையுடற்றும் பசியும் நுணுகுவதாகும்.

கார்மயங்கத் தொடங்கவே கார்த்திகை (கார், திகையாயிற்று)

சூல்கொண்ட மேகங்கள் மயக்கமுறுவன போலும் மழை பொழிவதாலும் சூலியமக்கந் தெளிகின்றது. மாரி கழிவதால் மார்கழி எனப்படும்.

இவ்வாறு பன்னிரு திங்களின் பெயர்களும் தமிழ்ச் சொற்களாகவே காணப்பெறுகின்றன.'

இவ்விரு வகையான கருத்துகளையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கின்றபொழுது தை, கார்த்திகை போன்ற சில மாதங்களின் பெயர்கள் தமிழ்ப்பெயர்களாக இருப்பதும், சித்திரை, புராட்டாசி, ஐப்பசி – போன்ற மாதங்களின் பெயர்கள் வடமொழிப் பெயர்களின் திரிபாக உள்ளமையும் புலனாகின்றன. வரலாற்றுமுறை மொழியியல் இக்கருத்திற்கே அரணாக அமைகிறது. இதனால், அறுவகைப் பருவங்களைக்கொண்ட காலக்கணக்கே மிகவும் தொன்மையானது என்பதும், பன்னிரண்டு திங்களாகப் பகுத்துக் கூறும் வழக்கம் பிற்பட்டது என்பதும் தெளிவாகின்றது.

## அறுபது ஆண்டுகள்

இன்று தமிழ்நாட்டில் அறுபது ஆண்டுகளைக்கொண்ட ஒருவகைக் கணக்குமுறை நடைமுறையில் இருந்து வருகிறது. 'பிரபவ' முதலாக 'அக்ஷய' ஈறாக இவ்வறுபதாண்டு வட்டம் சுழன்று வருகிறது. கடந்த சில நூற்றாண்டுகளாக இவ்வாண்டுக் கணக்கு முறையே, தமிழ்நாட்டு ஆண்டுக் கணக்கு முறையாகப் போற்றப்பட்டு வருகிறது. இந்த அறுபது ஆண்டுகளின் பெயர்களுள் ஒன்றுகூடத் தமிழ்ப் பெயராக இல்லை. மற்றும், குறிப்பிட்ட ஓர் ஆண்டு ஒரு முறை குறிக்கப்பெற்றால், பின்னர் அறுபதாண்டுகள் கழித்து, அதே பெயருடைய ஆண்டு மீண்டும் வருகிறது. முந்நூறு ஆண்டுக் காலத்தில், குறிப்பிட்ட ஓராண்டு ஐந்துமுறை சுழன்றுவிடுகிறது. அந்நிலையில் 'அக்ஷய வருடத்தில் உண்டான கறுப்பு, என்பதைக் குறிப்பிட விரும்புகிறபொழுது, 'எந்த அக்ஷய வருடத்திய கறுப்பு?' என்பதை தெளிவாகக் குறிப்பிட இயலவில்லை. அதனால், 'விக்டோரியா பேரரசின் ஆட்சிக்காலத்திய அக்ஷய வருடத்தில் உண்டான கறுப்பு என்று இன்றும் நமது பெரியோர்கள் கூறுவதைக் கேட்கின்றோம். இக்குறைபாட்டால், இந்த அறுபதாண்டுக் கணக்குமுறை நீண்ட காலக் கணிப்பிற்குப் பயனற்றதாகி விடுகிறது.[11]

இத்தகைய காலக் கணக்குமுறை கி.பி.பதினைந்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தில் வழக்கில் இல்லை. குலசேகரன் என்ற பராக்கிரம பாண்டியனுடைய செங்கோட்டைச் சிவன் கோயில் கல்வெட்டில், யான் அறிந்தவரையில் முதன்முதலாக இந்த அறுபதாண்டுக் காலக் கணக்குமுறை இடம்பெற்றுள்ளது. இக்கல்வெட்டு பொறிக்கப்பெற்ற காலம் கி.பி.1545ஆம் ஆண்டாகும. இனி நாம் கல்வெட்டின் வாசகத்தைக் காண்போம்:

ஸ்ரீபெருமாள் குலசேகர தேவரான பராக்கிரம பாண்டியர் தேவற்கு யாண்டு சகாப்தம் 1467ல் மூன்றாவது 'விசுவாவசு' வருஷம் ஐப்பசி மாதம் முப்பதாந்தியதியும் பரபட்சத்து ஏகாதசி திதியும் சுக்ரவாரமும் சிம்மகரணமும் உத்திராடத்து நாள்...[12]

---

11. நச்சினார்க்கினியன் 'பத்திரிகை, திருச்சி, உருத்தோற்காரி, ஆண்டு, தை மாதம் இதழ், பக்.23-24

12. T.A.S. Vol.I, No.VI.PP.103-104

இக்கல்வெட்டில் 'விசுவாசு' ஆண்டுக் குறிப்பிடப்பெற்றுள்ளது. இந்த ஆண்டு அறுபதாண்டு வட்டத்தில் முப்பதொன்பதாவது ஆண்டாகும். இக் கல்வெட்டுத் தென்இந்தியாவில் விசயநகரப் பேரரசு சிறப்புற்று விளங்கிய காலத்தில் பொறிக்கப்பெற்றது. அப்பேரரசு காலத்திய கல்வெட்டுகளில் இந்த ஆண்டுக் கணக்கு முறை வழக்கத்தில் இருந்தமை புலனாகின்றது. எனவே. விசயநகப் பேரரசு தமிழகத்தில் கால்கொள்ளத் தொடங்கிய பிறகே, இந்த அறுபதாண்டுக் கணக்கு முறை தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்திருக்கலாமெனத் தோன்றுகிறது.

**தொண்ணூறு ஆண்டுக் காலவட்டம்**

இந்த அறுபதாண்டுக் கணக்கு முறைக்குமாறாகத் தொண்ணூறு ஆண்டுகளடங்கிய காலக் கணக்கு ஒன்று தென்னிந்தியாவில் வழக்கில் இருந்ததாக வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.[13] அது கோள்களின் சுழற்சி வட்டத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதாக அவர் கூறுகிறார். இதைப்பற்றி பிரின்சப் (Prinsep) என்பவர், 'இந்தியப் பழமைகள்' (Indian Antiquities) என்ற வரலாற்றுக் குறிப்பேட்டில்,

'90 ஆண்டுகள் அடங்கிய கிரகப் பரிவிருத்தி வட்டம். அது செவ்வாயின் 15 வலஞ்சுற்று மண்டலங்கள், புதனின் 22, வியாழனின் 11, வெள்ளியின் 5, சனியின் 29, ஞாயிற்றின் வலஞ்சுற்று வட்டங்கள் ஆகியவற்றின் நாள் எண்ணிக்கையின் பெருக்கமாக அமைந்தது என்று தெரியவருகிறது. இதன் தொடங்கு கூட்டம் கலியூழி 3078ஆம் ஆண்டு முடிவில், அதாவது கி.மு.24இல் நிகழ்ந்தது. ஆண்டுக்கணிப்பு ஞாயிற்றுமுறை அல்லது வான் முறைப்படியமைந்தது. எந்த மேலையாண்டுக்கும் எதிரான இவ்வாண்டு எளிதிலே 24-ஐக் கூட்டி 90ஆல் வகுத்துக் காட்ட முடியும். எடுத்துக்காட்டாக கி.பி.1830க்கு, 1830வுடன் 24 கூட்ட, 20 வட்டங்கள், 54 ஆண்டுகள் கிடைக்கும்.[14]

இத்தகைய காலக்கணக்கு முறையைப் பற்றி இன்று நாம் ஒன்றும் அறிந்துகொள்ள இயலவில்லை. இந்த அறுபதாண்டுக் காலக்கணக்கிற்கும், தொண்ணூறுஆண்டுக் கணக்கிற்கும்,

---

13. காண்க: வி.கனகசபைப் பிள்ளையின் 'ஆயிரத்தொண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம்', பக்.113-114

14. Prinsep's Indian Anti-uities, Ed P.Thomas, Vol.II P.158

*இடையே உள்ள தொடர்பு யாது என்பதை இன்று ஆராய்ந்து அறிய இயலவில்லை. அந்த அறுபதாண்டுக் காலவட்டத்தின் ஆண்டுத் தொடக்கம் சித்திரைத் திங்களின் தொடக்கத்தைக் கணக்கிடும் முறையிலே, ஒரு சிறுகுறை இருந்து வருகிறது. தென்னாட்டுப் பஞ்சாங்கக் கணிப்பாளர்கள் கி.பி.ஏழாம் நூற்றாண்டில், வராகமிகிரர் வகுத்துத் தந்த காலக்கணிப்பை அப்படியே இன்றும் பின்பற்றி வருகின்றனர். அதனால் 23 நாட்கள் நம்முடைய காலக்கணக்கில் பிற்பட்டதாகி இருக்கிறது.*

*காட்டாக நடப்பு ஆண்டு நள வருடம் சித்திரை முதல் நாளை எடுத்துக்கொள்ளுவோம். இந்தியாவின் மத்திய அரசினுடைய நாட்காட்டி அன்று சகவருஷம் 1899, சைத்ர மாதம் 24ஆம் நாள் என்று அறிவிக்கிறது. அதாவது நமக்குச் சித்திரை மாதம் முதல் நாள், மத்திய அரசிற்கு பெரும்பாலான வட இந்தியப் பஞ்சாங்கங்களின் கணக்குமுறைக்கு – சித்திரை 24ஆம் நாள் ஆக இருந்து வருகிறது. இதனால், நம்முடைய தமிழ் ஆண்டுக் கணிப்பு முறையில் பஞ்சாங்க முறையில் குறை இருப்பதை நாம் உணரலாம்.*

*இக்குறையை, ஐம்பதாண்டுகளுக்கு முன்பே, தேசியகவி சுப்பிரமணிய பாரதியார் சுட்டிக்காட்டியுளார்.*

*'பஞ்சாங்கம்' என்னும் கட்டுரையில்,*

*'வசந்த விஷுவானது மேஷ ராசியின் ஆரம்பத்தில் இருந்தபொழுது உத்தராயணம் தைமாதப் பிறப்பன்று தொடங்கியது. அதற்கு அப்பால் கணக்குத் தவறிப்போய்விட்டது. அயன விஷுக்களின் சலனத்தை அறியாமலோ, அறிந்திருந்தும் கவனியாமலோ ஸம்வத்சரத்தின் பரிமாணத்தில் 20½ நிமிஷம் பிந்தி வருகின்றன. 80 வருஷத்திற்கு ஒருநாள் பிந்திவிடும். மேற்படி நியமங்கள் ஏற்பட்டு இப்போது அநேக நூற்றாண்டுகளாகி விட்டன. அதனால் புண்ய காலங்கள் 20, 22 நாட்கள் பிந்திப் போய்விட்டன.[15] என்று பாரதியார் தெளிவுறுத்தியுள்ளார்.*

*எனவே, நாம் தமிழ் ஆண்டுக் கணிப்பில் திருத்தம் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம். அத்திருத்தம் சமயச் சார்பற்ற முறையில் அமைய வேண்டுமானால், அதற்குத் திருவள்ளுவராண்டுக் கணக்குமுறையைப் பொங்கல் திருநாளில் தொடங்குவதே சாலவும் பொருத்தமாகும்.*

---

*15. பாரதியார் கட்டுரைகள், தத்துவம், பக்.48*

# 9

# புதுக்கோட்டைத் தொண்டைமான்கள்

**த**மிழகத்தின் வரலாற்றில் அண்மைக்காலத்தில் சிறப்புற்று விளங்கியது. புதுக்கோட்டை அரசு அதன் வரலாறு தமிழக வரலாற்றின் சுருக்கப் பதிப்பாக அமைந்திருக்கிறது. அவ்வரசுக்குட்பட்ட பகுதியில் தொல்பழங்காலத்திய மனிதன் வாழ்ந்தமைக்குரிய அடிச்சுவடுகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர். தன்னகத்தில் கிடைத்துள்ள கற்கால, இரும்புக்கால நாகரிகச் சின்னங்களுள், காலத்தால் பழமையானவை என்று கருதப்படுவன புதுக்கோட்டைப் பகுதியில் காணப்படுவனவாகும். அவற்றைப் போன்றே, மிகப்பழைய கல்லெழுத்துகள் பல இவ்வரசின் ஆட்சிக்குட்பட்ட மலைகளில் தமிழின் தொன்மைக்குச் சான்று பகருகின்றன. மேலும், பழந்தமிழ் இலக்கியங்கள் இப்பகுதியிலிருந்த பட்டணங்களையும் ஊர்களையும் சிறப்பித்துப் பேசுகின்றன.

வரலாற்றுக்காலத்தின் தொடக்கத்திற்கு முன்பிருந்தே இவ்வரசின் பகுதிகள் சமயங்களின் வளர்ப்புப் பண்ணையாக இருந்து வந்திருக்கிறது. சமண சமயத் துறவிகள் கி.மு.மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே இங்குக் குடியேறியிருந்தனர். பின்னர் சைவ, வைணவ சமயங்களின் வளர்ச்சிக்குப் புதுகோட்டைப் பகுதியில் வாழ்ந்த மக்கள் பேருதவி புரிந்துள்ளனர்.

தமிழக வரலாற்றின் புகழ்மிக்க சோழ, பாண்டிய அரசுகளின் இடைப்படு நாடாக அமைந்த புதுக்கோட்டை, அவ்விரு அரசுகளின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் தன்னாலியன்ற உதவியை அளித்திருக்கிறது. பல்லவ அரச மரபின் தென் எல்லையில் நெடுங்காலம் சீரும் சிறப்புமுற்றிருந்த பகுதி புதுக்கோட்டை எனலாம். பண்டைத் தமிழகப் பேரரசுகளின் மறைவிற்குப் பின்னர் ஹொய்சளர்களும், விசயநகர மன்னர்களும், மதுரை நாயக்கர்களும் இப்பகுதியில் தங்கள் ஆட்சியைப் பரப்பினர். இவ்வாறு ஆறுவகையான அரசுகளின் ஆட்சிக்குட்பட்ட புதுக்கோட்டையில், அவ்வறுவகை அரச மரபினரும் சமுதாயத்தின்

இன அமைப்புகளையும், வாணிக நிலையங்களையும் போற்றி வளர்த்ததோடு அமையாது, எழில்மிகு சிற்பங்களுக்கு நிலைக்களனாகவுள்ள ஏற்றமிகு திருக்கோயில்களையும், பயன்மிகு குளங்களையும். கண்மாய்களையும், காவல்மிகு கோட்டைகளையும், கவர்ச்சிமிகு ஓவியங்களையும் படைத்தளித்தனர்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இப்பகுதியில்தான் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் 'புதுக்கோட்டை அரசு' எழுச்சியுற்றது. இந்தியா விடுதலை பெற்ற பொழுது, தமிழகத்தில் தலைசிறந்து விளங்கிய ஒரேவொரு தனியரசு (சமஸ்தானம்) புதுக்கோட்டைதான். எனவே, தமிழினத்தின் கருத்தைக் கவரும் தனிச்சிறப்புடையது புதுக்கோட்டை பண்டைத் தமிழகத்தின் மூவேந்தர்களுடைய அரசுகளின் பிற்காலச் சின்னமாக விளங்கியது புதுக்கோட்டைத் தனியரசு பழைய தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் போற்றிக் காத்த பெருமை புதுக்கோட்டை அரசிற்கும், அதை ஆண்ட தொண்டைமான்களுக்கும் உரியதாகும்.

**தொண்டைமான்களின் எழுச்சி**

'தோட்டி முதல் தொண்டைமான்' வரை என்பது தமிழ் மக்களின் இதழ்களிலெல்லாம் தவழ்ந்து விளையாடும் பழமொழியாகும். இதனால், மூவேந்தர்களுக்குப் பிறகு தமிழகத்தில் சிறப்புமிக்க மன்னர்களாகத் தொண்டைமான்கள் போற்றப்பட்டனர் என்பது புலனாகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தொண்டைமான்கள் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்புதான் முதன்முதலாக ஒரு தனியரசினை நிறுவினர்.

கி.பி.1650இல் புதுக்கோட்டைப் பகுதி மூன்று பேருடைய ஆட்சிக்குட்பட்டிருந்தது. புதுக்கோட்டை அரசிலுள்ள மருங்காபுரி, இலுப்பூர், குமாரவாடி முதலிய மேற்குப் பகுதிகள் மதுரை நாயக்கரின் ஆதிக்கத்திற்குட்பட்ட பாளையக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. ஆலங்குடி வட்டத்தின் கீழ்ப் பகுதி தஞ்சை நாயக்கருடையதாக இருந்தது. வெள்ளாற்றிற்குத் தெற்கில் திருமயம் வட்டத்தில் ஒரு பாதி இராமநாதபுரம் சேதுபதியைச் சேர்ந்திருந்தது. அவர்களுடைய பிரதிநிதியாகப் பல்லவராயர் புதுக்கோட்டை நகரைச் சுற்றியுள்ளநடுப்பகுதியை

ஆட்சி புரிந்தனர். கரம்பக் குடியைச் சுற்றியுள்ள பகுதியைத் தொண்டைமான்கள் ஆண்டனர். செங்கீரையைச் சுற்றியுள்ள ஒரு சிறு பகுதியைக் கண்டுவன் என்ற ஒருவன் தன்னுரிமையாகக் கொண்டிருந்தான். இவ்வாறு பல பிரிவுகளாகச் சிதறிக்கிடந்த நாட்டினை, 'ஆவுடைத் தொண்டைமான்' என்ற இயற்பெயரும், 'இரகுநாத இராயத் தொண்டைமான்' என்ற சிறப்புப் பெயரும் கொண்ட ஆற்றல்மிக்க தொண்டைமான், கி.பி.1686 அளவில் ஒன்றுபட்ட ஒரு தனியரசினை நிறுவினார். அவ்வரசு புதுக்கோட்டையை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டமையால், 'புதுக்கோட்டைத் தனியரசு' என்ற பெயர் பெற்றது. அவ்வரசினை ஆண்ட அரச மரபினர் தங்களைத் தொண்டைமான்கள் என்று கூறிக்கொண்டனர்.

**தொண்டைமான்கள் யார்?**

தொண்டைமான்கள் யார்? அவர்கள் எங்கிருந்து வந்தனர்? அவர்கள் ஏன் தொண்டைமான்கள் என்ற குடிப்பெயருடையவராக இருந்து வருகின்றனர்? என்னும் பல கேள்விகளுக்கு விடை காண்பதற்கு முன்னர், தொண்டைமான்களின் தோற்றம் பற்றிக் கூறும் தெலுங்கு மொழி நூல் ஒன்றின் கருத்தைக் காண்போம்.

**(அ) புராண மரபு**

கி.பி.1750ஆம் ஆண்டளவில் புதுக்கோட்டை அரசில் வாழ்ந்த வெங்கண்ணா என்ற அரசவைப் புலவர் 'தொண்டைமான் வமிசாவளி' என்றொரு நூலைத் தெலுங்கில் எழுதியுள்ளார். அதன் கருத்தினைக் காண்போம்.

தேவர்கோனாகிய இந்திரன் ஒருமுறை மண்ணுலகிற்கு வந்தபொழுது, ஒரு கன்னிப்பெண்ணைக்கண்டு மையல் கொண்டான். பின்னர், அப்பெண்ணை அவன் மணம் புரிந்து கொண்டான். அவளுக்குப் பல ஆண் மக்கள் பிறந்தனர். அவர்களுள் ஒருவன் அரசனாகச் சிறப்புற்றான். அவனுடைய கால்வழியில் பின்வரும் அரசர்கள் தோன்றினாராம்:

(1) திருமான்

(2) நமன்னன்

(3) பச்சை

*(4)* தண்டகன்

*(5)* நமனன்

*(6)* திருமான்

*(7)* நமனன்

*(8)* வச்சை

*(9)* நமனன்

*(10)* பச்சை

*(11)* கிண்கிணி

*(12)* தண்டகன்

*(13)* திருமான்

*(14)* பச்சை

*(15)* இராயத் தொண்டைமான்

இப்பட்டியல் தொண்டைமான் அரச மரபிற்குத் தொன்மைச் சிறப்பினைக் கற்பிக்க எழுதப் பெற்ற புராணக் கதையாகத் தோன்றுகிறது. இத்தகைய கதை ஒன்று சிறு மாற்றத்துடன் கள்ளர்களுடைய தோற்றம் பற்றிக் கூறப்படுவதுமுண்டு. 'இந்திரனுக்கும், அவனால் கற்பழிக்கப்பட்ட அகலிகைக்கும் பிறந்த பிள்ளையில் கால்வழியினரே கள்ளர் மரபினரின் மூதாதையர்' என்று ஒரு கதை வழங்குகிறது. இதைப் போன்ற தொண்டைமான்களின் தோற்றம் பற்றிய கதையும் பண்டைப் புராண மரபைச் சார்ந்த்தாகக் காணப்படுகிறது. எனவே, இரு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட 'தொண்டைமான் வமிசாவளி' கூறும் செய்திகள் வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படாமல் போகிறது.

இதே கருத்தை வெண்ணெய் முட்டுப்பட்டி என்னுமிடத்தில் காணப்படும் விசய இரகுநாதத் தொண்டைமான் கி.பி.1798இல் பொறித்த கல்வெட்டு ஒன்றும்[1] அவர் வழங்கிய செப்பேடுகள் மூன்றும் தொண்டைமான்கள் இந்திரனுடைய கால்வழியினர் என்றும், காசிய கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் என்றும்

1.Inscriptions of Pudukkotta State. No.763

குறிப்பிடுகின்றன. இவ்வரசர் கி.பி.1789 முதல் 1807 வரை ஆட்சி புரிந்தவராவார். இதனால் பதினெட்டாம் நூற்றாண்டில் இத்தகைய நம்பிக்கை அவ்வரச மரபினரிடத்து இருந்து வந்ததை நாம் அறிகிறோம்.

### (ஆ) திருமங்கை ஆழ்வாரின் வழித்தோன்றல்கள்

இப்புராண மரபு வரலாற்று ஆராய்ச்சிக்குப் பயன்படாமையால், நாம் தொண்டைமான்களின் தோற்றம் பற்றி அறிவதற்கு வேறு ஆதாரங்களை நாட வேண்டியிருக்கிறது. புதுக்கோட்டைப் பகுதியில் குளத்தூர் வட்டத்தில், வெள்ளை மண்டபம் என்ற இடத்தில் காணப்படும் கி.பி.1728இல் (புதுக்கோட்டை அரசு கல்வெட்டு எண் 879) பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று 'கள்ள திருமங்கை ஆழ்வார் மந்திரி வர்க்கத்தினுடைய வங்கிசமன நாட்டாரில்' தோன்றியவர்கள் தொண்டைமான்கள் என்று குறிப்பிடுகிறது. இதை ஆராய்ந்த கல்வெட்டுக் கலைஞர் 'அக்கல்வெட்டைப் பொறிக்க காரணமாக இருந்த குளத்தூர் இராமசாமித் தொண்டைமான், தம்முடைய குடும்பத்தைப் புகழ்மிக்க வைணவ சமய அருளாளரான திருமங்கை ஆழ்வாரின் குடும்பத்தோடு தொடர்புடையதாகக் கருதுகிறார்' என்று கூறியுள்ளார். ஆனால், கல்வெட்டின் வாசகம் 'தொண்டைமான் நாட்டார்கள், கள்ளர் திருமங்கை ஆழ்வாரின் மந்திரிகள் குடும்பத்தின் வழித் தோன்றல்கள்' என்னும் கருத்தையே தெரிவிக்கிறது. இக்கருத்தைச் சிற்சில மாற்றங்களோடு இராமசாமித் தொண்டைமானின் அம்மாசத்திரச் செப்பேடு உறுதிப்படுத்துகிறது. இச்செப்பேட்டின் மங்கல மொழிப் பகுதியில் 'திருமங்கை' ஆழ்வாரின் சீடர்களாக இருந்த எட்டு பேரின் வழியிலே வந்தவர்களே தொண்டைமான்கள்' என்று கூறப்பட்டுள்ளதை நாம் காணுகின்றோம்.

இவற்றால் தொண்டைமான்கள் கள்ளர் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பதையும், திருமங்கையாழ்வாரின் வழியிலோ, அவரைச் சார்ந்த அமைச்சர்கள் அல்லது அடியார்கள் வழியிலோ அவர்கள் வந்தவர்களாகலாம் என்ற முடிவிற்கு நாம் வரலாம்.

**(இ) கள்ளர்கள் யார்?**

கள்ளர்களின் தோற்றம் பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் சங்க காலத்தில் திருவேங்கட மலைப் (திருப்பதி) பகுதியில் சிறப்புற்று விளங்கிய 'கள்வர் கோமான் புல்லியோடும்', களப்பிரர் என்ற கொள்ளைக் கூட்டத்தினரோடும் அவர்களைத் தொடர்புபடுத்துகின்றனர்.

கள்ளர் எனப்படும் பழங்குடி மக்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் என்பது மேற்கண்ட கல்வெட்டுக் குறிப்புக்களால் பெறப்படுகின்ற செய்தியாகும். அவ்வாறானால் 'கள்ளர் என்பவர் யார்?' என்பதை நாம் ஆராய்ந்தறிய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

'கள்ளர்' என்ற பெயர் 'கள்வர்'[2] அல்லது கள்வர் என்ற பழைய தமிழ்ச் சொல்லின் திரிபு என்றும், அதைக் களபர் என்று கன்னடத்தில் வழங்கினர் என்றும் ஆராய்ச்சியாளர்கள் அறிவிக்கின்றனர். சங்க காலத்தில் வேங்கடமலைப் பகுதியை ஆண்ட ஒரு நிலப்பிரபுவைப் பற்றிச் சங்கத் தமிழ்ப் பாடல்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

**‘கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்**

**மழபுலம் வணக்கிய மாவண் புல்லி**

**விழவுடை விழுச்சீர் வேங்கடம்'**

***(அகம். 61:11:13)***

இப்பாடற் குறிப்பால், 'கள்வர்' என்பது குடிப்பெயர் என்பது நன்கு விளங்குகிறது. அக்குடிக்குத் தலைவனாகக் கோமானாகச் சிறப்புற்று விளங்கியவன் 'மாவண்புல்வி என்பதும், யாராலும் வெல்ல முடியாத மழவரை இப்புல்லி வென்றான் என்பதும், அவனுடைய தலைநகரம் வேங்கட மலையில் அமைந்திருந்தது என்பதும் இதனால் தெரிய வருகிறது. மற்றொரு பாடலில்' கள்வர் பெருமகன்... கெடா நல்லிசைத் தென்னன்[3] என்று

---

2. டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார் 'கள்வர்' என்பதே சரியான பாடம் என்பதைத் தக்க சான்றுகள் தந்து நிறுவியுள்ளார். பார்க்க: Anciant India and South Indian History and Coulture, PP. 483-48.

3. *அகம், 342.*

குறிப்பிடப்பட்டுள்ளமை இங்குக் கருதத்தக்கதாகும். இக்குறிப்பால் பாண்டியருக்கும் கள்வர் குடியினருக்கும் ஏதேனும் தொடர்பு அல்லது உறவுமுறை இருந்திருக்கலாமோ என்ற ஐயம் உண்டாகிறது. ஆனால், பாண்டியரின் வீழ்ச்சிக்குக் களப்பிரரே காரணம் என்று அவ்வக நானூற்றுப் பாடல் குறிப்பிடுவதால், 'தென்னன்' என்ற பெயர் 'கள்வர்' தலைவன் ஒருவன் 'தென்னன்' என்று அழைக்கப்பெற்றான் என்று கருதத் தோன்றுகிறது.

'கள்வர்' அல்லது களவர் என்பார் 'களம்' எனப்படும் போர்க்களத்துக்குரியவர் எனலாம். 'களபர்' என்ற கன்னட மொழியே தமிழில் பின்பற்றப்பட்டது என்பதற்கும் காரணம் உண்டு. பாண்டிய நாட்டின்மீது படையெடுத்தவர் கன்னடரே என்பது பெரிய புராணத்தில் உள்ள மூர்த்தி நாயனார் புராணத்தால் தெளிவாகத் தெரிகிறது. பல நாடுகளைப் படையெடுத்தழித்த களவர்கள், தமிழ்நாட்டிற்குள் புகுந்தது கன்னட நாட்டிலிருந்தேயாகும். அவர்களுடைய பேரரசனான 'அச்சுதன்' என்பான். தமிழ் இலக்கியத்தில் 'அச்சுதக் களப்பாளன் என்று கூறப்படுகிறான். களப்பாளர் குடியினரைப் பற்றி பிற்கால இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் சான்றுகள் மலிந்திருக்கின்றன. சைவ சித்தாந்தப் பேராசிரியரான மெய்கண்டார் என்பவர் களப்பாளர் குடியைச் சேர்ந்தவரே ஆவார். எனவே, இக் களப்பாளர்தாம் கள்பிரர் என்றும் களவர் என்றும் வழங்கப்பெற்றவர் என்ற சிக்கல் எழுகின்றது. களவர், களபர் என்பவையே இக்குடியினருக்கு முதலில் அமைந்த பெயர்கள் எனின், தெலுங்கு மொழியில் 'களம்' என்ற சொல் களமு களம்பு, களெபு என்று திரிந்து வழங்கும் வழக்குக் கொண்டு, நாட்டை ஆளுதல் என்ற பெயருடைய 'ஆள்' என்ற உறுப்பை இடையில் சேர்த்து இத்திரிசொற்களிலிருந்து களவாளர், களபாளர், களப்பாளர் என்ற சொல்வடிவங்களை நாம் பெறலாம் என்பர் பேராசிரியர் டாக்டர் துரை அரங்கனார்.[4]

---

*4. துரை அரங்கசாமி, மொ. அ.சங்க்காலச் சிறப்புப் பெயர்கள், பக்.354-5*

இக்களவர்கள், ஆந்திரப் பேரரசின் தெற்குப் பகுதியில் இருந்த சிற்றரசுகட்கும். காஞ்சியில் இருந்த சோழச் சிற்றரசுகட்கும் இடையில், அவர்களுக்குள் மோதல் ஏற்படாதபடி அடிதாங்கிகளாக இருந்து வாழ்ந்து வந்தனர். அங்கிருந்து எப்படியோ அவர்கள் குடிபெயர்க்கப்பட்டனர். அதனால்தான் 'களவர் பெயர்ச்சி' என்பது ஏற்பட்டது. அங்ஙனம் இடம் பெயர்ந்த அவர்கள் காஞ்சிக்கு வந்து சிறிது காலம் தங்கிபின் மலையமான் நாட்டிற்கும், அதை அடுத்துள்ள பகுதிகளுக்கும் சென்று, அதன்பின் சோழர் நாட்டில் புகுந்து, அங்குச் சிறிது காலம் தங்கி, இறுதியாகச் சோழர் நாட்டில் குடிபுகுந்தனர். காஞ்சியில் வடபகுதியிலிருந்து தெற்கே திருநெல்வேலி மாவட்டம் வரையுள்ள நாட்டுப் பகுதியில் இன்று கள்ளர் குடியினர் வாழ்ந்து வருதலை நாம் காணலாம். இந்த கள்வர் தமிழ்நாட்டில் குடிபுகுந்ததையே வடமொழி நூல்கள் களப்பிரர் இடையீட்டாட்சி' எனக் குறிக்கின்றன?[5]

இக்களவர் குடியினர் இன்றைய புதுக் கோட்டை வட்டாரத்தில் கள்ளர் என்ற குடிப்பெயருடைய மக்களாகப் பேரளவில் வாழ்ந்து வருகின்றனர்.[6] அவர்கள் குடியில் தோன்றியவர்களே, புதுக்கோட்டை மன்னர் மரபு என்ற செய்தியும் வழங்கி வருகிறது.

‘இப்பொழுது புதுக்கோட்டையை ஆட்சிபுரியும் அரசமரபினர், பல்லவராயரைப்போன்று தொண்டை மண்டலத்தில் இருந்து வந்து இங்குக் குடியேறியவராவர். இத்தொண்டைமான்கள் திருப்பதிக்கு அருகில் உள்ள மலைப்பகுதியில் வாழ்ந்தவர்களும் யானைகளைப் பிடிப்பதில் திறமை வாய்ந்தவர்களுமான 'கள்ளர்' என்ற பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுள் சிலர், காஞ்சியில் பல்லவருடைய யானைகளைப் பழக்கும் யானைப்பாகர்களாக வாழ்ந்தனர். அத்தகைய யானைப்பாகர்களுள் ஒருவர் தம் குடும்பத்தினருடன், காஞ்சியிலிருந்து தொண்டைமான் சக்ரவர்த்தி என்ற சிறப்புப் பெயர் கொண்ட வெங்கடாசலப் பல்லவராயர் என்பவரோடு தென்னாட்டிற்கு வந்து அம்புக்கோலில்

---

5. Aiyenger, S.K.Ancient India and South Indian History and culture, PP, 480-482.
6. வேங்கடசாமி நாட்டார், ந.மு.கள்ளர் சரித்திரம், பக்.24

(அழும்பில்) என்ற பகுதியில் குடியேறினர். அங்கு அவர்களுக்கு நிலமும், வேறு சில கிராமங்களும் மானியமாக்க் கொடுக்கப்பட்டன' என்று புதுக்கோட்டை கையேடு (Manual) குறிப்பிடுகிறது.

**(ஈ) தொண்டைமான் குடியின் பண்டை வரலாறு**

புதுக்கோட்டைத் தொண்டைமான்களின் மூதாதையர், தொண்டை நாட்டிலிருந்து சோழநாட்டிற்கு வந்து குடியேறியவர்கள் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம். 'தொண்டைமான்' என்ற குடிப்பெயரை இம் மன்னர்- மரபினர் சூடிக்கொண்டிருப்பதே, அவர்களுக்கும் தொண்டை மண்டலத்திற்கும் இடையே தொடர்பு இருந்து வருவதைக் காட்டுகிறது.

'தொண்டை மண்டலம்' என்பது தொண்டையருக்குரிய நாடு அல்லது தொண்டையரால் ஆளப்பெற்ற நாடு என்று பொருள்படும். தொண்டையர் என்ற சொல் சங்க இலக்கியப் பாடல்கள் பலவற்றில் காணப்படுகிறது.

**மண்ணெடுத் துண்ணும் அண்ணல் யானை**

**வண்டேர்த் தொண்டையர் வழையமல் அடுக்கத்து**

**(குறுந். 260.)**

**'வினை நவில் யானை விறறிபோர்த் தொண்டையர்**

**இனமழை தவழும் ஏற்றரு நெடுங்கோட்டு**

**ஓங்கு வெள்ளருவி வேங்கடத் தும்பர்க்**

**வடுகர் தேஎத்து.'**

**(அகம்.213)**

எனும் குறிப்புகளால், 'பகைவர் நாட்டு வளங்களை நுகரும் உயர்ந்த தோற்றமுடைய யானைகளையும் பெரிய தேர்களையுமுடைய தொண்டையரின் சுரபுன்னை மரங்கள் நிறைந்த மலைகள் உள்ள இடமே' தொண்டையர் உறைவிடம் என்பதும் அவர்கள் நன்கு பழகிய யானைகளைக்கொண்டு வெற்றி தரும் போர்களைச் செய்தவர்கள் என்பதும்,

அவர்களுக்குரியது வேங்கடமலை என்பதும் அதற்கு அப்பால் இருப்பது வடுகர் நாடு என்பதும் பெறப்படுகிறது. மேலும், வேங்கடமலையே தொண்டையரின் ஆட்சிக்குரிய நாட்டுப் பகுதியாக இருந்தது என்பதையும் நாம் அறிகிறோம்.

இத் 'தொண்டையர்' எனும்சொல் பன்மையில் அமைந்திருப்பதால், இது தனி மனிதன் ஒருவனுடைய பெயர் அன்று என்பதும், ஒரு குடும்பத்தையோ, குடியையோ அது குறிப்பதாகலாம் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். சங்கப் பாடல்களில் காணப்படும் வேறு பல குறிப்புக்களிருந்து திரையர் எனப்பட்டவரே தொண்டையர் என்பது தெளிவாகின்றது.[7]

**.................................சாரல்**

**ஈன்றுபசி களைஇய பைங்கண் யானை**

**முற்றா மூங்கில் முளைதரு பூட்டும்**

**வென்வேல்திரையன் வேங்கட நெடுவரை**

*(அகம்-85)*

இப்பாடலில் காட்டூர் கிழார் மகனார் கண்ணனார் 'வெற்றிவேல் திரையனுக்கு உரியது வேங்கட நெடுவரை. அம்மலையின் சாரலில் பைங்கண் யானை கன்று ஈன்று, மெலிந்த தன் பிடிக்கும் கன்றுக்கும் முற்றாத மூங்கில் முளையைக் கொண்டு வந்து ஊட்டும்' என்று குறிப்பிடுகிறார்.

இதனால் யானைகளுக்கும் திரையராகிய தொண்டையருக்கும், வேங்கட மலைக்கும் திரையராகிய தொண்டையருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தமை புலனாகின்றது. பெரும்பாணாற்றுப்படை என்ற பாடலிலிருந்து 'பல்வேல் திரையன்' (37) என்ற அரசனைப் பற்றி அறிகிறோம். அவன் காஞ்சியை ஆண்டான் என்பதை, 'கச்சியோனே கைவன் தோன்றல். (420) என்று பெரும்பாணாற்றுப்படை கூறுகிறது. அவனுடைய முழுப்பெயர் 'தொண்டைமான் இளந்திரையன்' என்பது இதற்குத் 'தொண்டையர்குடியில் தோன்றிய இளைய திரையன்' என்பது பொருள். இவனை இளந்திரையன் என்றால், வேங்கடமலைக் குரியவனை மூத்த திரையன் எனலாம்.

---

7. A Manual of Pudukkotta State, 1921 P, 28 '

இப்பாடலிலிருந்து திரையர் அல்லது தொண்டையர், ஒருதலைமுறைக்குள் வேங்கடமலையிலிருந்து காஞ்சிபுரத்திற்குக் குடியேறினர் என்று கூறவேண்டும்.

**செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்**

**பலபூங் கானல் பவத்திரி அனஇவள்**

**(அகம்.340)**

இங்குக் குறிப்பிடப்படும் 'பவத்திரி' என்பது தூயதமிழ்ச் சொல்லாகத் தெரியவில்லை. அஃது ஆந்திரச்சொல் ஒன்றன் திரிபாகவோ, பிராகிருதச் சொல்லொன்றன் திரிபாகவோ இருக்கலாம்.[8] இவ்வூர் ஆந்திரப் பிரதேசத்தில் நெல்லூர் மாவட்டத்தில், கூடூர் வட்டத்தில் ரெட்டிப்பள்ளம் (Reddi Palam) என்ற ஊருக்கு அருகில் இருப்பதாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.[9] எனவே, வேங்கடமலைக்கு வடக்கேயும் திரையர் ஆட்சி செய்தனர் என்பது அறியப்படுகிறது. இதனால். சங்ககாலத்தில் அருவாவடதலை நாடும், அருவா நாடும் தொண்டையருடைய ஆட்சிக்குட்பட்டிருந்ததைக் காணுகின்றோம். இப்பகுதியைத் தொண்டை மண்டலம் என்று வழங்குவது மரபாகும்.

சங்க காலத்தையடுத்துப் பல்லவர் (கி.பி.586-913) இப்பகுதியில் தங்கள் அரசை நிறுவினர். அவ்வரச மரபைச் சேர்ந்தவர்களையும் 'தொண்டையர்கோன்' என்று குறிப்பிடும் வழக்கம் அக்கால இலக்கியங்களால் அறியப்படுகிறது.

**மன்னவன் தொண்டையர்கோன்**

**வணங்கு நின்முடிமாலை வைரமேகன் (திவ்வி.பிர.1127)**

என்றும்,

**தென்னை தொண்டையர் கோன் செய்நன் மயிலைக்**

**திருவல்லிக் கேணி நின்றானை (திவ்வி. பிர.1077)**

என்றும் திருமங்கையாழ்வார் பல்லவ மன்னனைக் குறிப்பிடுகிறார்.

---

8. துரை அரங்கசாமி, மொ.அ.சங்காலச் சிறப்புப் பெயர்கள் பக்-344.
9. Mahalingam, T.V.Kachipuram in Early South Indian History. P.16.

**நகில்பொழில் தீம்பால் மண்சேறு படப்ப**

**மலர்தலை உலகம் ஓம்பும் என்ப**

**பாசிலைத் தொண்டைப் பல்லவன் ஆணையின்**

**வெட்சித் தாயத்து வில்லேர் உழவர்**

**பொருந்தா வடுகர் முனைச்சுரம்**

**கடந்து கொண்ட பல்ஆ னிரையே**[10]

என்னும் பழம் பாடலும் இதற்குச் சான்று பகருகிறது.

'நந்திக் கலம்பகம்' என்ற இலக்கியம் தன் பாட்டுடைத் தலைவனாகிய தெள்ளாறெறிந்த நந்திவர்மனை (கி.பி.846-69) 'தொண்டை வேந்தன்' என்று போற்றுகிறது.

தொண்டை வேந்தன் சோணாடன் (நந்திக். பாட்டு:9)

இவற்றால் தொண்டை நாட்டை ஆண்ட பல்லவ அரச மரபினரும் தொண்டையர்கோன் என்றும் தொண்டைவேந்தர் என்றும் கருதப்பெற்றமை தெளிவாகிறது.

சோழப் பேரரசன் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சிறப்புற்று விளங்கிய படைத்தலைவன் கருணாகரனுக்குத் தொண்டைமான் என்ற சிறப்புப் பெயர் வழங்கியமை இங்கு நினைவுகூர்தற்குரியதாகும். வடகலிங்கப் போரில் (கி.பி.1112) குலோத்துங்கனுக்கு மாபெரும் வெற்றியைத் தேடித்தந்த கருணாகரத் தொண்டைமான் பல்லவர் குலத்தில்தோன்றியவன் என்பதை,

**தொண்டை யர்க்கரசு முன்வ ருஞ்சுரவி**

**துங்க வெள்ளிடை யுயர்த்த கோள்**

**வண்டை யர்க்கரசு பல்ல வர்க்கரசு (கலிங். பரணி. 364)**

என்று கூறுவதனால் அறிகிறோம். இனி, அவன் தொண்டை நாட்டார்க்குத் தலைவன் என்பது,

---

10. தொல்காப்பியம், பொருளதிகாரம்-சூ.54. நச்சி-உரை மேற்கோள் பாடல்.

***தொண்டை மான்முதல் மந்திரப் பாரகர் (கலிங்.327)***

***அடைய அத்திசைப் பகைது கைப்பனென்று***

***ஆசை கொண்டடல் தொண்டைமான் (கலிங்.342)***

என்பதனால் தெரியவருகிறது.

இச்செய்தியைக் காஞ்சிமாநகரில் உள்ள 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோ இராசகேசரி வன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு நாற்பத்து மூன்று – ஐயங்கொண்டசோழ மண்டலத்து எயில் கோட்டத்து எயில் நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்க சோழ வளநாட்டுத் திருநறையூர் நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளாள கருணாகரனாரான தொண்டைமானார்தேவியார் அழகிய மணவாளணி மண்டையாழ்வார் வைத்த திருதுந்தா விளக்கு'[11] என்ற கல்வெட்டு அறிவிக்கிறது. இதிலிருந்து சோழ வளநாட்டைச் சேர்ந்த திருநறையூர் நாட்டில் உள்ளவண்டாழஞ்சேரி (இக்காலத்திய நாச்சியார் கோவிலுக்கும் குடவாசலுக்கும் இடையில் உள்ள வண் வாஞ்சேரி)க்குத் தலைவன் கருணாகரன் என்பதும், வேள், தொண்டைமான் என்னும் பட்டப்பெயர்கள் பெற்றவன் என்பதும் தெளிவாகின்றன. இவன் விக்கிரமசோழனுடைய ஆட்சிக்காலத்திலும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது விக்கிரமசோழன் உலாவினால் புலனாகின்றது. எனவே, இவன் கி.பி.1070க்கும் 1136க்கும் இடையே வாழ்ந்தவனாதல் வேண்டும்.

கருணாகரனுக்குத் தொண்டைமான் என்ற பட்டப் பெயர் வழங்கக் காரணம் என்ன? தொண்டைமான் என்பது தொண்டை நாட்டார்க்குத் தலைவன் என்ற பொருளடையதாகலின், அங்ஙனம் தலைவராயினார் பலர்க்கும் அப்பெயர் வழங்கக் கூடியதாகும். கருணாகரனுக்கு அச்சிறப்புப் பெயர். அவன் தொண்டை நாடாண்ட பல்லவருடைய மரபில் வந்தவன் என்பதனால் வழங்கியது எனலாம். இவனுடைய முன்னோர்கள் எக்காலத்தில் சோழநாட்டில் குடியேறினர் என்பதை நாம் தெளிவாக அறிதற்கு இல்லை. இவனுடைய வழியில் வந்தவர்களே பிற்காலத்திய புதுக்கோட்டைத் தொண்டைமான்களாக

11. தென்.இந்.கல்.தொகுதி 4, எண்.862

இருக்கலாம் என்று கருதுவதற்குரிய சான்றுகள் சிலவற்றைக் காண்போம்.

**2. பல்லவராயர்**

இன்றைய புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் காஞ்சியிலிருந்து வந்த பல்லவராயரோடு யானைப்பாகர்களாகத் தென்னாட்டிற்கு வந்தவர்கள் என்பதை முன்னர் கண்டோம். அவர்கள் கள்ளரின் வழிவந்த களப்பாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதும் நாம் முன்பு கண்ட செய்தியாகும்.

அக்கள்ளர்களுள் பெரும்பான்மையோர் திருச்சிக்கடுத்த 'அன்பில்' என்ற ஊரில்பத்தாம் நூற்றாண்டில் குடியேறியிருந்தனர். அங்கு அவர்கள் ஒரு 'தன்னரசு' நாட்டை நிறுவினர். சிறிது காலத்திற்குப் பிறகு அடையவளைஞ்சான். காளிங்கராயன் என்ற கள்ளர் இனத்தைச்சேர்ந்த இரு கிளையினர், புதிதாக வடக்கே இருந்து வந்து அவர்களுடன் சேர்ந்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு அங்கிருந்து புறப்பட்ட கள்ளர்களுள் ஒரு கிளையினர் புதுக்கோட்டைச் சீர்மையில் குற்றாண்டார் கோயில் பகுதியில் குடியேறினர். பின்னர் பையப் பைய அவர்கள் மேற்கிலும் தெற்கிலும் பரவினர். அங்கிருந்த அரையர் குடும்பங்களோடு அவர்கள் மண உறவுகள் கொண்டனர். அவற்றுள் 'நாராயணப் பேர் அரசு' என்ற குறுநில மன்னரின் வழிவந்தவர்கள் பிற்காலத்தில் படைத்தலைவர்களாகவும் தந்திரிமார்களாகவும் சிறந்து விளங்கினர். மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் திருக்கோவலூர் வட்டத்தில் சிறப்புற்று விளங்கியவனும், காடவராயர் மரபில் வந்தவனுமான கடலூர் அரச நாராயணன் ஆளப்பிறந்தான் வீரசேகரக் காடவராயன் என்பவனின் வழிவந்தவர்களாக இவர்கள் இருக்கலாம்.[12]

இக்காலத்தில் (பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில்) 'வழுத்தூரார்' எனப்பட்ட வைத்தூரிலிருந்து (பெருங்களூர்) பல்லவராயர் அதனைக் கோட்டையிலிருந்து கானாடு வரையிலும் குளவாய்ப்பட்டியிலிருந்து குடுமியாமலை வரையிலும் ஆண்டு வந்தனர். அவர்கள் வைத்தூரைவிட்டு கலசமங்கலம், சிங்கமங்கலம் என்ற இரண்டு சிறு கிராமங்களாக இருந்த

12. S.I.I.Vol.VII, No.941 Vol.VIII No.121.

இடத்தில் 'புதுக்கோட்டை' என்ற நகரை அமைத்துக் கொண்டு அங்குக் குடியேறினர். அவர்களுள் தலைசிறந்து விளங்கியவர் செவந்தெழுந்த பல்லவராயர் என்பவராவர். இவரே, அம்மரபில் கடைசி அரசர். அவர் கி.பி.1621 வரை அரசாண்டவர் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. இக் குறுநில மன்னரின் சிறப்புக்களைச் செவந்தெழுந்த பல்லவர் பிள்ளைத்தமிழ் 'செவந்தெழுந்த பல்லவன் உலா' என்ற தமிழ் இலக்கிங்கள் எடுத்துரைக்கின்றன.

### (4) தொண்டைமான்களின் தோற்றம்

அறந்தாங்கிப் பகுதியில் கி.பி.1426 முதல் 1569 வரை தொண்டைமான்கள் என்ற கள்ளர் கிளையினர் ஆட்சிபுரிந்தனர். அவர்கள் கருணாகரத் தொண்டைமான் மரபினர் என்ற குறிப்பு புதுக்கோட்டைச் சீமை குடிகளைப் பற்றிய தேக்காட்டூர் ஓலைச்சுவடி (பக்.21)யால் தெரியவருகிறது. இக்குடியில் பொன்னம்பலநாதத் தொண்டைமான் என்பவர் (கி.பி.1514-1569) சிறப்புற்று விளங்கினார். அஞ்சாநெஞ்சன் என்னும் பொருளில் 'அலைவில் அஞ்சாதான்' என்ற பட்டப்பெயருடையவராக இவர் விளங்கினார். இவருடைய மகனான வரவிநோதத் தொண்டைமான் என்பவரோடு இம்மரபு மறைந்து விட்டது.

பின்னர் கி.பி.1686 அளவில் அம்புக்கோவில் பகுதியில் அம்மரபினர் செல்வாக்குற்றனர். அப்பொழுது இரகுநாதராயத் தொண்டைமான் சிறப்புற்று விளங்கினார். அவர் பல்லவராயர் சிறப்புற்று விளங்கிய புதுக்கோட்டைப் பாளையத்தை, இராமநாதபுரத்தின் சேதுபதியான விஜய இரகுநாத கிழவன் சேதுபதி (கி.பி.1673-1710) என்பவரிடமிருந்து, தாம் அவரிடம் படைத்தலைவராகப் பணிபுரிந்தமைக்குக் கைம்மாறாகப் பெற்றார். இவ்வாறு புதுக்கோட்டைத் தொண்டைமான்களின் அரசு தமிழக வரலாற்றில், இருநூற்று என்பது ஆண்டுகளுக்கு முன்னர் எழுச்சியுற்றது.

புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசமரபு வேங்கடமலைப் பகுதியைச் சார்ந்த கள்வர் எனப்பட்ட பழங்குடி மக்களினத்தோடும், தொண்டை நாட்டினரோடும் நெருங்கிய தொடர்புடையதாக

இருந்திருக்க வேண்டும் என்பதும், பல்லவர் ஆட்சிக்காலத்தில் காஞ்சியில் சிறப்புற்று விளங்கிய பல்லவர் மரபைச் சேர்ந்தவர்களோடு ஒட்டும் உறவுமுடையதாய், அங்கிருந்து வந்த 'பல்லவரையர்' எனப்பட்ட பல்லவராயருடன் இன்றைய புதுக்கோட்டைச் சீமைக்குக் குடியேறியிருக்க வேண்டும் என்பதும், கலிங்கப்போரில் வெற்றிகண்ட கருணாகரத் தொண்டைமானுக்கும் புதுக்கோட்டை அரச மரபுக்கும் ஏதோ ஒருவகையான தொடர்பு இருந்துவந்ததை நினைவுகூர்வதில் அவ்வரச மரபினர் பெருமிதம் கொண்டனர் என்பதும் இதுவரை நாம் கண்ட வரலாற்றுச் செய்திகளால் அறியப்படும் உண்மைகளாகும்.

வருங்காலத்தில் இவ்வரச மரபினைப் பற்றிய ஆதாரங்களை நன்கு ஆராய்ந்து, முறையான நல்லதொரு வரலாற்றை எழுதினால் நாம் தமிழக வரலாற்றின் ஓர் அதிகாரத்தை ஒளிபெற்று விளங்கச் செய்யலாம்.

★★★

## 10

## நூலாசிரியரின் வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| தோற்றம் – மறைவு | - | *20.11.1931 – 05.05.1989* |
| பிறந்த ஊர் | - | கருங்குழி, மதுராந்தகம் வட்டம், செங்கற்பட்டு |
| கல்விப் பள்ளிக்கல்வி | - | சிந்தாதரிப்பேட்டை ஆண்கள் உயர்நிலைப்பள்ளி, சென்னை |
| புதுமுக வகுப்பு | - | விவேகானந்தா கல்லூரி, மயிலாப்பூர் |
| இளங்கலை | - | *1951-1954* |
| (ஹானர்ஸ்) தமிழ் | - | பச்சையப்பன் கல்லூரி |
| (பின்னர்) | - | சென்னைப்பல்கலைக்கழகம், முதல் வகுப்பு, முதல்நிலை |
| முதுகலை வரலாறு | - | சென்னைப் பல்கலைக்கழகம் தனிநிலைப்படிப்பு (*1956*) |
| முதுகலை இலக்கிய | - | "பழந்தமிழ் இலக்கியத்தில் |
| ஆராய்ச்சி | - | அறம்" (ஆங்கிலத்தில்) அண்ணாமலை பல்கலைக்கழம் (*1963*) |

மொழியில் பெருஞ்சான்று - *அண்ணாமலை பல்கலைக்கழகம் (1963)*

முனைவர்பட்டம் - பேராசிரியர் மு.வரததராசனாரின் படைப்பு இலக்கியம் ஓர் ஆய்வு, சென்னைப் *பல்கலைக்கழகம் 1979.*

## 11

## ஆசிரியர் பணி

*1. 6 ஆண்டுகள் பயிற்சி ஆசிரியர் அரசர் கல்லூரி, புதுக்கோட்டை 1954 -1959.*

*2. 7 ஆண்டுகள் துணைப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை – 1962 – 1968*

*3. 2 ஆண்டுகள் முதல்வர். மணலித் தமிழ்க்கல்லூரி சென்னை 1968 – 1969*

*4. 3 ஆண்டுகள் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவர் சென்னைப் பல்கலைக்கழகம், 1962-1972.*

*5. 19 ஆண்டுகள் இணைப்பேராசிரியர் மற்றும் இயக்குநர் (ஆராய்ச்சியியல்), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,*

*தெரிந்த பிறமொழிகள்: சமஸ்கிருதம், இந்தி, ஆங்கிலம்*

**விருதுகள்**

*1. சாகித்திய அகாதெமி விருது 1974*

*2. தி.ரு.வி.க. விருது 1985*

★★★

# 12

# ஆசிரியரின் நூல்கள்

*தமிழ் இணைய கல்விக்கழக மின்நூலகம் – தமிழினையம் – இணையதளத்தில்*

*https://www.tamil/digitallibrary.inஇல் புத்தகங்களை படிக்கலாம் - பதிவிறக்கம் செய்யலாம்*

**(அ) வரலாற்று நூல்கள்:**


1. சிந்துவெளி தரும் ஒளி, வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1959.
2. வரலாறும் - வாழ்வும் மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.
3. தமிழர் நாகரிக வரலாறு – முதல் பகுதி – “விடி வெள்ளி”, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1962.
4. முதலாம் இராசராசன், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1975.
5. இனமரபு வரலாறு (தொல் பழங்கால வரலாறு) தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1975.
6. வரலாற்று வஞ்சி, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1977.
7. இலங்கையில் தமிழ்ப் பண்பாடு, சேகர் பதிப்பகம், சென்னை, 1979.
8. சிந்துவெளி எழுத்து வடிவங்கள், மணியகம், சென்னை, 1981.
9. குறுநில மன்னர் வரலாறு – தமிழ்நாட்டு வரலாறு, சங்க காலம், பண்டைய அரசியல், தமிழ்நாட்டு வரலாற்றுக் குழு, சென்னை, 1983.
10. *Rajaraja, the Great, Madras publications,* 1984.

11. *தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1987.*

12. *Chieftains of the Sangam Age, 2001.*

13. *தமிழ்ப் பண்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 1994.*

14. *தமிழ்நாடு வரலாறு சங்கக் காலம் – வாழ்வியல் (நாகரிகமும். பண்பாடும்), தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1983.*

15. *History of Tamilnadu (A Birds Eye View Authors Guild of India, 1986.*

**(ஆ) ஓரங்க நாடகம்:**

16. *அடிமை விலங்கு (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1979.*

17. *பொற்கொடி (வரலாற்று நாடகம்), மணியகம், சென்னை, 1981*

**(இ) திறனாய்வும் ஆராய்ச்சியும்:**

18. *திருக்குறள் நீதி இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம், 1971 (சாகித்திய அகாதெமி பரிசினை 1974-இல் பெற்ற நூல்)*

19. *திருக்குறளில் கற்பனைத் திறனும் நாடகநலனும், சென்னைப் பல்கலைக்கழகம், 1973.*

20. *வாழ்வும் இலக்கியமும், மணியகம், சென்னை, 1978.*

21. *திருக்குறளும் இந்திய அறநூல்களும், மணியகம், சென்னை, 1979.*

22. *அறிஞர் அறவாழி, மணியகம், சென்னை, 1978.*

23. *சான்றோர் கண்ட திருவள்ளுவர், மணியகம், சென்னை, 1979.*

24. *ஒளிவிளக்கு (திருக்குறள் ஆய்வு) பாரி நிலையம், சென்னை, 1979.*

25. தமிழ் நிலவு, மணியகம், சென்னை, 1981.

26. மு.வரதராசனாரின் படைப்பு இலக்கியம், பாரி நிலையம், 1984.

27. தமிழ்க் கவிதையில் பாரதியின் தாக்கம், தமிழ்க் கடல் பதிப்பகம், சென்னை, 1984.

28. தெ.பொ.மீ. ஒரு தமிழ்க்கடல், சென்னை பல்கலைக்கழகம், 2001.

29. திரு.பூ.ஆலால சுந்தரஞ் செட்டியாரின் வாழ்க்கை வரலாறு, மணியகம், சென்னை, 1982.

**(ஈ) உரையும் பதிப்பும்:**

30. தனிப்பாடல் திரட்டு (உரையுடன்), மீனாட்சி பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

31. திருக்குறள் (கையடக்கப் பதிப்பு), வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1960.

32. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-3, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1977.

33. Historical heritage of the Tamils, Vol.I.international Institute of Tamil Studies, Madras, 1983.

34. தமிழ் இலக்கியக் கொள்கை, தொகுதி-1 (பதினெண்கீழ்கணக்கு), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

35. திறனாய்வு அணுகுமுறைகள் (க.த.திருநாவுக்கரசு மற்றும் கு.பகவதி), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

**(உ) தொகுப்பும் பதிப்பும்:**

36. தொல்காப்பிய நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1971.

37. திருக்குறள் நூலடைவு, சென்னைப் பல்கலைக்கழகம், 1972.

38. *Tributes and Translations of Tirukkural*, 1986.

39. *Historical Heritage of the Tamils Dr. S.V.Subramaniyan & Dr.K.D.Thiruavukkarasu IITS, Tharamani*, 1985


**(ஊ) தமிழாக்க நூல்கள்:**


40. ஜி.எம். டிரெவெலியனின் இங்கிலாந்தின் வரலாறு, தமிழ் வெளியீட்டுக் கழகம். சென்னை, 1965.

41. வின்செண்ட் ஸ்மித்தின் ஆக்ஸ்போர்டு இந்திய வரலாறு-3, தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை, 1967.

42. இலட்சுமிநாத பெஸ்பரூவா,சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

43. இராசாராம் மோகன்ராய், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.

44. ஜீவனானந்த தாஸ், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 1970.


**(எ) இலக்கணம்:**


45. எட்டாம் வகுப்பு தமிழ் இலக்கணம், பாடநூல் நிறுவனம், 1978.


★★★

# 13

# ஆசிரியரின் தமிழ்க் கட்டுரைகள்

**1950 - 51**

1. பனைமர நிழலில், விவேகா, சென்னை, 1950.
2. பசிப்பிணி, விவேகா, சென்னை, 1951.

**1952 - 53**

இலக்கியம் காட்டும் எழிலோவியம்:-

3. முல்லை சிரித்தது
4. பெண்ணா? பேயா?
5. மின்னிகரிடையாள்
6. கள்வன் மகன்
7. உயிரும் உடலும் கலைமன்றம், சென்னை, 1952-53.
8. ஆன்ம நேயம்
9. மருந்து
10. பெரும்பிணி
11. பொய்யும் மெய்யும்
12. வெண்ணிலவு

**1953 - 1954**

13. தமிழ்நெறி, விந்தியா, பூனா, 1953
14. வள்ளைப்பாட்டு, கலைக்கதிர், கோவை, 1954.
15. போரும் காதல் வாழ்வும், விந்தியா, 1954.
16. பாரதிகண்ட தமிழ்ச் சமுதாயம், விந்தியா, பம்பாய், 1954
17. ஓங்குக நல்லது எது? திருவள்ளுவர், திருச்சி, 1954.
18. வள்ளுவர் கண்ட மகளிர், திருவள்ளுவர், திருச்சி 1954
19. திருக்குறளின் ஆசிரியர் ஒருவரா? பலரா? திருவள்ளுவர், திருச்சி, 1954.

**1955 – 56**

20. தமிழக வரலாற்றில் சில புதிர்கள், குருகுலம், வாலாஜாபாத், 1955.
21. மெய்ப்பாடுகளும் ஒன்பான் சுவையும், குமரி மலர், சென்னை, 1955
22. புரட்சிக் கவிஞரின் "புரட்சிக் கவி" - ஒரு திறனாய்வு, குமரி மலர், 1956
23. தமிழ்த் தென்றல், விந்தியா, பூனா, 1956.
24. வீரகாப்பியமும் கலைக் காப்பியமும், கம்பன் மலர், காரைக்குடி, 1956

**1957**

25. முதியோர் கல்வியும் சோசலிச சமுதாயமும், ஆதாரக் கல்வி, 1957.
26. உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் யவனரா? (மூன்று கட்டுரைகள்), எழில், காரைக்குடி, 1957.
27. திருக்கோவையாரின் திறம், ஞானசம்பந்தம், தருமை, 1957.
28. தமிழ் நிலவு, தமிழ்நாடு, மதுரை, 1957.

**1958**

29. இசுலாமியர் வளர்த்த தமிழ், சீதக்காதி தமிழ்ச் சங்க மலர், கீழக்கரை, 1958.
30. தமிழகத்தில் ஒரு ஹோமர், கம்பன்மலர், காரைக்குடி, 1958.
31. ரோமானியர் கண்ட தமிழகம்,எழில், காரைக்குடி, 1958 (5 கட்டுரைகள்)
32. மருதணாரின் காப்பியநெறி, எழில், காரைக்குடி, 1958.

**1959**

33. புதுக்கோட்டை தொண்டைமான்களின் தோற்றம், அரசர் கல்லூரி மலர், புதுக்கோட்டை, 1959.

34. மனிதனும், மனச்சான்றும், எழில், காரைக்குடி, 1959

35. அறம்பிறழ்ந்த ஆட்சியாளன், கலைக்கதிர், கோவை, 1959

36. கிரேக்க நாகரிகமும் தமிழ் நாகரிகமும் (6 கட்டுரைகள்), கலைஞன் 1959.

37. தமிழகத்தின் மண்ணியல்அமைப்பு, அண்ணல் சுப்பிரமணியனார் மணி மலர், வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை 1959.

**1960**

38. மனிதன் - அன்றும் இன்றும், தருமச் சக்கரம், சென்னை, 1960.

39. சங்க காலத்தில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர், எழில், 1960.

40. சான்றோர் யார்?, நண்பன், திருச்சி, 1960.

41. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (10 கட்டுரைகள்) தமிழ்ச்செல்வி, புதுவை, 1960.

42. மனிதம், புதுமை, திருச்சி, 1960.

43. தமிழகத்தில் விடிவெள்ளி, குருகுலம், வாலாஜாபாத் 1960.

44. கவிஞனின் மூன்று குரல்கள், குருகுலம், வாலாஜாபாத் 1960.

**1961**

45. மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழும், காளிதாசரின் குமார சம்பவமும், குமர குருபரன், சீவைகுண்டம், 1961

46. வள்ளுவர் காட்டும் வாழ்க்கை நெறி, திருவள்ளுவர், திருச்சி, 1961.

47. தமிழகத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி (1960 வரை) தமிழ்ச்செல்வி, சிலம்பு 1, முத்து 8 முதல் 12 வரை 1961.

**1962**

48. பிளேட்டோ கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

49. அரிஸ்டாட்டில் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

50. கன்பூசியஸ் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை 1962.

51. தமிழன் கண்ட இலட்சிய மனிதன், முக்கனி, சென்னை, 1962.

**1963**

52. வள்ளலார் காட்டிய வழி, குருகுலம், வாலாஜாபாத், 1963.

53. இலக்கியமும் வாழ்க்கையும், முக்கனி, சென்னை 1963.

54. முருகனும், முத்தமிழும், முக்கனி, சென்னை, 1963.

55. அடிகளின் அறைகூவல், குருகுலம், வாலாஜாபாத், 1963.

56. பிள்ளைத்தமிழின் அமைப்பும் அழகும், குமரகுருபரன், சீவைகுண்டம், 1963.

57. தென்னிந்தியாவும் இலங்கையும், கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1963.

(நான்கு கட்டுரைகள்)

**1964**

58. நாகரிகமும் பண்பாடும் (5 கட்டுரைகள்), புதுமை, திருச்சி, 1964.

59. தென்னிந்தியாவும் இலங்கையும் (தொடர்ச்சி -5 கட்டுரைகள்), கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964.

60. உலக நாகரிகத்தில் தமிழ்ப்பண்பாடு, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1964. (3 கட்டுரைகள்)

61. பொய்தீர் ஒழுக்கநெறி, சென்னை மாநகரத் தமிழாசிரியர் கழக மாநாட்டு மலர், சென்னை, 1964.

## 1965

62. *தன்னுணர்ச்சிப் பாட்டு, அறுவடை, காஞ்சி, 1965.*

63. *நெடுநல்வாடை - திறனாய்வு: தமிழ்ச்செல்வி, புதுவை, 1965.*

64. *தாய்மொழியும் பிறமொழி ஆதிக்கமும், காஞ்சி, 1965.*

65. *சோழர் காலத்திய சமுதாயநிலை, கல்வெட்டுக் கருத்தரங்கக் கட்டுரைகள், சென்னை, 1965.*

## 1966

66. *திருநெறி, சுத்த சன்மார்க்கம், வேலூர், 1966.*

67. *மெய்யுணர்வுக்காதல் நெறி, சத்தியஞானசபை, நூற்றாண்டு விழா மலர், வேலூர், 1966.*

68. *இன்பம், கல்வி, சென்னை, 1966.*

69. *தமிழ்மொழியின் நெடுங்கணக்கு, நக்கீரர் கழக ஆண்டு மலர், சென்னை, 1966.*

70. *திருக்குறளின் மொழியியல்புகள், பச்சையப்பன் கல்லூரி 125ஆவது ஆண்டு விழா மலர், சென்னை, 1966.*

## 1967

71. *தமிழக வரலாற்றின் படிப்பினைகள், சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.*

    *சிந்தாதிரிப்பேட்டை, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி மலர், சென்னை, 1967.*

72. *பரணியின் பல்சுவை - இன்பச்சுவை, கலைஞன், திருச்சி, 1967.*

73. *மும்மணிகள், கலைஞன், திருச்சி, 1967.*

## 1968

74. *அச்சுப்புத்தகத்தின் தோற்றம், ஆரம்பக்கல்வி, சென்னை, 1968.*

75. இந்திய நாகரிகத்தில் தமிழ்ப் பண்பாட்டின் கூறுகள், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், தமிழக அரசின் வெளியீடு, சென்னை, 1968.

76. இளங்கோ கண்ட இயற்கை, தமிழகம், சென்னை, 1968.

77. வால்ட்விட்மனும் புதிய கவிமரபும், கவிதை, சென்னை, 1968.

78. இன்றைய தமிழ்க் கவிதைகளும், புதுமைப் போக்குகளும், கவிதை, சென்னை 1968.

79. கவிஞர் தமிழ் ஒளியின் புரட்சிப் படைப்பு, கவிதை, சென்னை, 1968.

80. ஆராய்ச்சி அறிஞர் சிவராசபிள்ளை, குமரிநாடு, நாகர்கோயில், 1968.

81. எல்லிஸ் கலைக்களஞ்சியம் தொகுதி 10, தமிழ்வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை, 1968

82. கல்வெட்டுகளால் அறியப்படும் சோழர் காலத்திய சமுதாய அமைப்பு, கல்வெட்டுக் கருத்தரங்கு, புக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், சென்னை - 1, 1968.

## 1969

83. உலகில் தோன்றிய முதல் நாவல், குமுதம், சென்னை, 1969.

84. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழர் நாகரிகம், மதுரை வரலாற்றுப் பேரவை மலர், மதுரை, 1969.

85. தமிழகத்தின் இசைக் கருவிகள்,குழந்தை வீணை காயத்ரி பாராட்டுவிழா மலர், சென்னை, 1969.

86. வரலாற்று வஞ்சி, மறைமலையடிகள் நினைவுமலர், நாகப்பட்டினம், 1969.

87. திருக்குறளின் தனிச்சிறப்புகள், Annals of Oriental Research சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1969.

88. நிலமும், நீரும், தமிழ் உறவு மகளிர், சென்னை, 1969.

89. திருக்குறளின் மாட்சி, மன்றம், சென்னை, 1969.

90. மன்னரை அணுகும் முறை, குறள் மலர், திருச்சி, 1969.
91. அவையும் அறிஞனும், குறள்மலர், திருச்சி, 1969.
92. திருவள்ளுவர்ஆண்டு ஈராயிரம், திருவள்ளுவர் சபை, சிந்தாரிப்பேட்டை, 1969.
93. வள்ளுவர் உலகிற்கு வழங்கும் செய்தி, திருவள்ளுவர் ஈராயிரமாண்டு விழா மலர், சென்னை, 1969.
94. திருக்குறளும் சங்க இலக்கியங்களும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1969 (மலர்)
95. குறளோவியம், திருவள்ளுவர் ஈராயிரம் ஆண்டுவிழா மலர், புதுக்கோட்டை, 1969.
96. அடிகள் கண்ட அம்பலவாணர், அருட்பெருஞ் சோதி, சென்னை, 1969.
97. சீவகசிந்தாமணி கு. மதுரை முதலியார் எழுபதாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர், மாருதி பிரஸ், இராயப்பேட்டை 1969.

## 1970

98. திருக்குறளும் சமண ஆகமங்களும், நல்லறம், சென்னை, 1970.
99. இந்திய நாடகக் கலையின் தந்தை டி.கே. சண்முகம் மணிவிழா மலர், சென்னை, 1970.
100. வள்ளுவர் காட்டும் பொருளியியல், இராசபாளையம் திருவள்ளுவர் மன்ற மலர் 1970.
101. சமணமும் தமிழும், தில்லித் தமிழ்ச் சங்க வெள்ளிவிழா மலர், தில்லி, 1970.
102. பண்டைத் தமிழ் மகளிரும் கச்சணிதலும், இரண்டாவது இந்தியப் பல்கலைக்கழக தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருச்சி 1970.
103. நான்கு நாணல்கள் ஒரு மதிப்பீடு - திறனாய்வு, தமிழுறவு மலர், சென்னை, 1970.
104. தமிழக மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை, நண்பர் வட்ட மலர், சென்னை, 1970.

105. நெஞ்சுக்கு நீதி (குறள் விளக்கம்), நல்லறம், சென்னை, 1970.
106. திறந்த புத்தகம், காந்தியடிகள் நூற்றாண்டு விழா மலர், சென்னை, 1970.
107. திருக்குறளுக்கு உரைகள் வேண்டுமா? (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.
108. காமத்துப்பாலின் கருத்தோவியங்கள், (Annals of Oriental Research) சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1970.
109. புண்ணும் வடுவும் (குறளாய்வு), ஆரம்பக் கல்வி, சென்னை, 1970.
110. சங்க இலக்கியங்களில் திருக்குறள், கழகப்பொன்விழா மலர், கழகம் சென்னை -1, 1970
111. நாவலர் நற்றமிழின் காவலர், நாவலர் நெடுஞ்செழியன் பொன்விழா மலர், சென்னை -7, 1970.

**1971**

112. பண்டைத் தமிழ்ச் சமுதாயமும், நல்லறமும், சென்னை 1971.
113. தமிழகத்தின் ஆண்டுக்கணக்குமுறை, மூன்றாவது இந்தியப் பல்லைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், அண்ணாமலை நகர், 1971.
114. வரலாற்றின் எச்சரிக்கை விசயநகர பாமினி அரசுகள், தமிழரசு, சென்னை, 1971.
115. தாய்மொழிவழிக் கல்வியே தாயகத்திற்குத் தேவை, முரசொலி, சென்னை, 08.01.1971
116. தமிழறிஞர் வி. கனகசபை பிள்ளை, கலைச்செல்வி, யாழ்ப்பாணம், 1971.
117. பழமொழிகள் உணர்த்தும் கடவுட்கொள்கை, சிதம்பரம் சிவகாமி அம்மை கும்பாபிஷேக மலர், சிதம்பரம், 1971.
118. பழமொழிகள் காட்டும் மகளிர் இயல்பு, கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், சென்னை, 1971.

**1972**

119. வள்ளுவர் கண்ட மனிதன் - 1, தமிழியல் (Jots) சென்னை, 1972.
120. திருக்குறளும் தம்மபதமும், தருமச்சக்கரம், சென்னை, 1972.
121. ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன், நான்காவது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், திருவனந்தபுரம், 1972.
122. முப்பாலுள் முதுமொழிகள், கி.ஆ.பெ.வி. மலர், கோவை, 1972.
123. இலக்கியம் உணர்த்தும் வரலாறு, தமிழுறவு, சென்னை, 1972.
124. அறங்கூறும் அவையம், தமிழ்ப்பணி, சென்னை 1972.
125. பழமொழிகளில் பழந்தொழில், நிலவளம், சென்னை, 1972.
126. பைந்தமிழ்ப் பாவலர்: கல்யாணம் மகளிர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு மலர், 1972.
127. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் கொள்கை, திருக்கும்பாபிஷேக மலர், சபாநாயகர் கோயில், சிதம்பரம் 1972.
128. தமிழர் திருநாள், சமயம், 1972.

**1973**

129. கற்பனைக்கு ஒரு கவிஞரேறு, தமிழ்ப்பணி, சென்னை, 1973.
130. மூவகை மனிதர், கனகசபைப்பிள்ளை மணிவிழாமலர், சிதம்பரம், 1973.
131. மனிதனாக வாழ வாழ்க்கைத் தத்துவம், சன்மார்க்க சங்கமலர், காஞ்சி, 1973.
132. வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவம், சன்மார்;க்க சங்கமலர், காஞ்சி 1973.
133. சீவகசிந்தாமணி ஒரு காப்பியமாகுமா? திருக்கோயில், சென்னை, 1973.

134. ஊன்றுகோல் (குறள் வழிக்கதை), கரும்பு, திருச்சி, 1973
135. அழுக்காறு வேண்டாம் (குறளமுதம்), சி.ப. மலர், சென்னை, 1973.
136. பெண்வழிச் சேறல், கல்யாணம் மகளிர் உயர் நிலைப்பள்ளி ஆண்டு மலர், சிந்தாதிரிப்பேட்டை, 1973.
137. வள்ளுவர் கண்ட மனிதன் -2, தமிழியல், சென்னை, 1973.
138. பாரதியாரின் இலக்கியக் கொள்கை, ஐந்தாவது இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் கருத்தரங்க மலர், சென்னை, 1973.
139. திராவிட இனத்தின் தோற்றம் (ஒரு மறு ஆய்வு), தமிழாய்வு தொகுதி 2, சென்னைப் பல்கலைக்கழகம் வெளியீடு - 1973.
140. பாரதியின் இலக்கியக் கொள்கை, ஆய்வுக்கோவை தொகுதி 5, சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைச் சார்பு வெளியீடு 1973.

## 1974

141. சும்மா, மலைச்சாரல், சோளிங்கபுரம், ஏப்ரல், 1974.
142. நூறாண்டு வாழ்க - திறணாய்வு, தமிழ்ப்பணி, 1974.
143. வாணிதாசரின் வளமார் தமிழ், தமிழ்ச்சாரல், 1974.
144. கணக்காயர், ஆசிரியர் நரசிம்மன் அவர்கள் நினைவுமலர், சென்னை, 1974.
145. தமிழ் வளர்த்த பெரியார்கள், மு.சு. பூரணலிங்கம் பிள்ளை, நூலகம், சென்னை, 1974.
146. தமிழ் வளர்த்த பெரியார்கள், திருமணம் செல்லக் கேசவராய முதலியார், நூலகம், சென்னை, 1974.
147. வரலாறும், பண்பாடும், பேராசிரியர் அ.மு.ப. கருத்தரங்க மலர், சென்னை, 1974.
148. தாயா? தமக்கையா? ஆறாவது கருத்தரங்கு ஆய்வுக் கோவை, புதுவை, 1974.
149. தமிழும் மலையாளமும், செந்தமிழ்ச் செல்வி, சென்னை, 1974.

## 1975

150. எழிலோவியம் காணவாரீர்.

151. தமிழிற்கு ஓர் அரன்

152. அறிஞர் அறவாழி

153. சிலப்பதிகாரத்தின் மாண்பு

154. இராசராசன் கொலைகாரனா? புலமை தொகுதி 1 பகுதி 1, சென்னை - 18, 1975.

## 1977

155. டாக்டர். மு.வ.வின் புதிய உலகம் திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை - 30, 1977.

## 1978

156. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 4, ஜனவரி 1978.

157. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 5, பிப்ரவரி 1978.

158. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 6, மார்ச் 1978.

159. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 7, ஏப்ரல்1978.

160. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 8, மே 1978

161. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 9, ஜூன் 1978

162. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 10, ஜூலை 1978

163. கந்தபுராணக் காப்பிய நலம் திருக்கோயில் மாலை 20 மணி 12, செப்டம்பர் 1978

164. கந்தபுராணம், தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 3, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை - 20, 1978.

*165. நூல் அறிமுகம் - காளிதாசன் உவமைகள், புலமை தொகுதி -4, பகுதி 3,4, சென்னை -18, 1978.*

*166. முக்காவல் நாடு, ஆய்வுக்கோவை தொகுதி 10, பகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு அண்ணாமலை நகர், 1978.*

**1979**

*167. கடவுள் நெறி, திருக்கோயில் மாலை 21, மணி 11, ஆகஸ்டு 1979.*

*168. கல்லாடம் தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 4, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை 20, 1979*

*169. திருவள்ளுவரும் சர்வக்ஞரும், திருவள்ளுவர் 2010-ஆம் ஆண்டு மலர் பெங்களூர்த் தமிழ்ச்சங்கம், பெங்களூர் 42, 1979.*

**1980**

*170. வாணிதாசன் கவிதைகளில் படிமக் காட்சி, ஆய்வுக்கோவை 12, தொகுதி 1, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற வெளியீடு, அண்ணாமலை நகர், 1980.*

*171. பண்பாடு சமஸ்கிருத மயமாக்கப்படுதல்*

*172. வரலாற்றியல், ஜைன இளைஞர் மன்றம், சென்னை - 17.*

*173. மறுமலர்ச்சி*

*174. சிலப்பதிகாரத்தால் அறியப்படும் அரசியல் உறவு.*

*175. தமிழ் உரைநடை*

*176. உவமை*

*177. பொற்காலம்*

*178. பாவியலில் கற்பனை*

*179. கம்பனுக்கும் ஒரு தாசன் விக்ரமன் பொன்விழா மலர் 17.03.1978.*

*180. கல்லணையைக் கட்டியது யார்?*

*181. பசி*

*182. அறிவு என்பது என்ன?*

183. மணிமேகலை காட்டும் கடவுள் நெறி
184. சிற்றிலக்கியங்கள் உணர்த்தும் இலக்கியக் கொள்கை
185. முடமோசியார் - யவனரா?
186. பழியும், பாவமும்
187. வினையின் பயன்
188. பழமொழிகள் உணர்த்தும் கடவுள் நெறி
189. இருட்டறை
190. மதுராந்தகம்
191. குறவஞ்சி
192. திருக்குறளை வேதமாகப் போற்றுவது பொருந்துமா?
193. வேளிர்
194. மனம்
195. திராவிட மொழிகளில் நீதி இலக்கியம்
196. தேசீயம்
197. வரலாற்றுக் காலம்
198. வள்ளலார் காட்டிய வழி
199. இலக்கியப் படிமங்களில் உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்
200. வேதங்கள்
201. வீரயுகப் பாடல்கள்

**1988**

202. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, நவம்பர் 1988
203. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, டிசம்பர் 1988
204. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஜனவரி 1989
205. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, பிப்ரவரி 1989
206. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும்

சப்தகிரி, திருப்பதி, மார்ச் 1989

207. தமிழ்நாட்டில் வைணவம் தோற்றமும், வளர்ச்சியும் சப்தகிரி, திருப்பதி, ஏப்ரல்1989

208. சீனாவில் சிறப்புற்ற காஞ்சி இளவரசர், தினமணி, 15.02.1989

209. மறுமலர்ச்சி இயக்கத்தின் வெற்றிமுரசு

210. பதினெண் கீழ்கணக்கின் கற்பனைவளம்

211. பகைத் திறந்தெரிதல்

212. நான் கண்ட அடியார்க்கு நல்லார் தி.கி.நாராயணசாமி நாயுடு 80 ஆண்டு நிறைவு விழா மலர் 30.10.1985

213. திருநெறி ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியம்

214. தமிழரின் கலைக் கோட்பாடு உ.த.ஆ. நிறுவனம் 09.02.1987

215. பழந்தமிழ்க்குடிகள், 'முதன்மொழி" உலகத் தமிழ்க் கழக மாதிகை சென்னை 16.

216. ஒன்றே தெய்வம் இராமலிங்க வள்ளலார் - வானொலி, ஆல் இண்டியா ரேடியோ, சென்னை-4, நாள் 07.11.71

217. A Tamil Savant From the City of Madras (08.01.1901 to 27.08.1988) (08.01.1901 வழ 27.08.1988)

218. மறுமலர்ச்சித் தமிழ் உரை நடை

219. சித்தர்களின் மெய்ஞ்ஞானம் - உ.த.ஆ. நிறுவனம் 08.06.1977 83-ஆம் ஆய்வுமன்ற கருத்தரங்கு

220. சான்றோர்கள் கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களும் மரபொழுக்கங்களும்

221. படிமங்கள்

❑

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

# குறிப்புகள்

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய இணையதளம்

இ-புத்தகத்தை வாசிக்க / பதிவிறக்கம் செய்ய

நூலாசிரியர், அவர் படைப்புகள் பற்றிய யூடியூப்

ISBN 978-93-48345-63-9